விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: பதினெட்டு — Valampurii

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2041 சித்திரை 29 புதன்கிழமை (12.05.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 144

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
ஆசியாக் கண்டத்தில் முதலாந்தர தொழிற்சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது ராம்கோ சிமெந்து

## ஆலோசனைக் குழுவை ஐ.நா. சபை நியமிக்காது

### ★ இலங்கை அரசு நம்பிக்கை ★

(கொழும்பு)

ஆலோசனை வழங்கும் நிபுணர்கள் குழுவை ஐ.நா. செயலாளர் பான் கீ மூன் ஒருபோதும் நியமிக்க மாட்டார் என ஐ.நாவுக்கான இலங்கைத் தூதுவர் பாலித ஹோகன்ன தெரிவித்துள்ளார்.

ஐ.நா. சபை போர்க் குற்றங்களுக்கான சாத்தியப்பாடு தொடர்பாக தனக்கு ஆலோசனை வழங்குவதற்கு நிபுணர்கள் குழு ஒன்றை அமைக்கப் போவதாக ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ மூன் தெரிவித்திருந்து இரு மாதங்களின் பின்னரும் இதுவரை நிபுணர் குழு அமைக்கப்படவில்லை.

இப்போது இலங்கை அரசாங்கம் தனது சொந்த பொறிமுறை தொடர்பாக அறிவித்திருக்கின்றது (18 ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கிலிருந்து இடம்பெயர்ந்துள்ள சிங்கள மக்கள் குடியமர்த்தப்படுவர்

### மீள்குடியேற்ற அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கிலிருந்து இடம்பெயர்ந்த சிங்களக் குடும்பங்களை மீளக் குடியேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என மீள்குடியேற்ற அமைச்சர் மில்ரோய் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

25 ஆண்டுகளுக்கு முன்னர் தமிழீழ விடுதலைப்புலிகளினால் 80 சிங்களக் குடும்பங்கள் விரட்டியடிக்கப்பட்டன. விரட்டியடிக்கப்பட்ட மக்கள் நீண்டகாலமாக மடு ரயில் நிலையத்திற்கு அருகாமையில் தங்கியுள்ளனர்.

1985 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 17 ஆம் திகதி குறித்த சிங்களக் குடும்பங்களைப் புலிகள் விரட்டியடித்ததாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (18 ஆம் பக்கம் பார்க்க)

# மாகாணங்களுக்கு அதிகாரம் வழங்கும் 13 ஆவது சட்டம் அமுலாக வேண்டும்



## இந்.வெளியுறவுச் செயலர் தெரிவிப்பு

(புதுடில்லி)

இலங்கையில் மாகாணங்களுக்கு கூடுதலான அதிகாரங்கள் வழங்கப்படக் கூடிய 13-வது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்துவது அவசியமானது என இந்திய வெளியுறவுச் செயலர் நிருபமா ராவ் தெரிவித்துள்ளார். இலங்கையில் அமைதி முயற்சிகளை முன்னெடுப்பது என்ற தலைப்பில் இடம்பெற்ற கருத்தரங்கில் உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். (18 ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.தே.க. எம்.பி. அரசுடன் இணைவு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அப்துல் காதர் ஆளும் கட்சியில் இணைந்து கொள்ளப் போவதாகத் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடன் ஏற்பட்ட முரண்பாடான நிலையையடுத்து இவ்வாறான முடிவை எடுத்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். தேர்தல் காலத்தில் கண்டி மாவட்டத்தில் வேட்பாளர் நியமனம் (18 ஆம் பக்கம் பார்க்க)

உள்ளே...

கொழும்பு கல்வி வலய பாடசாலைகளில் க.பொ.த. உயர்தரப்பரீட்சை எழுதும் மாணவர்களுக்கு கொழும்பு வணிகவள நிலையம் நடத்திய முன்னோடிப் பரீட்சை

புவியியல்- II

பாட மாதிரி வினாத்தாள்

## இந்தியாவின் நிபந்தனைகளை ஏற்க பிரபாகரனின் தாயார் மறுப்பு

### சிகிச்சை பெற யாழ்ப்பாணம் வருவார்!

(கொழும்பு)

விடுதலைப்புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரனின் தாயார் பார்வதி அம்மாள் இந்தியாவுக்குச் செல்ல வேண்டாம் என்று அவரின் குடும்பத்தினர் முடிபு செய்துள்ளனர்.

மருத்துவச் சிகிச்சைக்காக இந்தியாவுக்கு வருவதற்கு இந்திய அரசு விதித்த நிபந்தனைகள் அவரது குடும்பத்தினருக்கு ஏற்புடையதாகவில்லை என்பதால் அவர் இந்தியாவுக்குச் செல்ல வேண்டாம் என்று அவர்கள் முடிபெடுத்துள்ளதாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.

இந்திய அரசு, பார்வதி அம்மாள் இந்தியாவுக்கு வந்து சிகிச்சை பெற விரும்பினால், அரசு பாதுகாப்பில், அரச மருத்துவமனைகளில் மட்டுமே சிகிச்சை பெற அனுமதிக்கப்படுவார் என்று விதித்த நிபந்தனை அவர் தனியார் மருத்துவரிடம் சிகிச்சை பெற முடியாத நிலையை ஏற்படுத்தியதாலும் குடும்பத்தினர் தவிர வேறு யாரும் அவரைச் சந்திக்கக் கூடாது என்ற நிபந்தனை காரணமாகவும் இந்த முடிபைக் குடும்பத்தினர் எடுத்துள்ளனர் என்று சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.

தமிழகத்தில் ஒரு அரசியல் சர்ச்சைக்குள் பார்வதி அம்மாள் சிக்குவதை அவரது குடும்ப உறுப்பினர்கள் (18 ஆம் பக்கம் பார்க்க)

## மாநகர சபைப் பணியாளர்களின் போராட்டம் நிறைவுக்கு வந்தது

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபையின் பிரதி முதல்வர் துரைராஜா இளங்கோ (றீகன்) கைது செய்யப்பட்டமையைக் கண்டித்து யாழ்.மாநகர சபை பணியாளர்களினால் நேற்று மேற்கொள்ளப்பட்ட அடையாள வேலை நிறுத்தம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் தலையீட்டையடுத்து நேற்று மதியம் 12 மணியுடன் நிறைவுக்கு வந்தது.

பிரதி முதல்வர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டதை ஆட்சேபித்து நேற்றுக் காலை 6 மணிக்கு மாநகர சபைப் பணியாளர்கள் வளாக முன்றலில் சுலோக அட்டைகளை ஏந்தியவாறு வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இந் நிலையில் சம்பவ இடத்திற்குச் சென்ற அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பகிஷ்கரிப்பில் ஈடுபட்டவர்களுடன் கலந்துரையாடியதையடுத்துப் போராட்டம் நண்பகல் 12 மணிக்கு நிறை (18 ஆம் பக்கம் பார்க்க)

## பொன்சேகா ஆஜர் படுத்தப்படவுள்ள நீதிமன்ற வளாகத்தில் கடும் சோதனை

(கொழும்பு)

ஜனநாயக தேசியக் கூட்டமைப்பின் தலைவர் ஜெனரல் சரத் பொன்சேகா ஆஜராகவுள்ள புதுக்கடை மாஜிஸ்திரேட் நீதிமன்றில் நேற்று கடும் சோதனை நடத்தப்பட்டுள்ளது.

தற்போது இராணுவத் தடுப்புக் காவலில் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஜெனரல் சரத் பொன்சேகா இன்று நீதி மன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளார்.

முல்லைத்தீவு இறுதிக் கட்ட யுத்தத்தின் போது சரணடைய வந்த புலி உறுப்பினர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் நடத்தப்பட்டதாக சரத் பொன்சேகா ஊடகத்திற்கு அளித்த செவ்வி தொடர்பில் இன்று விசாரணை நடத்தப்படவுள்ளது.

குறித்த ஊடக செய்தி தொடர்பில் விசாரணை நடத்த இரண்டு தடவைகள் சந்தர்ப்பம் கேட்கப்பட்ட போதிலும் நீதிமன்றில் அதற்கு மறுப்பு தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (18 ஆம் பக்கம் பார்க்க)

## கிளி. ஆசிரியர்களுக்கான சம்பளக்கொடுப்பனவு

(கிளிநொச்சி)

இணைப்பு பெற்று யாழ். மாவட்டத்தில் கடமையாற்றும் கிளிநொச்சிவலயத்தைச் சார்ந்த ஆசிரியர்களுக்கான வைகாசிமாதச் சம்பளக்கொடுப்பனவு பட்டியலில் கையொப்பம் இடும்செயற்பாடு நாளையும் நாளை மறுதினமும் யாழ்.மேலதிக மாகாணக்கல்வி பணிமனையில் காலை 9 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை நடைபெறும்.

சம்பளப்பட்டியலில் கையொப்பமிடவரும் போது வைகாசி மாதத்திற்குரிய லீவு (B-100) விபரத்தினைக்கொண்டு வருமாறு கிளிநொச்சி வலயக்கல்வி திணைக்களக் கணக்காளர் அறிவித்துள்ளார். (ச)

## உதவி ஆசிரியர் சங்க கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

உதவி ஆசிரியர் சங்க கலந்துரையாடல் எதிர்வரும் 15ஆம் திகதி சனிக்கிழமை காலை 8 மணிக்கு பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறு கைத்தொழில் அமைச்சின் யாழ். அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

இவ் கலந்துரையாடலில் உதவி ஆசிரியர் களுக்கான சம்பள உயர்வு, பதவி உள்ளீர்ப்பு, ஆசிரியர் பயிற்சி தொடர்பாக கலந்துரையாட இருப்பதனால் சகலபிரிவு உதவி ஆசிரியர் களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு உதவி ஆசிரியர் சங்கம் அறிவித்துள்ளது. (ச)

# வீதியால் சென்ற யுவதியை தாக்கி கடத்த எடுத்த முயற்சி முறியடிப்பு

## புலோலியில் நேற்று பயங்கரம்

(கொழும்பு)

யுவதியை கடத்த எடுத்த முயற்சி முறியடிக்கப் பட்ட சம்பவம் ஒன்று நேற்று மாலை புலோலி பகுதியில் இடம் பெற்றுள்ளது.

வடமராட்சி தம்பசிட்டி பகுதியிலிருந்து சாரையடிப்பகுதியிலுள்ள உறவினர் வீட்டுக் குச் சென்ற 18 வயது நிரம்பிய யுவதி ஒருவரை கடத்த எடுத்த முயற்சியே முறியடிக்கப்பட்டுள்ளது.

பிரஸ்தாப யுவதி வீதியால் சென்று கொண்டிருந்தபோது வானொன்றில் வந்த சிலர் அவ் யுவதியை மறித்து மஞ்சள் நிறத்திலான தண்ணீரைப் பருக்கி அவரைத் தாக்கி கடத்த முயற்சித்துள்ளனர்.

இந் நிலையில் அப்பகுதிமக்கள் ஒன்று கூடியதையடுத்து கடத்தல்காரர்கள் தப்பிச் சென்றுள்ளனர்.

தாக்குதலுக்குள்ளான யுவதி மந்திகை ஆதார வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். (ச-9,35)

## மூலிகை விழிப்புணர்வு கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக சித்த மருத்துவத் துறையால் நடத்தப்படுகின்ற மூலிகை விழிப் புணர்வு கருத்தரங்குத் தொடரின் ஓரங்கமாக இன்று புதன்கிழமை காலை 10.30 இதிலிருந்து பிற்பகல் 1.00 மணி வரை யா/ வட இந்து மகளிர் கல்லூரி, பருத்தித்துறையில் நடைபெறவுள்ளதாக சித்த மருத்துவத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் டாக்டர் திருமதி விவியன் சத்தியசீலன் அறிவித்துள்ளார். (ச)

## மகோற்சவம்

(யாழ்ப்பாணம்)

மாதகல்-அரசடி அருள்மிகு சிறி சித்தி விநாயகர் தேவஸ்தான திவ்விய வருடாந்த விகிர்தி வருஷ மகோற்சவம் இன்று புதன் கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடி யேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 16 தினங்கள் நடைபெறும்.

இவ் உற்சவத்தில் 25ஆம் திகதி சப்பறமும் 26 ஆம் திகதி புதன் கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் வியாழக்கிழமை காலை 7 மணிக்கு சமுத்திர தீர்த்தம் இடம்பெற்றுமாலை 7 மணியளவில் கொடியிறக்கம் இடம் பெறும். (ச-3)

## உலக புத்தக தினமும் நூலக வாரமும்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச சபையின் கொக்குவில் பொது நூலகத்தினால் நடத்தப்படும் உலக புத்தக தினமும் நூலக வாரமும் நாளை மறு தினம் வெள்ளிக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு நூலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

நல்லூர் பிரதேச சபைச் செயலாளர் மே.சாந்தசீலன் தலைமையில் இடம்பெறும் இந் நிகழ்விற்கு யாழ். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி மதுமதி வசந்தகுமார் பிரதம விருந்தினராகவும் யாழ்.பல் கலைக்கழக வணிக பீட பேராசிரியர் க.தேவராஜா சிறப்பு விருந்தினராகவும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

'கொக்குவர்ச் சுட்டி-02' என்னும் சஞ்சிகை வெளியீட்டின் மதிப்பீட்டுரையினை வலம்புரியின் பிரதம ஆசிரியர் ந.விஜயசுந்தரம் நிகழ்த்தவுள்ளதுடன் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகள், விவாத அரங்கு என்பனவும் இடம்பெறவுள்ளது. (ச-30)


முந்துங்கள்... முந்துங்கள்...முந்துங்கள்...

வாடிக்கையாளர்களே!

எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை (16.05.2010)

அட்ஷய திருதியை தினத்தில் *1 பவுணுக்கு மேல் கொள்வனவு செய்பவர்களுக்கு பெறுமதியான இலட்சுமி தங்க நாணயம் இலவசம்.*

சுபநேரம் காலை 9.00-மாலை 3.00

பிரம்யா நகை மாடம்

யாழ்.வீதி, ஆலடிச் சந்தி, மானிப்பாய். (சி-248)

ஸ்ரீராம ஜெயம்

இந்தியாவின் எட்டயபுரத்தைச் சேர்ந்த புகழ் பெற்ற ஜோதிடர் S.சந்திரபோஸ் ஜாதகம், கைரேகை, எண் கணிதம், திருமணப் பொருத் தம் மிகத்துல்லியமாகப்பார்க்கப் படும். (16.05.2010 வரை மட்டுமே யாழில் இருப்பார்) T.P.:07787 52163

414, சன்ஜெயா உணவகம்,

மேல்மாடி அறை இல.02

ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (1363)

Computer Repair

உங்கள் கணனிகள் பழுதடைந்து விட்டனவா? உங்களது வீடுகளுக்கு உடனடியாகவே வந்து திருத்தித் தருகிறோம்.

(Computer Repair)

0771329513 (1383)


## "நீதியே, நீதி வழங்கு" என்ற 11.05.2010ஆம் திகதிய பத்திரிகைப் பிரசுரத்திற்கான விளக்கம்

11.05.2010 அன்று உள்ளூர் பத்திரிகைகளில் "நீதியே நீதி வழங்கு" என்ற தலைப்பில் யாழ்ப்பாண மாநகரசபையின் பெயரில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரப் பிரசுரம் ஆனது யாழ்ப்பாண மாநகர ஆணையாளர் அல்லது மாநகரசபையின் செயலாளரால் சமர்ப்பிக்கப்பட்டு பிரசுரிக்கப்படவில்லை என்பதை உறுதியாகத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

குறித்த விளம்பரம் மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதி மாநகர முதல்வரின் சேவை மீது பொது மக்களும் சபை உறுப்பினர்களும், சபையின் ஊழியர்களும் வைத்திருந்த அதீத நம்பிக்கை மற்றும் நல்லெண்ணம் ஆகியவற்றின் நிமித்தம் எழுந்த அவர்களுடைய உணர்வுகளைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் முதல்வரால் பிரசுரிக்கப்பட்டதே தவிர, நீதியை அவமதிப்பதாகவோ அல்லது நீதித்துறைக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தும் நோக்கம் கொண்டோ பிரசுரிக்கப்படவில்லை என்பதை உறுதிபடத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

1997இல் நீதித்துறையை மீளக்கட்டியெழுப்பும்போது அதற்குத் தடையாக இருந்த சக்தியை அதி உத்தம ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் இல்லாது ஒழிப்பதற்கு உறுதுணையாக இருந்தவர்கள் எக்காலத்திலும் நீதித்துறைக்கு இடையூறாக இருக்கமுடியாது என்பதையும் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

அண்மையில் மாட்சிமை தங்கிய பிரதம நீதியரசர் அவர்கள் யாழ். குடாநாட்டிற்கு விஜயம் செய்த போது நீதித்துறையைக் கட்டியெழுப்பவும், சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டவும், சகல மட்டத்திலும் உள்ள மக்கள் நீதியைப் பெற்றுக்கொள்ளக்கூடியதாகவும், நீதி நிர்வாகம் முன்னெடுத்துச் செல்லப்படவேண்டும் என வலியுறுத்தப்பட்டதற்கு அமைவாக குறித்த 11.05.2010 ஆம் திகதிய விளம்பரம் நல்லெண்ணத்துடனும் மக்களது எண்ணத்தினை வெளிப்படுத்தும் வகையிலும், யாழ். மாநகரசபையின் மக்களின் முதல்வர் என்ற தன்மையிலும் பிரசுரிக்கப்பட்டதாகும்.

**திருமதி யோ.பற்குணராஜா**
**மாநகர முதல்வர்,**
**யாழ்ப்பாணம்.**

**திரு.மு.செ.சரவணபவ,**
**மாநகர ஆணையாளர்,**
**யாழ்ப்பாணம்.**

(சி-247)

# மரண அறிவித்தல்

## செல்வி மகாலிங்கம் ஜெயகௌரி



காட்டடைப்பு வீதி காங்கேசன் துறையை நிரந்தர வதிவிடமாகவும் 186/26, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணத்தை தற்போதைய வதிவிடமாகவும் கொண்ட செல்வி மகாலிங்கம் ஜெயகௌரி 11.05.2010 செவ்வாய்க்கிழமை அதிகாலை இறைபதம் எய்திவிட்டார்.அன்னார் மகாலிங்கம் பரமேஸ்வரி தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரியும் காலம்சென்றவர்களான கிருஷ்ணபிள்ளை நாகமுத்து, மயில் வாகனம் முத்தம்மா தம்பதிகளின் அன்புப் பேர்த்தியும், சுபர்ணன் (ஜேர்மனி), ஜெயவாணி (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் திருமதி அரியரத்தினம் -சீதாவின் பெறாமகளும் ,மனோகரன் ஜெயக்குமாரி, சந்திரசேகரன் ஜெயராணி (பிரான்ஸ்), குணசேகரன், ரவிச்சந்திரன் ஜெயாவதி(ஜேர்மனி) ஆகிய தம்பதிகளின் பாசமிகு மருமகளும், கமலகாசன் (பிரான்ஸ்), ஜெனித்தா, சுயாத்தா (ஜேர்மனி), அமலராஜன் (நியூசிலாந்து) ஆகியோரின் ஒன்றுவிட்ட சகோதரியும், பரமநாதன் அன்புக்கரன் (ஜேர்மனி) திருமதி அஜந்தன் லாவண்யா, திருமதி கஷாகரன் லோஜினி (சுவிஸ்), பிரவீணா, அபிநயா, ஆதித்யன், நிவேதன், வர்சன், நிலானி, நிவேதா ஆகியோரின் பாசமிகு மைத்துனியும், அதிசயாவின் பெரிய தாயாரும், கம்சவர்த்தனி, கஜிஷா ஆகியோரின் அத்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் அன்னாரது இல்லத்தில் 12.05.2010 இன்று காலை 11.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன்மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**கி.மனோகரன்**
**(மாமனார்)**
செயலாளர் ,யாழ்.மாவட்ட கரபந்தாட்ட சங்கம்.

(1381)

# இன்று ஒரு தகவல்

## அற்புதங்களின் ஆதாரம்

ஒரு ஊரை. அண்மித்ததாக ஆறு ஓடிக் கொண்டிருந்தது. அந்த ஆற்றுக்கு அடுத்த கரையில் ஒரு காடு. அந்தக் காட்டுக்குள் உள்ள ஆச்சிரமத்தில் ஒரு குரு இருந்தார்.

அந்தக் கிராமத்தில் பால் விற்றுக் கொண்டிருந்தார் ஓர் அம்மா. ஆச்சிரமத்திலிருந்த குருவுக்குப் பால் கொண்டு போய்க் கொடுப்பது இவர்தான். வேளா வேளைக்குக் கொண்டு போய்க் கொடுத்து விடுவார்.

ஒரு சமயம் அந்த ஆற்றில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடிக் கொண்டிருந்தது. அதனால் படகுப் போக்குவரத்து தாமதப்பட்டது.

இந்த அம்மா சரியான நேரத்தில் ஆச்சிரமத்துக்குப் போய்ச் சேர முடியவில்லை.

அந்தக் குருவுக்கு கோபம் வந்து விட்டது.

''வேளாவேளைக்கு ஒழுங்காக வருவதில்லையே ஏன் இப்படி?'' என்று கோபித்துக் கொண்டார்.

"நான் என்ன பண்ண முடியும்? தினமும் பொழுது விடியுறதுக்கு முன்பே வீட்டை விட்டு கிளம்பி விடுகிறேன். இருந்தாலும் அந்த ஆற்றங்கரையில் வந்து காத்துக் கிடக்க வேண்டியிருக்கு! ஓடக்காரன் வந்து சேர்வதற்கு ரொம்ப நேரமாகி விடுகிறது'' என்றார் அந்த அம்மா. அந்தக் குரு இதைக் கேட்டதும் சிரித்தார்.

''என்னம்மா நீ இப்படிச் சொல்கிறாய்! பகவானுடைய நாமத்தை உச்சரித்துக் கொண்டே பலர் பிறவி என்னும் பெருங்கடலைத் தாண்டி விடுகிறார்கள். நீ என்னமோ இந்தச் சின்ன ஆற்றைக் கடப்பதற்கு ஓடக்காரனை நம்பிக் கொண்டிருக்கிறாயே!" என்றார்.

கள்ளங்கபடமற்ற அந்த அம்மா இந்தப் பெரியவர் சொன்னதை அப்படியே நம்பினார். ஆற்றைக் கடப்பதற்கு சுலபமான வழி அவருக்குத் தெரிந்து விட்டது.

அடுத்த நாளிலிருந்து அந்தக் குருவுக்கு வேளாவேளைக்கு பால் கிடைத்து வந்தது.

அவர் ஒருநாள் அந்த அம்மாவைப் பார்த்து,

''ஏம்மா? இப்பெல்லாம் நீ வேளைக்கு கரக்டா பால் கொண்டு வந்து கொடுத்து விடுகிறாயேஅது எப்படி" என்றார்.

"நீங்க தானே சுவாமி அதற்கு வழி சொல்லிக் கொடுத்தீங்க! என்றார்" அந்த அம்மா.

"என்ன வழி சொல்லிக் கொடுத்தேன்?" என்றார் அவர்.

''இப்பொழுதெல்லாம் நான் அந்த ஓடக்காரனுக்காகக் காத்துக் கொண்டிருப்பதில்லை. பகவானின் நாமத்தைச் சொல்லிக் கொண்டே ஆற்றைக் கடந்து விடுகிறேன்" என்றார்.

சுவாமி, வழி சொல்லிக் கொடுத்தாரே தவிர 'அது எப்படி ஆண்டவனின் பேரைச் சொன்னால் ஆற்றின் மீது நடக்க முடியும் என்ற சந்தேகம்' அவருக்கு.

''என்னை நேரில் அழைத்துக் கொண்டு போய்க் காட்டு" என்றார்.

''சரி. என்று சொல்லி, இரண்டு பேரும் அந்த ஆற்றங்கரைக்கு போய்ச் சேர்ந்தார்கள். ஆண்டவனின் பேரைச் சொல்லிக் கொண்டே அந்த அம்மா கிடுகிடுவென்று ஆற்றில் இறங்கி நடந்தார்.

கொஞ்சத் தூரம் போன பின் திரும்பி சுவாமியைப் பார்த்தார்.

இவர் காலை வைத்தால் அது தண்ணீருக்குள் போகுது, ர்ராம்ப சிரமப்பட்டுக் கொண்டிருந்தார்.

''என்ன இது? நானும் பகவான் நாமத்தைத் தான் சொல்கிறேன்... என்னால தண்ணி மேலே நடக்க முடியவில்லையே" என்றார்.

அதற்கு அந்த அம்மா...

"சுவாமி... என்ன இது? பகவானின் நாமத்தை வாயால சொல்றீங்க! ஆனால் அதேநேரம் உடுப்பு நனைந்து விடுமோ என்ற பயத்தில் அதைக் கையால் தூக்கி பிடித்துக் கொண்டிருக்கிறீர்களே! அப்படியானால் உங்களுக்கு பகவானிடம் பரிபூரண நம்பிக்கை இல்லையே! என்றார்." அதற்குப் பின்னர் தான் அந்த வெருளிப் பெண்மணி சொன்ன வார்த்தையின் தத்துவம் அந்த சுவாமிக்கு விளங்க ஆரம்பித்ததாம்.

தீவிரமான நம்பிக்கை– பரிபூரண சரணாகதி இவை தான் அற்புதச் செயல்களுக்கு ஆதாரம் என்பதை புரிந்து கொள்வதற்காகத் தான் இந்தக் கதையை ஸ்ரீ ராம கிருஷ்ணர் சொல்லியிருக்கிறார்.


இந்தக் கதையைக் கேட்ட இந்தக் காலத்து குடும்பஸ்தர் ஒருவர்...

"எங்க குடும்பத்தில் சண்டை சச்சரவே இதுவரைக்கும் வந்ததில்லை சேர். அதற்குக் காரணம் நான் கடைப்பிடிக்கிற இதே தத்துவம் தான்!" என்றார்.

"அது என்ன தத்துவம்?" என்றேன்.

"பரிபூரண சரணாகதி!" என்றார் அவர்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*







மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் வாழ்வாதார உதவித்திட்டத்தின் கீழ் உயர் பாதுகாப்பு வலயத்திலிருந்து இடம்பெயர்ந்து சங்கானை ,உடுவில், தெல்லிப்பளை ஆகிய பிரதேசங்களிலுள்ள நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள குடும்பங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட பயனாளிக்கான தையல் இயந்திரம் கையளிக்கும் நிகழ்வில் நிலையப் பணிப்பாளர் திருமதி சரோஜா சிவசந்திரன் பயனாளி ஒருவருக்கு தையல் இயந்திரம் வழங்குவதையும் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளையும் படங்களில் காணலாம்.

## கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ் முகாமைத்துவ சம்மேளனத்தினால் மக்கள் வங்கி அனுசரணையுடன்நடத்தப்படும்முகாமைத்துவத்தில் நேரிய சிந்தனைகள் என்னும் விடயம் பற்றிய கருத்தரங்கு நாளை வியாழக்கிழமை பிற்பகல் 5.15 முதல் 7 மணிவரை நல்லூர் யூரோவில் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கில் இலங்கை யோகா நிலையத்தின் தலைவர் பி.கே. ஜெகதீஸ் கருத்துரை வழங்கவுள்ளார். (4)

## சட்டத்தரணிகள் சங்க ஒன்று கூடல்

பகிஷ்கரிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள வழக்கறிஞர்களில் யாழ். உயர் நீதிமன்ற சட்டத் தரணிகள் சங்கம் இன்று நண்பகல் ஒன்று கூடவுள்ளது.

இவ் ஒன்று கூடலின் போது அடுத்த கட்ட நடவடிக்கைகள் தொடர்பாக ஆராயப்பட்டு மாலை முடிவுகள் வெளியிடப்படும் என தெரிவிக்கப்படுகின்றது. (2-7)

## இராசி பலன்

*12-05-2010*
*(சித்திரை 29, புதன்கிழமை)*
*திரியோதசி முற்பகல் 7.20 மணிவரை*
*அச்சுவினி பின்னிரவு 2.14 மணிவரை*
*இராகுகாலம் 11.54-1.24 மணிவரை*
*சுபநேரம் 4.24-5.54 மணிவரை*
*நவாலி சிந்தாமணி விநாயகர் தேர், புளியங்கூடல் இந்தன் முத்து விநாயகர் தேர், சுன்னாகம் கதிரமலைச்சிவன் தேர் , திருநெல்வேலி காயாரோகணேஸ்வரர் தேர்.*

| | |
|---|---|
| மேடம் | நண்பர்கள் சந்திப்பு, சிந்தனை மிகுதி, நல்ல முயற்சி, போசன சுகம். |
| இடபம் | காரிய அலைச்சல், தனவிரயம், உறவினர் சந்திப்பு, பிரயாணம். |
| மிதுனம் | பெருமையடைதல், தடைப்பட்ட காரியம் கைகூடும், பொருள் சேர்க்கை, கலந்துரையாடல். |
| கடகம் | சுபநிகழ்வு, நண்பர்கள் உதவி, செய்தொழில் விருத்தி, இனிய தகவல். |
| சிங்கம் | ஆரோக்கியக் குறைவு, பிரயாண சுகம். பிறருக்கு உதவுதல், முயற்சி தாமதம். |
| கன்னி | எதிர்பாராத அச்சம் , காரிய தடங்கல் , அபகீர்த்தி, போசன சுகம். |
| துலாம் | எடுத்த காரியம் கைகூடும், செல்வாக்கு, போசன சுகம், குடும்ப நன்மை. |
| விருச்சிகம் | சத்துரு ஜெயம், தொழில் முன்னேற்றம், மனமகிழ்ச்சி, பொருள் சேர்க்கை. |
| தனுசு | முயற்சி தாமதம், பயணம், புத்திரரால் கவலை, தனவிரயம். |
| மகரம் | பயந்த சுபாவம், உடல் நலக் குறைவு, மாதா சுகம், காரிய தாமதம். |
| கும்பம் | எதிர்பாராத நன்மை, அந்நியர் சந்திப்பு, பொருள் சேர்க்கை, செல்வாக்கு. |
| மீனம் | மனச் சஞ்சலம், வேலைச் சுமை, கடின வார்த்தை, தன விரயம். |

வளவன்

## க.பொ.த. உ/த மீள் திருத்தப்பட்ட விடைத்தாள்கள் பெறுபேறுகள் இவ்வாரத்துக்குள் வெளியிடப்படும்

### பரீட்சை ஆணையாளர் நாயகம் தெரிவிப்பு

(கொழும்பு)

க.பொ.த உயர்தரப்பரீட்சைக்கான மீள்திருத்தப்பட்ட விடைத்தாள்கள் அதனுடைய பெறுபேறுகள் இந்த வாரத்துக்குள் வெளியிடப்படும் என்று பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அனுரஎதிரிசிங்க தெரிவித்துள்ளார்.

பாடசாலைப்பரீட்சார்த்திகளின் பெறுபேறுகள் பாடசாலைகளுக்கும் வெளிவாரிப் பரீட்சார்த்திகள் விடைகள் உரியவர்களுக்கும் துரிதமாக அனுப்பி வைக்கப்படும். பெறு பேறுகளுக்கமைய திருத்தப்பட்ட புள்ளி விபரம் பரீட்சார்த்திகளுக்கு அறிவிக்கப்படும் என்றும் ஆணையாளர் மேலும் குறிப்பிட்டார்.

மீள்திருத்தப்பட்ட இப்பெறு பேறுகள் உள்ளிட்ட க.பொ.த உயர்தரப் பரீட்சைக்கான முழுமையான அட்டவணை இந்த வாரத்திற்குள் பல்கலைக்கழக மானிய ஆணைக் குழுவிற்கு அனுப்பிவைக்கப்படும். இதனை அடிப்படையாகக் கொண்டு பல்கலைக்கழக நுழைவுக்கான இசற் புள்ளிவிபரங் களை (Z-Score) பல்கலைக்கழக மானிய ஆணைக் குழு அறிவிக்கும். (4)

## அதிவேகமாக வாகனங்களை செலுத்தினால் சட்ட நடவடிக்கை

### பொலிஸ் அறிவிப்பு


அதி வேகமாக வாகனங்களைச் செலுத்தும் சாரதிகளுக்கு எதிராகப் பொலிஸார் சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளனர்.

வாகன விபத்துக்களைத் தடுக்கும் நோக்கிலும் போக்குவரத்து விதிகளைப் பேணும் வகையிலும் இந்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பொலிஸ் அதிகாரி பிரஷாந்த ஜயக்கொடி தெரிவித்தார்.

அத்துடன் வாகனங்களின் உட்பகுதியை மறைக்கும் வகையில் கறுப்பு வர்ண ஸ்டிக்கர்கள் ஒட்டப் படுவதைத் தடுக்கவும் நடவடிக்கை எடுக் கப் பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார். (2-4)

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 70 | 80 | 60 |
| உருளைக்கிழங்கு | 60 | 70 | 60 |
| பச்சைமிளகாய் | 80 | 90 | 70 |
| தக்காளி | 90 | 100 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 40 | 30 |
| கோவா | 50 | 60 | 40 |
| கரட் | 90 | 100 | 90 |
| பூசணி | 30 | 40 | 30 |
| புடோல் | 40 | 50 | 40 |
| வாழைக்காய் | 30 | 40 | 40 |
| சின்ன வெங்காயம் | 80 | 90 | 50 |
| பெரிய வெங்காயம் | 50 | 60 | 60 |
| பாகற்காய் | 100 | 120 | 70 |
| வெண்டிக்காய் | 50 | 60 | 30 |
| கரணைக் கிழங்கு | 25 | 40 | 50 |
| பயிற்றங்காய் | 30 | 40 | 70 |
| லீக்ஸ் | 80 | 100 | 90 |
| பீற்றூட் | 40 | 50 | 50 |
| கறிமிளகாய் | 60 | 70 | 80 |
| முருங்கைக்காய் | 160 | 180 | 180 |
| போஞ்சி | 150 | 160 | 120 |
| கத்தரிதம்புள்ள | 40 | 50 | 40 |
| கீரை – 1 பிடி | 30 | 35 | 25 |
| தேசிக்காய் | 60 | 70 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 25 | 30 | 35 |



கோப்பாய் பிரதேச செயலகப்பிரிவின் விளையாட்டு விழா அண்மையில் நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் கோப்பாய் பிரதேச செயலர் சி.ஏ.மோகன்றாஸ், பிரதம விருந்தினராக கலந்துகொண்ட வடமாகாண விளையாட்டுத்துறைப் பணிப்பாளர் எஸ்.அண்ணாத்துரை ஆகியோர் உரையாற்றுவதையும் பிரதம விருந்தினர் வெற்றி பெற்ற வீரர் ஒருவருக்கு பரிசில் வழங்குவதையும் அருகில் விளையாட்டுத்துறை அதிகாரி இ.அனுராகாந்தன் நிற்பதையும் படங்களில் காணலாம்.

# யாழ்ப்பாண வசந்தபுரம் பகுதி மக்கள் அமைச்சர் டக்ளசுக்கு நன்றி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்கொண்ட நடவடிக்கை காரணமாக மீளக்குடியேற்றத்திற்காக பொதுமக்களிடம் கையளிக்கப்பட்ட யாழ். நகர் கிழக்கு கரையோரப் பகுதியான வசந்தபுரத்தில் பாரிய சிரமதானப் பணிகள் முன் னெடுக்கப்பட்டு வருகின்றனர்.

கடந்த ஞாயிறு நண்பகல் அப் பகுதிக்கு நேரில் சென்ற அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்தி ரசிறி மற்றும் யாழ். மாநகர முதல் வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா ஆகியோர் சிரமதானப் பணிகளை நேரடியா கப் பார்வையிட்டனர்.



அதனைத் தொடர்ந்து வசந்தபுரம் பகுதியில் மீளக்குடியேறிய மக்களுடன் கலந்துரையாடிய அமைச்சர் மற்றும் ஆளுநர் அம் மக்களின் தேவைகளையும் பிரச்சினைகளையும் கேட்டறிந்தனர். அங்கு அப் பகுதி மக்கள் தமது பாரம்பரிய இருப்பிடங்களில் தாம் மீளவும் குடியேறுவதற்கு பேருதவி புரிந்த அமைச்சர், டக்ளஸ் தேவானந்தாவுக்கு மன மார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொண்டனர்.

அங்கு உரையாற்றிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, உரிய உதவிகள் அனைத்தும் பெற்றக்கொடுக்கப்படும் என உறுதியளித்ததோடு இருபது வருடங்களில் இழந்தவற்றை இருவருடங்களில் மீளக் கட்டியெழுப்பும் வகையில் உழைக்க அனைவரும் ஒன்றுபட வேண்டும் எனக் கேட்டுக் கொண்டதுடன் வசந்தபுரம் மக்கள் தமது பாரம்பரிய தொழில்களை மேற்கொள்வ தற்கு தமது அமைச்சினூடாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதனையும் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (2)

## கெயர் நிறுவனத்தின் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

கெயர் சர்வதேச நிறுவனத்தின் அனுசரணையுடனும் சீடா நிறுவனத்தின் நிதியுதவியுடனும் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் லிவ்ற் திட்டம் 2இன் 2ஆவது சுழற்சிக் காலப் பகுதிக்கும் வலிகாமம் மேற்கு சங்கானை பிரதேசம் உள்வாங்கப்பட்டுள்ளது.

மேற்படி வலிகாமம் மேற்கு சங்கானை மேற்கு பிரதேசத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் லிவ்ற் திட்டம் 2இன் முதலாவது சுழற்றிக் காலத்தின் போது அடையப்பட்ட இலக்குகளின் அனுபவப் பகிர்வும் 2 ஆவது சுற்றுக் காலப்பகுதிக்குரிய திட்ட இலக்குகள் தொடர்பான கலந்துரையாடலும் நாளை வியாழக்கிழமை முற்பகல் 9.30 முதல் பிற்பகல் 1 மணிவரை சங்கானை பிரதேச செயலக மாநரட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக நிறுவன திட்டப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (2-4)

## சர்வதேச தாதியர் தின நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ் தாதியர் பயிற்சிக் கல்லூரியின் சர்வதேச தாதியர் தினம் இன்று புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் யாழ்.போதனா வைத்தியசாலை பணிப்பாளர், நிர்வாக உத்தியோகத்தர், கணக்காளர் தாதிய பரிபாலதி, தாதிய பயிற்சிக் கல்லூரி அதிபர், தாதி மாணவர்கள் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளதாக கல்லூரியின் மாணவர் ஒன்றியத் தலைவர் சொ.முருகானந்தன் அறிவித்துள்ளார். (2-30)

### பருத்தித்துறை பிரதேச செயலகத்திற்குட்பட்ட

# விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான தடகளப்போட்டி முடிபுகள்

(கரவெட்டி)

பருத்தித்துறை பிரதேச செயலகத்திற்குட்பட்ட விளையாட்டுக் கழகங்களுக் கிடையிலான தடகளப்போட்டிகளில் முதல் மூன்று இடங்களை பெற்ற வீரவீராங்கனைகளின் பெயர்கள் பருத்தித்துறை பிரதேச செயலகத்தால் வெளியிடப்பட்டுள்ளது. அவர்களின் பெயர் விபரம் வருமாறு,

**100 மீற்றர் பெண்**

எஸ். மலர்வாணி , ஶ்ரீ.ஶ்ரீவித்யா, அ.கியூகி லஸ்ரா (பருத்தித்துறை ஐக்கிய வி.க.)

**ஆண்**

டே. டொகினிக் டிநொக் -சென்தோமஸ் வி.க., கே. பார்த்தீபன் -இளைஞர் வி.க., ரி.நிகான்-பருத்தித்துறை ஐக்கிய வி.க.

**200 மீற்றர் பெண்**

ஶ்ரீ.ஶ்ரீவித்யா, எஸ்.மலர் வாணி ,(பருத்தித் துறை ஐக்கிய வி.க , ரி.சியாமி -சென் தோமஸ் வி.க.

**ஆண்**

ஆர். ரவிக்குமார் -உதயதாரகை வி.க., எஸ். பார்த்தீபன் -இளைஞர் வி.க.,ரி.நிதர்சன் -பருத்தித்துறை ஐக்கிய வி.க.

**400மீற்றர் பெண்**

செ.செல்வரூபினி -சென்தோமஸ் வி.க. ,அ.கியூகி லஸ்ரா, எஸ்.தர்சிகா பருத்தித்துறை ஐக்கிய வி.க.

**ஆண்**

லோ. அமல்தாஸ்-சென்தோமஸ் வி.க. ,வி.ரி.நிதர்சன்-பருத்தித்துறை ஐக்கிய வி.க., அ.டெனிற்காந் -சென்தோமஸ் வி.க.

**800 மீற்றர் ஆண்**

எஸ். மயூரன் -வல்வை வி.க.,எல். அமல்தாஸ்-சென்தோமஸ் வி.க., எஸ். ஜரிந்தன் -பருத்தித்துறை ஐக்கிய வி.க.

**பெண்**

எஸ்.தனுஷா -பருத்தித்துறை ஐக்கிய வி.க. ,என்.செல்வரூபினி-சென்.தோமஸ் வி.க. , எஸ். ரியுஸ்ரா -பருத்தித்துறை ஐக்கிய வி.க.

**நீளம்பாய்தல் -பெண்**

வி.துவசாந்தினி சென்.தோமஸ் வி.க. ,ரி.அயந்தா-பருத்தித்துறை ஐக்கிய வி.க.,ஏ நிரோஜினி -சென்.தோமஸ் வி.க.

**ஆண்**

ஏ.அன்ரனிநிதர்சன்,ஏ.அன்ரன்தொன்சன்-சென் தோமஸ் வி.க., அ.மந்கிவன் - கலைவாணி வி.க.

**உயரம் - ஆண்**

டி. அமர்தரூபன் , ஆர்.டிலக்ஷன் சென் தோமஸ் வி.க., ஆர் .விகர்ணன் -வல்வை வி.க.

**பெண்**

வி.ரூபிதா- பருத்தித்துறை ஐக்கிய வி.க., ச.ஜனகி -சென்.தோமஸ் வி.க.,ரி. அயந்தா-பருத்தித்துறை ஐக்கிய வி.க.

**முப்பாய்ச்சல் -பெண்**

டி. குகசாந்தினி-சென்தோமஸ் வி.க. ,ரி. அயந்தா-பருத்தித்துறை ஐக்கிய வி.க.,ஏ.நிரோஜினி-சென்.தோமஸ் வி.க.

**ஆண்**

ஏ.அன்ரனி நிதர்சன் -சென்தோமஸ் வி.க. ,எம்.மயூரன்-வல்வை வி.க.,ஏ.சசிகுமார் -தொண்டமனாறு ஒற்றுமை வி.க.

**1500 மீற்றர் பெண்**

ஈ.பூரணி ,எஸ்.தனுஷா பருத்தித்துறை ஐக்கிய வி.க. (4-24)




## திருவிழா திருப்பலிகள்

(யாழ்ப்பாணம்)

பண்டைத்தரிப்பு பற்றிமா அன்னைத் திருத்தலத் திருப்பலிகள் நாளை வியாழக் கிழமை காலை 6 மணி முதல் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

இதில் காலை 7.30 மணிக்கு திருநாள் திருப்பலியினை யாழ். மறைமாவட்ட குரு முதல்வர் அருட்பணி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் அடிகளார் நிறைவேற்றுவார்.

தொடர்ந்து மதியம் 12 மணிக்கு நோயாளர்களுக்கான திருப்பலியும் மாலை 4 மணிக்கு மாலைத்திருப்பலியும் இடம்பெறவுள்ளது. (4)

## பகிரங்க ஏலவிற்பனை


(யாழ்ப்பாணம்)

தேசிய சேமிப்பு வங்கியின் யாழ்ப்பாணம் , சுன்னாகம் , மானிப்பாய் , திருநெல்வேலி ஆகிய வங்கிக்கிளைகளில் கடந்த 31.03. 2009 வரை அடகு வைத்து 31.03.2010 வரைக்கும் மீட்கப்படாத அல்லது வட்டி செலுத்தப்படாத அடகு நகைகள் பகிரங்க ஏலவிற்பனை மூலம் விற்பனை செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இவ் ஏல விற்பனை எதிர்வரும் ஜீன் மாதம் 5 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு இல.496 , ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள யாழ்ப்பாணக் கிளையில் நடைபெறவுள்ளதாக வங்கியின் உதவிப் பொது முகாமையாளர் அறிவித்துள்ளார். (2-4)



சவகச்சேரி இலங்கை வங்கிக்கிளையின் சனிக்கிழமை வங்கிச்சேவையின் ஆரம்ப நிகழ்வில் தென்மராட்சி கல்வி வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர் வரதராஜமூர்த்தி மங்கல விளக்கேற்றுவதையும் அருகில் கிளை முகாமையாளர் ச.சந்திரகுமாரன் நிற்பதனையும் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட இலங்கை வங்கியின் பதில் உதவிப் பொது முகாமையாளர் வி.எஸ்.சிவநாதன் உரையாற்றுவதனையும் அருகில் ஓய்வு பெற்ற அதிபர் ஆர்.கைலைநாதன், ஓய்வு பெற்ற பிரதேச செயலரும் திட்டப்பணிப்பாளருமான எம்.கேதீஸ்வரன் ஆகியோர் அமர்ந்திருப்பதனையும் படங்களில் காணலாம்.

கோப்பாய் ஆசிரிய கலாசாலை ஆசிரிய மாணவர்களுக்கான வீதியோட்ட நிகழ்வின் போது முதன்மை பெற்ற வீரர்கள் கலாசாலை அதிபர், விரிவுரையாளர்களுடன் நிற்பதை முதற்படத்திலும் பரிசளிப்பு நிகழ்வின் போது கலந்து கொண்டோருள் ஒருபகுதியினரை அடுத்துள்ள படத்திலும் காணலாம்.

## திஸ்ஸ நாயகத்திற்கு வழங்கப்பட்ட பொது மன்னிப்பு குறித்த ஆவணங்கள் விரைவில் வெளியிடப்படும்-சட்டமா அதிபர்

(கொழும்பு)

சிரேஸ்ட ஊடகவியலாளர் ஜே.எஸ் திஸ்ஸ நாயகத்திற்கு வழங்கப்பட்ட பொது மன்னிப்பு தொடர்பான உத்தியோக பூர்வ ஆவணங்கள் விரைவில் சமர்ப்பிக்கப்பட உள்ளதாக சட்டமா அதிபர் மொஹான் பீரிஸ் தெரி வித்துள்ளார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் வழங்கப்பட்ட பொது மன்னிப்பு குறித்த இறுதி ஆவணங்கள் இந்த வாரத்தில் வழங்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஊடகவியலாளர் ஜே.எஸ்.திஸ்ஸநாயகத்தினால் தமக்கு விதிக்கப்பட்ட தண்டனைக்கு எதிராக தாக்கல் செய்துள்ள மேன்முறையீட்டு மனு வாபஸ் பெற்றுக் கொள்ளப்பட்டால் பொது மன்னிப்பு நடைமுறைப் படுத்தப்படும் என்றும் மேன்முறையீடு வாபஸ் பெற்றுக் கொள்ளப்பட்டாலும் அவர் சிறைத்தண்டனையை அனுபவிக்க நேரிடும் எனவும் பொது மன்னிப்பையும், வாபஸ் பெற்றுக் கொள்ளும் நடவடிக்கையையும் ஒரே நேரத்தில் நிறைவேற்றினால் இந் நிலைமை ஏற்படாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (2-4)

## ஊடகத்துறைக்கு பிரதி அமைச்சரை நியமிக்க போவதில்லை-அரசாங்கம் அறிவிப்பு

(கொழும்பு)

ஊடகத்துறை அமைச்சிற்கு பிரதி அமைச்சை நியமிக்கும் எண்ணமில்லை என அரசாங்கம் அறிவித்துள்ளது.

இவ் அமைச்சு சார்ந்த சகல நடவடிக்கைகளையும் அமைச்சர் கெஹலிய ரம்புக் வெல மேற்கொள்வார் என ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க தெரிவித்துள் ளார்.

கடந்த 23 ஆம் திகதி பிரதி ஊடக அமைச்சராக மேர்வின் சில்வா நியமிக்கப்பட்ட போதிலும் கடந்த 5 ஆம் திகதி புதிய அமைச்சர்களுக்கான நியமனங்களின் போது ஊடகத்துறை அமைச்சராக கெஹலிய ரம்புக்வெல நியமிக்கப்பட்டார்.

இதன் பின்னர் பிரதி அமைச்சர் மேர்வின் சில்வா பதவி விலகி பெருந்தெருக்கள் பிரதி அமைச்சராக பதவிப் பிரமாணம் செய்து கொண்டார். (2-4)

## வடமாகாணத்தின் வரைபடத்திற்கு உதவுகிறது ஜப்பான் நிறுவனம்

(கொழும்பு)

வான் வழியாக எடுக்கப்படும் படங்களை பயன்படுத்தி நவீன முறையில் இலங்கையில் வட பகுதியில் வரைபடத்தினைத் தயாரிப்பதற்கு ஜப்பானின் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனம் நில அளவைத் திணைக்களத்திற்கு உதவவுள்ளது.

நில அளவைத் திணைக்களத்திடம் தற்போதுள்ள வட மாகாணத்தின் வரைபடம் பலஆண்டுகளுக்கு முற்பட்டதோடு அங்கு மோதல்கள் தொடாந்தும் இடம்பெற்று வந்தமையினால் வடக்கின் வரைபடம் நீண்டகாலமாகவே புதுப்பிக்கப்படவில்லை.

வட மாகாணத்தின் வரைபடத்தினை நவீன தொழில்நுட்பத்துடன் புதுப்பிப்பதற்காவும் வடக்கினது மீள்கட்டுமான மற்றும் அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ளும் அமைப்புகளும் அரச திணைக்களங்களும் இந்த நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய இந்த வரைபடத்தினை பயன்படுத்துவதற்கு வழி செய்யப் படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-4)

## நீதிக்குப் புறம்பாக 3 இலட்சம் பேர் சமுர்த்தி உதவுதொகை பெற்றுள்ளனர்

### சமுர்த்தி ஆணையாளர் தெரிவிப்பு

3 இலட்சம் பேர் நீதிக்குப் புறம்பான வகையில் சமுர்த்தி உதவு தொகையைப் பெற்றுக் கொண்டுள்ளதாக சமுர்த்தி ஆணையாளர் டபிள்யூ.ஜே.எல்.எஸ். விஜயசிறி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிவிக்கும் போது, இலங்கையில் வறியவர்களின் எண்ணிக்கை 15 வீதத்தினால் குறைவடைந்துள்ளது.

சமுர்த்தி வருமானத்தை பெற்றுக் கொள்ளக் கூடிய குறைந்தபட்ச தகுதியற்றவர்கள் பலர் உதவு தொகையை மோசடியான முறையில் பெற்றக் கொண்டுள்ளனர்.

தற்போது 16 இலட்சம் பேர் சமுர்த்தி உதவுதொகை பெற்றுக் கொள்வதாகவும், இதில் மூன்று இலட்சம் பேர் உதவு தொகை பெற்றுக் கொள்வதற்கு தகுதியற்றவர்கள் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சமுர்த்தி இவ்வாறு கொடுப்பனவுககளை வழங்குவதற்காக அரசாங்கம் வருடாந்தம் சுமார் ஒரு பில்லியன் ரூபா பணத்தை செலவிடுவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (2-4)

## செட்டிக்குளம் முகாம்களிலிருந்து 758 குடும்பங்கள் மீள்குடியேற்றம்

### வவுனியா மாவட்ட செயலாளர் தெரிவிப்பு

வவுனியாவிலிருந்து 758 குடும்பங்களைச் சேர்ந்த 2700 பேர் வவுனியா வடக்கிலும் முல்லைத்தீவு, முள்ளியவளை பிரதேசத்திலும் மீள்குடியமர்த்தப்படவென நேற்று முன் தினம் அனுப்பி வைக்கப்பட்டதாக வவுனியா மாவட்ட செயலாளர் பி.எம்.எஸ். சார்ள்ஸ் தெரிவித்தார்.

வவுனியாவில் நண்பர்கள், உறவினர்கள் இல்லங்களிலும் செட்டிக்குளம் நிவாரணக் கிராமங்களிலும் தங்கி இருந்தவர்களே இவ்வாறு அனுப்பி வைக்கப்பட்டதாக வவுனியா மாவட்ட செயலாளர் குறிப்பிட்டார்.

வவுனியா நகரசபை மைதானத்திற்கு வரவழைக்கப்பட்டு பஸ் வண்டிகளில் இவர்கள் அனுப்பி வைக்கப்பட்டனர்.

இவர்கள் பயணம் செய்யவென 45 பஸ் வண்டிகளும் இவர்களது பொருட்களை எடுத்துச் செல்லவேன 30 லொறிகளும் ஈடுபடுத்தப்பட்டிருந்தன. (2-4)

## மக்களின் பாதுகாப்புக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும்-பாதுகாப்பு செயலர்

(கொழும்பு)

நாட்டில் இடம்பெற்று வரும் குற்றச் செயல்களை கட்டுப்படுத்தி பொது மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென கோத்தபாய ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

மூன்று தசாப்த காலமாக நீடித்த யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டுள்ள நிலையில் மக்களின் பாதுகாப்புக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையின் 426 பொலிஸ் நிலையங்களினதும் பொறுப்பதிகாரிகளுடன் நடைபெற்ற சந்திப்பின் போது பாதுகாப்புச் செயலாளர் இதனைத் தெரிவித்துள்ளார்.

பொதுமக்களுடன் நட்புறவைப் பேணக் கூடிய ஓர் வினைத்திறனான பொலிஸ் சேவையை உருவாக்க நடவடிக்கை எடுக்கப் படும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். மேலும் யுத்தம் நிறைவடைந்துள்ள காரணத்தினால் பொலிஸாரின் அறிவை விருத்தியடைச் செய்து அதன் மூலம் பொதுமக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என குறிப்பிட்டுள்ளார். (2-4)

## சக்தி, சிரச ரீ.வி. தலைமையகம் மீதான தாக்குதல்; சந்தேகநபர்கள் பிணையில் விடுதலை

(கொழும்பு)

மஹாராஜா கூட்டு நிறுவனத்திற்கு சொந்தமான சக்தி மற்றும் சிரச தொலைக்காட்சி தலைமையகத்தின் மீது தாக்குதல் நடத்தியவர்களை கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றம் நேற்று முன்தினம் பிணையில் விடுவித்துள்ளது.

கொழும்பு கொம்பனித் தெரு பொலிஸாரினால் கைது செய்யப்பட்ட 16சந் தேக நபர்கள் பொலிஸ் பிணையில் கைதுசெய்யப்பட்ட அன்றைய தினமே விடுதலை செய்யப்பட்டனர்.

எனினும் அவர்களை மீண்டும் நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்துமாறு நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது. நேற்று முன்தினம் 14 பேர் மட்டுமே நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்தனர்.

மஹாராஜா தொலைக்காட்சி நிறுவனத்தின் மீது கடந்த மார்ச் மாதம் கல் வீச்சு தாக்குதல் நடத்தியதால் அந்த நிறுவனத்தின் வாகனங்கள் உள்ளிட்ட உடமைகள் சேதத்திற்கு உள்ளாகின. (2-6)


ஓராண்டு நினைவஞ்சலி

மண்ணில் 21 06 1985

விண்ணில் 24 04 2009



கனகரத்தினம் றொபேக்கா (றொபின்)

விடிந்ததென நினைத்தோம்-நீ
எமை விட்டு பிரிந்த செய்தி கேட்டு
தவியாய்த் தவித்தோம்
சிரித்து எம்முடன் உறவாடி மறைந்தாயே!
உன் சிரிப்பின் ஒலிமட்டும் -எம்
நெஞ்சில் நிலையாய்
உன் நினைவுகளுடன்வாழ்கிறோம்.

உக்குளாங்குளம்,
வவுனியா,
(முரக மோட்டை 2ஆம் கட்டை)

உன் பிரிவால் துயருறும்
கணவன், அம்மா, அப்பா, சகோதரர்கள், அத்தான்மார், அக்காமார், பெரியப்பா, பெரியம்மா, சித்தி, சித்தப்பா, அண்ணன்மார், மாமன்மார்,அத்தைமார், உறவினர்கள்.


# கலை, அதன் உதயம் நிறைவு, எதிர்காலப் பணி



சிவரூபி ஸ்ரீஜெகநாதன்
சண்டிலிப்பாய்

கலைகள் இறைவனிடத்திலிருந்து பிறந்தன என்ற கருத்து உடையவர்கள் இந்தியர். உதாரணமாக கூத்துக்கலை பிரமதேவனால் உலகுக்கு வழங்கப்பட்டது என நாட்டிய சாஸ்திரம் கூறுகின்றது. சிவன் தாண்டவமூர்த்தி, நடராஜன், கூத்தன் என அழைக்கப்படுகின்றான்.

ஏனெனில் இத் தெய்வத் தினூடாகவே ஆடற்கலை உலகுக்கு வழங்கப்பட்டது. விஷ்ணுவும் அரங்க நாதன் எனப்போற்றப்படுவது குறிப் பிடத்தக்கது. கலைகள் எல்லாம் இறை வன் பிரசாதம் எனக்கொள்ளப்படுவது உலகத்து அனுபூதிமான்களின் கருத்தாகும் சிவானுபவம் எங்கே பிறக்



கின்றதோ அங்கே தான் கலைகளும் முகிழ்கின்றன என்ற கொள்கைப்படி நம்ம ஆன்றோர் கலைகளுக்கும் புனிதமான தெய்வீகத் தோற்றம் கற்பித்துள்ளனர். இதனையே நாட்டிய சாஸ்திரமும் வலியுறுத்திச் செல்கிறது.

அளவுப் பொருத்தத்தால் கலைப் பொருளின் புறத்தோற்றத்தை காட்டவும் தன் கருத்தை கலையாகப் படைக்கவும் அறிபவன் கலைஞன் எனச் சாங்கியம் சொல்கிறது. உணர்ச்சிகள் சேர்ந்து சுவை தோன்றுகின்றது. சுவையைத் தோற்றுவிப்பவனே கலைஞன் என நாட்டிய சாஸ்திரமும் அபிநய தர்ப்பணமும் கூறுகின்றன.

எல்லாக் கலைகளுக்கும் சாதன வாஸ்துவாய் இருப்பது அழகும் அனுபவ உணர்ச்சியுமாகும். இது சாதாரண மனித நடைமுறை அனுபவத்திலிருந்து வேறுபட்டது.

கலைஞன் விடயத்திலோ தான் அனுபவத்தில் எதையாவது கண்டு பிடித்தால் அதை அவனது கற்பனா சக்திக்கு மெருகேற்றி அழகுபடுத்தி உன்னத நிலைக்குக் கொண்டுசென்று விடுகிறான்.அப்படியில்லையென்றால் கவிஞர்களும் கலைஞர்களும் "சாரமில்லாத சங்கதிகளுக்கு ஸ்திரமான இடமும் பெயரும் நாமமும் ரூபமும் கொடுப்பது" சாத்தியப்பட்டிருக்காது. இந்த நுண்ணுணர்வும் இல்லையென்றால் கலை என்ற ஒன்று தோன்றியிருக்க முடியாது.


இதிலிருந்து என்ன விளங்குகின்றதென்றால் உண்மையான அனுபவத்தை விட ஒரு கலைஞன் தான் கூறும் கருப்பொருளை எந்த விதத்தில் எடுத்துரைக்கிறான் என்பது தான் பிறமக்களிலிருந்து அவனை வேறுபடுத்திக் காட்டுகின்றது. எல்லோரும் சந்திரனைப் பார்க்கிறார்கள் .ஆனால் கவிஞன் தான் அதை "இரவில் எழிலரசி" என்று வர்ணிப்பான்.

ஒரு கிண்ணத்தி லிருக்கும் மதுவை சாதாரண மனிதன் "கிண்ணத்தின் விளிம்பிலிருந்து கண் சிமிட்டு குமிழ்ச் சக்கரம்" என வர்ணிக்க மாட்டான். அது கவிஞனின் வார்த்தையாகி இருக்கிறது. நிகழ்ச்சி எதுவுமில்லாத நேரம் ஒருயுகமாகத் தோன்றும். ஆனால் கவிஞனுக்கோ அது வேறு விதமாக தோன்றும்.

அறிஞர் *கீட்ஸ்* கூறியது போல விண் விண் எனத் தெறிக்கின்ற நெற்றியையும் வரட்சியால் வெடிக்கின்ற நாவையும் உண்டு பண்ணி விடுகிறது. எனவே கலைஞனின் உலகம் சாமானிய விவேக அறிவையும் சாதாரண பாசையையும் கடந்து அப்பாற்பட்டதாகும். மற்றப்படி உணர முடியாததையும் பேச முடியாததையும் உணரவும் பேசவும் வைக்கக்கூடியதாக இக்கலை மிளிர்கின்றது. இதில் கலைஞன் யோகசமாதியிலுள்ள ஞானியைப் போல் ஆகி "அழகை அகத்தே அனுபவித்து உணர்கின்றான். ஈறில்லா வஸ்துடன் லயித்து ஒன்றிவிடுகிறான். நிரந்தரமான பரிபூரண பொருளின் ஒரு கோடியைக் கண்டு நமக்கு தெரியும்படி செய்கிறான்."

கலைஞன் தன்னை நாம் உணரும் படி செய்வதன் மூலம் நம்மை நாம் உணரும்படி செய்துவிடுகின்றான். நல்ல சங்கீதத்தை கேட்கும் போது நாம் அதனுடன் இணைந்து அதன் அழகுகள், லலிதம், ஆரோகண, அவரோகண அலைகள், அதன் கொஞ்சல், உதைப்பு, அதன் கண்ணீர், அதன் சிரிப்பு ஆகியவைகளோடு ஒன்று பட்டுச் சொல்கிறோம்.

கலை சர்வவியாபகமானது. எல்லோரையும் கவர்வதுமான ஒன்றாகும். பாஷை, ஜாதி, இடம் எல்லாவற்றுக்கும் அப்பாற்பட்டது என்பதை நாம்



உணர்கிறோம்.சகஜமானதும் அமைதியானதுமான ஓர் அனுபவத்தை விந்தையானதும் தீவிரமானதுமான அனுபவமாகத் திருத்தியமைப்பதுவே கலையாகும். சகல மக்களிடத்தையும் இயல்பாய் அடக்கியிருக்கிற ஆக்க சிருஷ்டி, உத்வேகம் செயற்பட்டு வெளிப்படுவதனால் இக்கலை ஏற்படுகிறது. அந்த உத்வேக உணர்ச்சி சாதாரண தேக சத்துணர்ச்சியை விட ஆழ்ந்ததும் ஆத்மீக மயமானதுமாகும். அந்த உணர்ச்சியில் ஒரு கலைஞன் ஜகத்தின் சிருஷ்டி சக்தியுடன் ஒன்றாகிவிடுகின்றான். அகத்தில் சுயதிருப்தியும் புறத்தில் மற்றவர்களுக்கு மகிழ்ச்சியும் ஏற்படும் படி செய்கிறான். இயற்கையிலும் மக்களிடத்திலும் உள்ளீடாய் உள்ள அழகு, உண்மை ஆகியவற்றை வெளிப்படுத்திக் காட்டுகின்ற பரிணமிக்கும் படி இருக்கும் ஒருவனே கலைஞன் என ஜேம்ஸ் எச்.சலின்ஸ் கூறியிருக்கிறார்.

சங்கீதம் இதர, லலித கலைகளை விட அதிகளவில் அறிவுபூர்வமாயும் தத்துவ ரீதியாயும் உள்ளது. சகல சங்கீத உருப்படிகளும் நீண்ட நேரம் நிலைக்கின்ற கட்டுக் கோப்புக்களாகும். அவை பிரதானமாய் சங்கீதக்கருத்துக்கள் அதன் ஸாரங்கள் யாவும் ஒன்றோடொன்று உள்தொடர்புள்ளவையாகும்.

சங்கீதக்கலையானது சகல விதமான உணர்ச்சிகளையும் வெளிக் கொணர்ந்து விடுகின்றது. சகல கலைகளும் சங்கீதத்தின் தன்மையை அடைய சதாமுயன்று வருகின்றது என "வால் பேட்டர்" கூறியிருக்கிறார்.

மகத்தான எல்லாக்கலைகளிலும் இலட்சியமுடிபு சாதனை மார்க்கத்திலிருந்து பிரிக்க முடியாததாக இருக்கும். ஆனால் சங்கீதத்தில் மேதைகள் என்ன செய்திருக்கிறார்கள் என்றால் வாழ்க்கை சம்மந்தமாக தாங்கள் கொண்டுள்ள அர்த்தத்தை பிரதிபலிக்கக் கூடிய கேள்விப்புலனை சப்தங்களிலிருந்து நிரப்பியிருக்கிறார்கள்.

மற்ற எல் லாக்கலையையும் விட சங்கீதத்திற்கு ஆயிரமாயிரம் பேருக்கு ஆயிரமாயிரம் வேகவித்யாசங்களுடன் வெகு அந் தரங்கமாக ஆனால் கடமைப் பொறுப் பற்ற முறையில் வேறுவகையில் சொல் லமுடியாத விடயங்களை சொல்லக் கூடிய ஆழ்ந்த சக்தி இந்த சங்கீதக் கலைக்கு உண்டு.

சுருக்கமாக சொல்வதானால் கலைகள் அனைத்தும் எதிர்கால இலட்சிய நிலைமையின் முன்னறிவுப்பு முன் மாதிரியாகும். புலனுணர்ச்சி அழகு, உணர்ச்சி வேகநுட்பம், அறிவு ஒழுங்கு ஆகியவை எல்லாம் ஒருங்கிணைந்து சுமுகமாக செயல்படுகின்ற புத்தி பூர்வமான ஒரு நாகரிகநிலை எப்படியிருக்கும் என்பதை இவை எடுத்துரைக்கும்.

உலகத்தின் எல்லா நாடுகளும் உலக ஆட்சி மேலாதிக்க அதிகாரத்திற்கு போராடிக்களைத்தபின் உலகெங்கும் சமாதானக் கோரிக்கை ஆழ்ந்த ஆர்வத்தோடு தாபகமான வெளிப்படுக்கையில் சங்கீதம், இலட்சியப் பொற்காலத்தின் தீர்க்கதரிசியாய் அமையும். எல்லாப்பாஷையும் ஒலியென்னும் ஒரேபாஷையில் பொதுவான சமயத்தில் ஒன்றுபடும்படி செய்யும் அந்த சங்கீதம் புலனுணர்ச்சி ரீதியாகவும் புத்திபூர்வமாயும் இருக்கும்.

அமைதியை அடையத் தூண்டுதலாகவும் திருப்தியளிக்க ஊக்குவிப்பதாகவும் நன்மை, உண்மை, அழகு



ஆகியவைகளின் சக்திகளையெல்லாம் ஒன்று திரட்டி சுய மாகவும் ஒழுங்கு கட்டுப்பாடாகவும் திட்டரீதியிலும் ஒன்றுபட்டு இயங்கி மனித சமுதாயத்திற்கும் சேமநலம் ஏற்படும் படி செய்யக்கூடியதாய் இருக்கும்.

எனவே கலைகள் மனித மேம்பாட்டிற்கும் சமூக நலத்திற்கும் கலைமரபின் தனித்துவத்திற்கும் அச்சாயாகவும் நிலைக் களனாகவும் விளங்கும் என்பதில் ஐயம் எதுவுமே இல்லை எனலாம்.

## ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட நல்லிணக்க ஆணைக்குழுவுக்கு அமெரிக்கா வரவேற்பு

(கொழும்பு)

கடந்தகால நெருக்கடியான நிலைமைகளை ஆராய்வதற்காக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஸவினால் நியமிக்கப்பட்ட நல்லிணக்க ஆணைக்குழு வரவேற்கத்தக்கது என அமெரிக்க அரசாங்கம் பாராட்டியுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபைக்கான அமெரிக்காவின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி சுசன் ரைஸ் விடுத்துள்ள அறிக்கையிலேயே இதனைக் கூறினார்.

இந்த ஆணைக்குழுவின் விசாரணையானது ஏனைய நாடுகளுக்கு முன்னுதாரணமாக இருக்கும் எனவும் அவர் தெரிவித்தார்.

இறுதிக்கட்ட யுத்தத்தின் போது இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் விசாரணை நடத்துவதற்காகவே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஸவினால் நல்லிணக்க ஆணைக்குழுவொன்று நியமிக்கப்பட்டிருப்பதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு குறிப்பிட்டிருந்தது. (2-4)

## அழுத்தம் காரணமாக வரவு-செலவு திட்டத்தை தாமதப்படுத்தவில்லை

### சுசில் பிறேமஜயந்த தெரிவிப்பு



(கொழும்பு)

எதிர்வரும் ஜுலை மாதம் மினி வரவு செலவுத்திட்டம் ஒன் றும் வருட இறுதியில் முழுமையான வரவு செலவுத் திட் டம் ஒன்றும் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக அமைச்சர் சுசில் பிரேம் ஜயந்த தெரிவித்தார்.

அதன்படி இந்த வருடத்தில் இரண்டு வரவு செலவுத் திட்டங்கள் சமர்ப்பிக்கப்பட உள்ளன. மகாவலி கேந்திர நிலையத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் உரையாற்றிய அமைச்சர் மேலும் கூறியதாவது, வரவு -செலவுத் திட்டத்தை சமர்ப்பிக்காத திறை சேரியினூடாக பணம் பெற்று அரச செலவினங்களை சமாளிக்க அரசாங்கம் தயாராவதாக ஐ.தே.க. குற்றஞ்சாட்டி வருகிறது.

இந்த குற்றச் சாட்டுக்களை முற்றாக மறுக்கிறோம்.

அழுத்தம் காரணமாக நாம் வரவு செலவுத் திட்டத்தை தாமதப்படுத்தவில்லை. ஏப்ரல் 22 ஆம் திகதியே புதிய அமைச்சுகள் நியமிக்கப்பட்டன. பல அமைச்சுக்களின் பொறுப்புகள் மாற்றப்பட்டுள்ளன. ஒவ்வொரு அமைச்சுக்களினதும் செலவுகளின் அடிப்படையிலேயே வரவு செலவுத் திட்டம் தயாரிக்கப்படுவதால் இதில் தாமதம் ஏற்பட்டது என்றார். (2-4)

## இலங்கைக்கு ஏற்றவகையில் வெளியுறவு கொள்கைகளில் மாற்றம் ஏற்படுத்தப்படும்



### ஜீ.எல்.பீரிஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கைக்கு ஏற்றவகையில் வெளியுறவு கொள்கைகளில் மாற்றம் ஏற்படுத்தப்படும் என வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் நாம் பின்பற்றிய சில வெளியுறவுக் கொள்கைகள் தமிழீழ விடுதலைப் புலிகளின் ஒரு சில செயற்பாடுகளுக்கு சாதகமானதாக அமைந்திருந்ததென அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கும் போது, புலிகள், இராணுவ ரீதியாக தோற்கடிக்கப்பட்டுள்ள நிலையில் ஏனைய வளங்களைத் திரட்டி வேறும் வழிகளில் அரசாங்கமொன்றை அமைக்கும் முனைப்பில் புலி ஆதரவாளர்கள் ஈடுபட்டு வருகின்றனர். ஒரு சில ஐரோப்பிய நாடுகளும் இந்த முயற்சிகளுக்கு ஆதரவளித்து வருகின்றனர்.

எமது நிலைமைகளை உலகிற்கு சரியான முறையில் வெளிப்படுத்த வேண்டும். நாட்டை அபிவிருத்தி செய்வதற்கு வெளிநாட்டு நிதி உதவிகள் மிகவும் இன்றியமையாதவை. எனவே இலங்கை தொடர்பான நம்பிக்கையையும் நன்மதிப்பையும் ஏற்படுத்துவது மிகவும் அவசியமானதென அவர் குறிப்பிட்டுள்ளார். (4-2)

## தமிழக மீனவர்களை குடிபோதையில் தாக்கிய இலங்கை கடற்படையினர்

இந்திய எல்லையில் மீன்பிடித்துக்கொண்டிருந்த பாம்பன் மீனவர்களை குடிபோதையில் வந்த இலங்கை கடற்படையினர் அடித்து விரட்டிய சம்பவம் பெரும் பதட்டத்தை ஏற்படுத்தியுள்ளது. இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது,

இராமேஸ்வரம் தனுஷ்கோடி அருகே இந்திய மீனவர்கள் மீன்பிடித்துக் கொண்டிருந்தனர். அப்போது அங்கு அதிவேக படகில் வந்த இலங்கை கடற்படையினர் மீனவர்களை சூழ்ந்து இரும்பு கம்பியால் அடித்ததாகவும், அவர்கள் குடிபோதையில் இருந்ததாகவும் பாதிக்கப்பட்ட மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

மேலும் படகில் இருந்த மீன்கள், செல் போன்கள், சமையல் பொருட்களை அள்ளிச் சென்றதாகவும் மீனவர்கள் கூறியுள்ளனர். இந்த அத்துமீறிய தாக்குதல் பெரும் பதட்டத்தை ஏற்படுத்தியுள்ளது. (2-4)

## ஐ.தே.க. மறுசீரமைப்பு நடவடிக்கைகள் அடுத்த வாரமளவில் நடைபெறும்

### கயந்த கருணாதிலக்க தெரிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் மறுசீரமைப்பு நடவடிக்கைகள் அடுத்த வாரமளவில் நடைபெறும் என கட்சியின் ஊடகப் பேச்சாளர் கயந்த கருணாதிலக தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிவிக்கும் போது,

கட்சி மறுசீரமைப்பு தொடர்பில் நியமிக்கப்பட்டுள்ள குழுவினர் எதிர்வரும் திங்கட்கிழமை வரையில் கால அவகாசம் கோரியுள்ளனர்.

முன்னாள் சபாநாயகர் ஜோசப்மைக் கல் பெரேரா தலைமையிலான இந்தக் குழு மறுசீரமைப்பு குறித்து கட்சி உறுப்பினர்களுடன் கலந்தாலோசிக்கும் முனைப்புக்களில் ஈடுபட்டுள்ளதாலேயே கால தாமதம் ஏற்பட்டுள்ளதாகவும் ,


பொது மக்களை ஏமாற்றும் நோக்கில் கட்சி மறுசீரமைப்பு நடைபெற வில்லை எனவும் மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும் என்ற மெய்யான நோக்கத்தில் பரிந்துரைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும்

ஜனநாயக ரீதியான கட்சி என்ற வகையில் கட்சி உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் தங்களது கருத்துக்களை சுதந்திரமாக முன்வைக்க உரிமை காணப்படுவதாகவும் அவர்

மேலும் ஜே. ஆர்.ஜயவர்தனவின் ஆட்சிக் காலத்தில் கைச்சாத்திடப்பட்ட இலங்கை- இந்திய ஒப்பந்தம் தொடர்பிலும் கட்சி உறுப்பினர்கள் சுதந்திரமாக தமது கருத்துக்களை முன்வைத்தனர் என குறிப்பிட்டுள்ளார். (2-4)

## கட்சியின் நன்மைக்காக பதவி விலகவும் தயார்

### ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு



(கொழும்பு)

கட்சியின் நன்மைக்காக பதவி விலகவும் தாம் தயார் என ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

தம்மை ப்பற்றி சிந்திக்காமல் கட்சியின் நன்மையை கருத்திற் கொண்டு கட்சி மறுசீரமைப்பு கொள்ளைகளை முன்வைக்குமாறு அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்தியாவிற்கு விஜயம் செய்வதற்கு முன்னதாக ஊடகங்களுக்கு அளித்த செவ்வியின் போது ரணில் விக்ரமசிங்க இதனைக் குறிப்பிட்டுள்ளார். (2-4)

## வடக்கு மக்களின் இதயங்களை வெல்ல விசேட நடவடிக்கை

### பொலிஸ்மா அதிபர் தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கு மக்களின் இதயங்களை வென்றெடுக்கும் நோக்கில் விசேட நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் திணைக்களத்தினர் அறிவித்துள்ளனர்.

மூன்று துறைகளின் கீழ் இந்த திட்டம் முன்னெடுக்கப்பட உள்ளதாக வட பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் நிமால் லெவ்கே தெரிவித்துள்ளார்.

இதற்கமைய செயல்களை கட்டுப்படுத்தல், மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தல் மற்றும் பொலிஸார் தொடர்பான நன் மதிப்பை மக்கள் மத்தியில் ஏற்படுத்தல் ஆகிய நடவடிக்கைகளின் மூலம் வடக்கு மக்களின் இதயங்களை வென்றெடுக்க முடியும் என அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

அச்சமின்றி எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பொலிஸாருடன் மக்கள் தொடர்புகளை பேணக் கூடிய சூழ்நிலை உருவாக்கப்பட வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் வன்னி மற்றும் யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த தலா 100 பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு தமிழ் மொழிப் பயிற்சி வழங்கப்படவுள்ளதாகவும் எதிர்வரும் 17 ஆம் திகதி இந்தப் பயிற்சிகள் வழங்கப்பட உள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார். (2-4)


## பலாலி ஆரோக்கிய மாதா ஆலயத் திருவிழா அழைப்பு

எதிர்வரும் 15 .05.2010 சனிக்கிழமை காலை 10 மணிக்கு பலாலி ஆரோக்கிய மாதா ஆலயத்தை சேர்ந்த மக்களாகிய நாம் எமது ஆலயம் சென்று விழா கொண்டாடவுள்ளோம். இதற்கு பாதுகாப்புப்படையினரின் அனுமதி கிடைத்துள்ளது. எனவே இத் திருவிழா திருப்பலியில் ஆரோக்கிய அன்னையின் பரிந்துரையும் இறைவனுடைய ஆசீரையும் பெற்றுக்கொள்ளுமாறும் எமது சொந்த மண்ணில் இருபது வருடங்களின் பின் கால் பதிக்கும் எங்கள் மகிழ்ச் சியில் பங்கு கொள்ளுமாறும் தங்களை அன்புடன் அழைத்து நிற்கிறோம்.

குறிப்பு:-பங்கு கொள்ள விரும்பும் மக்கள் சனிக்கிழமை காலை 6.30 மணிக்கு தொண்டைமானாறு கடற்கரைச் சந்தியில் ஒன்று கூடுமாறு வேண்டி நிற்கின்றோம்.

ஆலய சபை,
ஆரோக்கிய மாதா ஆலயம்
பாலாலி.

(1379)


## வெளிநாட்டு பல்கலைக்கழகங்கள் இலங்கையில் நிறுவப்படக்கூடாது

### அனைத்துப் பல்கலை. மாணவர் ஒன்றியம் கோரிக்கை


(கொழும்பு)

வெளிநாட்டு பல்கலைக்கழகங்கள் இலங்கையில் நிறுவப்படக்கூடாது என அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் கோரிக்கை விடுத்துள்ளது.

வெளிநாட்டு மற்றும் தனியார் பல்கலைக் கழகங்களை நிறுவ உத்தேசித்துள்ளதாக உயர் கல்வி அமைச்சு வெளியிட்டுள்ள கருத்திற்கு பல்கலைக்கழக ஒன்றியம் கடும் ஆட்சேபத்தை வெளியிட்டுள்ளது.

வெளிநாட்டு பல்கலைக்கழகங்களை நிறுவும் யோசனைத் திட்டம் நியாயமற்றதெனவும் இதனால் உள்நாட்டு மாணவர்கள் பாதிக்கப்படக்கூடும் எனவும் ஒன்றியத்தின் அழைப்பாளர் உந்துல் பிரேமரட்ன தெரிவித்துள்ளார். இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டால் அரசாங்கத்துறையில் பாதிப்பு ஏற்படும் என அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார். (2-4)





512 ஆவது படைப்பிரிவினால் நேற்று நடத்தப்பட்ட யாழ். இந்து ஆரம்ப பாடசாலை மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்குமான மிதிவெடி சம்பந்தமான விழிப்புணர்வு கருத்தரங்கில் சாஜன் மேஜர் மாரசிங்க மிதிவெடி தொடர்பாக விளக்கமளிப்பதையும் நிகழ்வில் கலந்து கொண்ட ஆசிரியர்கள், மாணவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்: என். குமார்)

## கடலில் காணாமல் போன இலங்கையர் குறித்த விசாரணைகளை மேற்கொள்ளவும்

# அவுஸ்திரேலியாவுக்கு அழுத்தம்

(கொழும்பு)

அவுஸ்திரேலிய கடற்பிராந்தியத்தில் காணாமற்போன 5 இலங்கையர்களை காணாமற்போனவர்கள் பட்டியலில் அவுஸ்திரேலிய அரசாங்கம் இணைத்துள்ளது.

இந்த நிலையில் காணாமற் போனவர்கள் குறித்து விசாரணை ஒன்று உரிய முறையில் மேற்கொள்ளப்பட வேண்டுமென பல தரப்பினரும் அவுஸ்திரேலியாவுக்கு அழுத்தம் கொடுத்து வருவதாக அந்நாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

இது தவிர சர்வதேச இராஜதந்திரிகளும், தொலைபேசியினூடாக அவுஸ்திரேலிய அரசாங்கத்தை இது தொடர்பில் கோருவதாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்கள் பயணித்த கப்பலில் இரண்டு வாரங்களிற்கு முன்னர் எரிபொருள் நீர் மற்றும் உணவு போன்றவை தீர்ந்துவிட்டதாக தெரிவிக்கப்பட்டிருந்த போதிலும் அது குறித்து எவரும் நடவடிக்கை எடுக்கவில்லை என குற்றம் சாட்டப்பட்டுள்ளது. (2-3)

# இரதோற்சவம்

(யாழ்ப்பாணம்)

புளியங்கூடல் இந்தன் பதி அருள்மிகு முத்துவிநாயகர் ஆலய இரதோற்சவம் இன்று புதன்கிழமை காலை 10.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

இவ் உற்சவத்தில் சிறப்பு நிகழ்வாக பகல் 11 மணிக்கு பிரம்மஸ்ரீ சிவ.வை.நித்தியானந்த சர்மாவின் ***கஜமுகன் வதம்*** என்னும் விடயம் பற்றி பக்கவாத்திய சகிதம் சங்கீத கதாப் பிரசங்கம் இடம்பெறவுள்ளது. (2-4)

## கிளிநொச்சி மீள்குடியேற்றப் பகுதிகளில் பாடசாலைகளை ஆரம்பிக்க நடவடிக்கை

(கொழும்பு)

அண்மையில் மீள்குடியேற்றம் இடம் பெற்ற கண்டாவளை மற்றும் பெரியகுளம், முரசுமோட்டை முதலான பகுதிகளில் பாடசாலைகளை ஆரம்பிப்பதற்கு துரித நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கடந்த யுத்தத்தின் போது இடம்பெயர்ந்த இப்பகுதி மக்கள் செட்டிக்குளம் மெனிக்பாம் முகாம்களிலும் உறவினர், நண்பர்கள் வீடுகளிலும் கடந்த ஒரு வருட காலமாகத் தங்கியிருந்தனர்.

இவர்கள் மீளவும் தமது சொந்தக் காணிகளுக்குக் கொண்டு வரப்பட்டு குடியமர்த்தப்பட்டுள்ளனர். பாடசாலைகளை மீள ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வரும் அதே வேளை கண்டாவளை அரசினர் கிராமிய வைத்தியசாலை மற்றும் கமநல சேவை நிலையம், இலவச ஆயுர்வேத வைத்திய சாலை நீர்ப்பாசன திணைக்கள உபபணிமனை ,கோட்டக்கல்வி பணிமனை முதலானவற்றையும் திறக்க ஆவன செய்யப்பட்டுள்ளது. (2-4)

## சுத்திகரிக்கப்படாத கழிவு நீர் வாய்க்கால்கள்

(கொழும்புத்துறை)

நாவாந்துறைப் பொதுச் சந்தைப் பகுதி மற்றும் கடற்கரை வீதியில் உள்ள கழிவுநீர் வாய்க்கால்கள் சீராக சுத்தம் செய்யப்படாமையினால் கழிவு நீர் தேங்கி நின்று துர்நாற்றம் வீசுவதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

தினமும் சந்தைக்கு வரும் மக்களும் அப்பகுதிகளில் வாழும் மக்களும் பெரும் சுகாதார நெருக்கடிகளை சந்திப்பதாகவும் இதனால் நோய்கள் பரவக்கூடிய சூழ்நிலை காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (2-7)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

### வெற்றிலை

Botanical Name-Piper betle
Family - Piperaceae
Engl- Betel
Sinh- Bulath

பலபருவ படர்கொடி; ஆண், பெண் தாவரங்கள் தண்டு தடிப்பானது; வேற்றிடவேர்கள் மூலம் தொற்றிப் படர்வது; இலைகள் 10-20 செ.மீ நீளமுடையவை; அகன்ற முட்டை வடிவானது; சற்றே இதய வடிவானது; நுனி நீண்டது; ஒளிரும் பச்சை நிறமுடையது; அலைக்காம்பு தடித்தது; 2-2.5 செ.மீ நீளமானது; ஆண்மஞ்சரி அடர்ந்தது; பெண்மஞ்சரி நீளமானது; தொங்குவது; கனிகள் அரிதாக உருவாகின்றன. பலவகைகள் விவரிக்கப்பட்டுள்ளது.

**பரம்பலும் இனவிருத்தியும்**

வெப்பமான இடங்களிலும் யாழ் மாவட்டத்தில் சதுப்பு நிலங்களிலும் பயிரிடலாம். வெற்றிலை மலேசிய நாட்டுக்குரிய கொடியாகும். தண்டு துண்டங்கள் மூலம் இனவிருத்தி செய்யலாம்.

**மருத்துவப் பயன்கள்**

*அரை டம்ளர் அளவு தேங்காயெண்ணெயை ஒரு சிறிய சட்டியில் விட்டு 5 வெற்றிலையை அதில் கிள்ளிப் போட்டு அடுப்பில் வைத்து, இலை முழுவதும் சிவக்கும் வரை காயவைத்து இறக்கி அதை ஒரு சீசாவில் விட்டு வைத்து காலை, மாலை பாதித்த இடத்தை சுத்தம் செய்து இந்த எண்ணெயைத் தடவி வந்தால் பற்றுபடை, சொறி, சிரங்கு இவைகள் குணமாகும்.

* தலைவலி நீங்க வெற்றிலையைக் கசக்கி சாறு எடுத்து அந்தச் சாற்றில் சிறிதளவு எடுத்து அதில் சிறிதளவு கற்பூரத்தைச் சேர்த்துக் குழப்பி வலியுள்ள இடத்தில் தடவினால் தலை வலி உடனே குணமாகும்.

* வெற்றிலையைத் தேவையானளவு எடுத்து அதன் மேல் வேப்பெண்ணையைத் தடவி தண லில் வாட்டி வீக்கமுள்ள இடத்தில் வைத்துக் கட்டினால் வீக்கம் வாடும்.

* இரண்டு வெற்றிலையை எடுத்து அதில் ஒன்பது மிளகை மடித்து வாயில் போட்டு நன்றாக மென்று விழுங்கினால்தேள்விடம் நீங்கும்.

* வெற்றிலைச்சாறு ஒரு டம்ளர், குப்பைமேனியிலைச்சாறு ஒரு டம்ளர், நொச்சியி



லைச்சாறு ஒரு டம்ளர், பொடுதலைச்சாறு ஒரு டம்ளர், இரண்டு டம்ளர் வேப்பெண்ணெய், மிளகு, வேர்க்கொம்பு (சுக்கு), வாய் விளங்கம் ஒவ்வொன்றும் 50 கிராம் வீதம் எடுத்து போட்டு அடுப்பில் வைத்து சாறு, எண்ணெய், இலைகள் எல்லாம் ஒன்றாகச் சேர்த்து நன்றாகக் காய்ச்சி மருந்து சிவந்து வரும் சமயம் கீழே இறக்கி வைத்து ஆறிய பின் எண்ணெயை மட்டும் வடித்து ஒரு சீசாவில் விட்டு வைத்துக் கொண்டு வாராவாரம் தலைக்கு தேய்த்துக் குளித்து வந்தால் பீனிசம், மண்டைக்குத்து குணமாகும்.

*வெற்றிலையை தேவையான அளவு எடுத்து அதன் மேல் சிற்றாமணக்கெண்ணெயைத் தடவி தணலில் வாட்டி வயிற்றின் மேல் கனமாக ஒட்டிவைத்தால் குழந்தைகளின் வயிற்று உப்பிசம் அடங்கும்.

*வெற்றிலையையும் துளசியிலையையும் சம அளவு எடுத்து கசக்கிப் பிழிந்து சாறு எடுத்து தேக்கரண்டியளவு சாற்றில் அரைத் தேக்கரண்டியளவு தேன் சேர்த்து கலந்து உள்ளுக்கு கொடுத்தால் குழந்தைகளின் வயிற்றுப்பிசமும் , சளியும் தீரும்.

*வெற்றிலையை நைத்துச் சாறு எடுத்து 10 துளியளவு ஒரு சங்கு நிறைய வெந்நீர் விட்டுக் கலக்கி குழந்தைகளுக்கு உள்ளுக்குக் கொடுத்துவிட்டால் குழந்தைகளுக்கு ஏற்படும் காய்ச்சல் குணமாகும்.

*வெற்றிலையை தணலில்வாட்டி மார்பின் மேல் வைத்து கட்டிவந்தால் தாய்ப்பால் நன்கு சுரக்கும்.

*முற்றின வெற்றிலையை நைத்து சாறு எடுத்து 60 மில்லி சாற்றுடன் 3 மிளகு அதேயளவு சுக்கு இலைகளையும் தேக் கரண்டியளவு தேனையும் சேர்த்துக்கொடுத்தால் ஆஸ்மா தணியும்.

வெற்றிலையைத் தட்டிச்சாறு எடுத்து அதில் 3 தேக்கரண்டியளவும் இஞ்சிச்சாறு 3 தேக்கரண்டியளவும் சேர்த்து ஒரு பாத்திரத்தில் விட்டுவைத்தால் அது தெளியும். அடியில் சுண்ணாம்பு நீர் தேங்கி இருக்கும். சாற்றை மட்டும் இறுத்துக் கொடுக்க வேண்டும். காலை, மாலையாக இருவேளை கொடுத்து வந்தால் நெஞ்சுச்சளி, தடிமன் குணமாகும்.

*பேய்மிரட்டியிலை (கிலுகிலுப்பை), வெற்றிலை, நல்வேளை இலைகள் ஒவ்வொன்றும் கைப்பிடியளவு எடுத்து அம்மியில் வைத்து 3 தேக்கரண்டியளவு ஓமம் சேர்த்து நன்றாக நைத்து கசக்கிப் பிழிந்து சாறு எடுத்து துணியில் வடிகட்டி வசம்பை சுட்டு உரைத்து 130 மி. கி அளவும் பெருங்காயத்தை சுட்டு 130 மி.கி அளவு சேர்த்து காலை, பகல் மாலை ஆக 3 வேளை 5-10 மில்லி அளவு கொடுக்க குழந் தைகட்கு ஏற்படும் மந்தரோகம் தீரும்.

டாக்டர் திருமதி விவியன் சத்தியசீலன் (M.D.C.S.)
சிரேஷ்ட விரிவுரையாளர், சித்தமருத்துவத்துறை,
யாழ். பல்கலைக்கழகம், கைதடி.

குறிப்பு : வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு, புகையிலை சேர்த்து மென்றுவரும் பழக் கத்தால் நோய்கள் பல உண்டாகலாம். ஆனால் அக்கெடுதியானது பாக்கு, சுண்ணாம்பு, புகையிலையால் தான் ஏற்படும். வெற்றிலை தனித்து பல மருத்துவப் பண்புகளைக் கொண்டுள்ளதால் முற்குறிப்பிட்ட மருத்துவப் பயன்களின் அடிப்படையில் பயன்படுத்திவரின் பல நன்மைகளை பெற முடியும்.

*வெற்றிலை சாறு 10 மில்லி அளவு காய்ச்சிய பசுப்பால் 1 டம்ளரில் கலந்து சிறிதளவு சீனியும் சேர்த்து அருந்த சிறுநீர் நன்கு வெளிப் படும்.

*வெற்றிலைச் சாறு 1 தேக்கரண்டி தேன் 1 தேக்கரண்டியுடன் கலந்து அருந்த உடற்பலத்தை உண்டாக்கும். இவ்வாறு இருநாட்களுக்கு ஒரு தடவை 40 நாட்களுக்கு எடுக்கலாம்.

COLOMBO COMMERCE RESOURCE CENTRE
கொழும்பு வணிகவள நிலையம்

# முன்னோடிப் பரீட்சை க.பொ.த.உயர் தரம்-2010

## புவியியல்- II (சுற்றாடல் புவியியல்)

நேரம் :-1 மணி

### பகுதி - I

◆ **தரப்பட்டுள்ள எல்லா வினாக்களுக்கும் சரியான விடையினைத் தெரிந்து அதன் இலக்கத்தை அடைப்பிற்குள் எழுதுக.**

(1) பின்வரும் கோள்களுள் எது வெப்பம் கூடியது.
1) புவி 2) செவ்வாய்
3) வெள்ளி 4) புதன் (..........)

(2) மாரிகால சூரிய கணநிலை ஏற்படுவது
1) டிசம்பர் - 21 2) மார்ச் - 21
3) செப்டம்பர் - 23 ஜுன் - 21 (..........)

(3) உடுப்போலி வலயம் காணப்படுவது
1) பூமிக்கும் செவ்வாய்க்கும் இடையில்
2) செவ்வாய்க்கும் வியாழனுக்கும் இடையில்
3) வியாழனுக்கும் சனிக்கும் இடையில்
4) யுரேனஸ்க்கும் நெப்டியூனுக்கும் இடையில்
(..........)

(4) வட அரைப்பகுதியில் பகற்பொழுது நீண்டனவாக இருக்கும் காலம்
1) மார்ச் மாதம் 2) ஜனவரி மாதம்
3) ஜுன் மாதம் 4) டிசம்பர் மாதம்
(..........)

(5) புவியோட்டையும் இடையோட்டையும் பிரிக்கும் எல்லை
1) மொஹோ இடைவெளி
2) கட்டன் பேக் இடைவெளி
3) கொன்றாப் இடைவெளி
4) மாற்றரிப்பு எல்லை
(..........)

(6) கோளவகத்தின் அடர்த்தி
1) 10 2) 5.5
3) 5 4) 12 (..........)

(7) வளிமண்டலத்தின் கோட்பாட்டு ரீதியான எல்லை
1) 10,000km 2) 80,000km
3) 5,000km 4) 8,000km
(..........)

(8) கரைசல் நிலையில் காபனீரொட்சைட்டின் சேமிப்பு அதிகளவு காணப்படுவது.
1) சமுத்திரங்களில் 2) நன்னீர் நிலைகளில்
3) வளியில் 4) பனிக்கட்டி கவிப்புகளில்
(..........)

(9) இன்று காபனீரொக்சைட்டின் செறிவில் ஏற்பட்டுள்ள அதிகரிகப்பானது வருடத்திற்கு எத்தனை வீதமாகவுள்ளது?
1) 0.1 வீதம் 2) 0.3 வீதம்
3) 1 வீதம் 4) 2 வீதம்
(..........)

(10) ஒடுங்குதல் அல்லது உறைநிலைச் செய்முறையின் போது உறிஞ்சப்படும் அல்லது வெளியிடப்படும் அல்லது சேமித்து வைக்கப்படும் வெப்பச்சக்தி அழைக்கப்படுவது
1) இயக்கப் பண்புச் சக்தி
2) நிலைப் பண்புச் சக்தி
3) மறை வெப்பச் சக்தி
4) வெப்பசக்தி (..........)

(11) கதிர்வீசல் எனப்படுவது
1) மூலக்கூறுகளின் தாக்கத்தால் ஊடு பொருளினால் இடமாற்றப்படும் சக்தி
2) வளிமண்டலத்தின் திணிவு திணிவான அசைவினால் கிடையாக இடமாற்றப்படும் வெப்பச்சக்தி
3) ஒரு குறிப்பிட்ட இடத்தில் உருகுதல் அல்லது நீரின் ஆவியாக்கத்தினால் உறிஞ்சப்படும் வெப்பசக்தி
4) வான வெளியூடாக அசையும் அலைகளின் செயன்முறையினால் இடமாற்றப்படும் சக்தி (..........)

(12) படை மண்டலத்தில் பறக்கும் அதிவேக விமானங்களினால் வெளியிடப்படும் NO, $NO_2$ வாயுக்கள்
1) வளியில் $CO_2$ வின் அளவை அதிகரிக்கச் செய்கின்றது.
2) வளியில் $O_2$ வின் அளவை அதிகரிக்கச் செய்கின்றது.
3) $O_3$ படையைத் தேய்வடையச் செய்கிறது.
4) வளியின் காபன் அளவை அதிகரிக்கச் செய்கிறது.
(..........)

(13) திட, திரவ பொருட்களினூடாக செல்லக்கூடிய அலை
1) P அலைகள் 2) S அலைகள்
3) L அலைகள் 4) துணை அலைகள்
(..........)

(14) ஐஸ்லாந்து, அசோறஸ், கலபாகோஸ் தீவுகள் உருவானது
1) அடையல்களின் படிவினால்
2) எரிமலைக் குழம்பின் விளைவாக
3) ஆற்று மணற் படிவுகளால்
4) நிலம் மேல் உயர்த்தப்பட்டதால்
(..........)

(15) பின்வருவனவற்றுள் மலையிடை மேட்டுநிலம் எது?
1) தக்கணம் 2) யுக்கென்
3) சினெக் 4) அலகெனி
(..........)


(16) கேர் சீனியன் கால மடிப்பு மலைகளை மட்டும் கொண்டுள்ள விடை
1) அற்லஸ், அல்ப்ஸ், காக்கஸ்
2) இமயம், பால்கன், அல்தாய்
3) அப்பலாச்சியன், யூரல், டிறாக்கன்ஸ்பேக்
4) அல்ப்ஸ், காக்கஸ், அந்தீஸ்
(..........)

(17) உண்ணாட்டுத் தாழ் நிலங்களுக்கு சிறந்த உதாரணம்
1) லொம்பாடிச் சமவெளி
2) யாங்சிக்கியாங் சமவெளி
3) நுல்லாபார் சமவெளி
4) இந்து, கங்கைச் சமவெளி
(..........)

(18) உலகின் மிக நீளமான அகழி
1) பேரு சில்லி அகழி
2) மரியானா அகழி
3) மிண்டானோ அகழி
4) தஸ்காறோ அகழி (..........)

(19) கண்டச் சரிவுகள் முடிவுறும் இடத்திலிருந்து ஆரம்பமாவது
1) கண்டமேடைச் சாய்வு
2) கண்ட விளிம்பு
3) கண்ட எழுச்சி
4) ஆழ் கடற் சமவெளி
(..........)

(20) கீழேயுள்ள படத்தில் காட்டப்பட்டுள்ள நிலவுருவம்



1) காளான் வடிவப்பாறை
2) பாறைப் பிதிர்வு
3) வட்டக்குகை
4) அமுக்கப் பிளவுப் பள்ளத்தாக்கு
(..........)

(21) மேற்குறிப்பிட்ட நிலவுருவம் ஏற்படக் காரணம்
1) இழுவிசை செயற்பட்டால்
2) அமுக்கவிசை செயற்பட்டால்
3) புறவிசை செயற்பட்டால்
4) கடலரிப்பினால்
(..........)

(22) எரிமலையில் கூம்பு வடிவான எரிமலை உருவாகக் காரணமாக அமைவது.
1) எரிமலைக் குழம்பின் கசிவால்
2) அமில எரிமலைக் குழம்பின் கசிவால்
3) கார எரிமலைக் குழம்பின் கசிவால்
4) சாம்பல் படிவினால் (..........)

(23) பீலி எரிமலை காணப்படும் தீவு
1) யப்பான் 2) ஐஸ்லாந்து
3) மேற்கிந்திய தீவு 4) ஹவாய்
(..........)

(24) பின்வருவனவற்றுள் எது வெப்ப நீரோட்டமாகும்.
1) ஹம்போல்ட் நீரோட்டம்
2) பெங்கு வெலா நீரோட்டம்
3) கலிபோர்னிய நீரோட்டம்
4) குமிரோசிவா நீரோட்டம்
(..........)

(25) "போபோட்" அளவுத்திட்டம் பயன்படுத்தப்படுவது
1) மண்ணின் காரத்தன்மையை அளவிடுவதற்கு
2) தரை உயரத்தை அளவிடுவதற்கு
3) நீரின் வெப்பத்தை அளவிடுவதற்கு
4) காற்றின் வேகத்தை அளவிடுவதற்கு (..........)

(26) இலங்கையின் மழைவீழ்ச்சியின் முக்கியமான இரு வழிகள்
1) பருவக்காற்றுக்களும், மேற்காவுகையும்
2) பருவக்காற்றுக்களும், போன் காற்றுக்களும்
3) பருவக்காற்றுக்களும், தைபூன்களும்
4) மேற்காவுகை நடவடிக்கைகயும், தொனோடாக்களும்
(..........)

(27) அண்மையில் புயல் பாதிப்பு ஏற்பட்ட ஐரோப்பிய நாடுகளை சரியாகக் கொண்டுள்ள விடை
1) ஜேர்மனி, நெதர்லாந்து
2) லக்சம்பேக், பெல்ஜியம்
3) ஸ்பெயின், போர்த்துக்கல்
4) இத்தாலி, கிரீஸ் (..........)

(28) வளிமண்டலத்தில் மெதேன் வாயுவின் செறிவை அதிகரிக்கச் செய்யும் நடவடிக்கை பின்வருவனவற்றுள் எது?
1) தரிசு நிலத்தில் மீள் காடாக்கம்
2) கடல் நீரில் உவர்த்தன்மையை அகற்றுதல்
2) இரைமீட்கும் விலங்குகளின் மந்தை ஆக்கம்
4) இறப்பர் பயிர்ச் செய்கை (..........)

(29) பின்வருவனவற்றுள் அருவித்தாரை தொடர்பான கூற்று
1) காற்றிடையூடாக வீசும் கடும் காற்று
2) பாலைவனத்தில் காணப்படும் பருவகால அருவி
3) காஸ்ட் பிரதேசத்தில் காணப்படும் தரைகீழ் அருவி
4) உயர் அகலக்கோடுகளிற்கு மேல் மேற்கிலிருந்து கிழக்காக வீசும் கடுங்காற்று
(..........)

(30) "ஆசிய கபில முகில்" காணப்படும் இடங்களெனக் கருதப்படுவது.
1) ரஷ்யா, சீனா 2)சீனா, யப்பான்
3) இந்தோனீசியா, மலேசியா 4) இந்தியா, இலங்கை
(..........)

(31) பின்வரும் செயற்பாடுகளுள் எது பௌதிக முறையான வானிலையாலழிதலை உண்டாக்குகின்றது.
1) கரைசல் 2) உறைபனிச் செயற்பாடு
3) நீரேற்றம் 4) ஒக்சியேற்றம்
(..........)

(32) பின்வருவனவற்றுள் எது புவியோட்டின் பௌதிக விசைகளுள் இரண்டு பிரதான விசைகளை சரியாக இனங் காண்கின்றது.
1) உள்விசையும், புறவிசையும்
2) வானிலையாலழிதலும், தின்னலும்
3) உள்விசையும், தின்னலும்
4) வானிலையாலழிதலும், தரமிழப்பும் (..........)

(33) கூழாங்கன்னாக்குகள் ஆக்கப்படுவது
1) காற்றுப்படிவால் 2) அலையின் படிவால்
3) ஆற்றுப்படிவினால் 4) காற்றின் தின்னலினால் (..........)

(34) "தொம்போலா" என்பது
1) காஸ்ட் நிலப்பகுதியின் தின்னல் நிலவுருவம்
2) பாலைவனத்திலுள்ள மணற் குன்றுகள்
3) கண்டப் பனிக்கூட்டி ஆற்றுடன் தொடர்புபட்ட படிதல் நிலவுருவம்
4) பிரதான நிலத்திணிவுடன் மணற் படுக்கையினால் இணைக்கப்பட்டுள்ள பகுதி
(..........)

(35) பின்வருவனவற்றுள் எது மலைப் பனிக்கட்டியாற்றரிப்பினால் உருவாகிறது.
1) கூர் முடி
2) பக்க பனிக்கட்டியாற்றுப்படிவு
3) வண்டல் விசிறிகள்
4) நீள் குன்றுகள்
(..........)

(36) நதியின் முதிர்ச்சி நிலையில் ஏற்படும் பிரதான செயற்பாடு
1) மண் தின்னல் 2) நில இறக்கம்
3) படிதல் 4) உவர்த்தன்மையடைதல்
(........)

(37) பின்வருவனவற்றுள் ஈர நிலங்களின் பாதுகாப்பு பற்றிய ஒப்பந்தம்
1) மொன்றியல் 2)றம்சா
3) நிகழ்ச்சிநிரல் 21 4)பாலி பிரகடனம்
(..........)

(38) சியாற்றல் கூற்று கூறுவதாவது
1) புவி மனிதனுக்குரியது
2) மனிதன் புவிக்குரியவன்
3) நிலம் கூடுதலாக விளைவிக்கப்பட வேண்டும்
4) ஆதிக்குடி மக்கள் பாதுகாக்கப்பட வேண்டும்
(..........)

39) இலங்கையின் எவ்வாற்றுப் பள்ளத்தாக்கில் அதிகளவு மணல் அகழ்ந்தெடுக்கப்படுகின்றன.
1) ஜின் கங்கை
2) பெந்தோட்ட கங்கை
3)களனி கங்கை
4) தெதுறு ஓயா (..........)

40) அமேசன் வடிநிலத்தின் மழைக் காடுகள் அழைக்கப்படுவது
1) காம்பொஸ் 2) செல்வாஸ்
3) பம்பாஸ் 4) லானோஸ் (..........)

---

## பகுதி – II

**நேரம் :-2 மணி**

♦ **"அ" பகுதியிலிருந்து இரு வினாக்களுக்கும் "ஆ" பகுதியிலிருந்து இரு வினாக்களுக்கும் எல்லாமாக நான்கு வினாக்களுக்கு விடை தருக.**

### பகுதி "அ"

1) அ) தரப்பட்டுள்ள உலகப்புறவுருவப்படத்தில் 3 எரிமலை வலயங்களைக் குறித்துப் பெயரிடுக.
(03 புள்ளி)
ஆ) எரிமலைச் செயற்பாட்டால் உருவாகும் நிலவுருவங்கள் மூன்றினை விளக்கப்படத்துடன் விளக்குக.
(06 புள்ளி)
இ) எரிமலை, புவிநடுக்கம் என்பவற்றால் ஏற்படும் விளைவுகள் மூன்றினை உதாரணங்களுடன் விளக்குக
(06 புள்ளி)

2) அ) பனிக்கட்டியாற்றரிப்பின் தின்னற் செயல்களை விபரிக்குக.
(06 புள்ளி)
ஆ) மலைப்பனிக்கட்டியாற்றரிப்பினால் உருவாகும் நிலவுருவங்கள் மூன்றினை விளக்கப்படத்துடன் விளக்குக.
(09 புள்ளி)

3) அ) உயிர்க்கோளம், சாகியம், தனியன், சூழற்தொகுதி, குடித்தொகை மேலே தரப்பட்டுள்ள சொற்பதங்களை பாய்ச்சல் கோட்டுப் படம் மூலம் ஒழுங்கமைத்துக் காட்டுக.
(03 புள்ளி)
ஆ) இயற்கைச் சூழலில் உணவுச் சங்கிலிக்குப் பதிலாக உணவுவலை காணப்படுகின்றமைக்கான காரணத்தை உதாரணங்களுடன் விளக்குக.
(06 புள்ளி)
இ) இயற்கைச் சூழலின் சமநிலையைக் குழப்புவதில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் இரண்டினைக் குறிப்பிட்டு விளக்குக.

4) அ) கெப்பனின் காலநிலைப் பாகுபாட்டில் வரண்ட காலநிலைப் பிரிவுகளைப் பெயரிடுக.
(02 புள்ளி)
ஆ) வழங்கப்பட்டுள்ள உலகப்படத்தில் அவற்றின் பரம்பலைக் குறித்துப் பெயரிடுக.
(06 புள்ளி)
இ) நீர் குறிப்பிட்ட பிரிவுகளில் எவையேனும் ஒரு காலநிலைப் பிரிவினைத் தெரிந்து அக்காலநிலையின் இயல்புகளை விபரிக்குக.
(07 புள்ளி)

### பகுதி "ஆ"

5) அ) இயற்கை அனர்த்தங்கள் அண்மைக்காலங்களில் பல உலக நாடுகளில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளன. அத்தகைய இயற்கை அனர்த்தங்கள் இடம்பெற்ற மூன்று நாடுகளையும் ஏற்பட்ட இயற்கை அனர்த்தங்களையும் குறிப்பிடுக.
(03 புள்ளி)
ஆ) இயற்கை அனர்த்தர்கள் இன்று ஏற்படுத்தி வரும் பாரிய பாதிப்புக்கள் மூன்றினை உதாரணங்களுடன் விளக்குக.
(06 புள்ளி)
இ) இயற்கை அனர்த்தங்களால் ஏற்படும் பாதிப்புக்களை இழிவளவாக்குவதற்கு எடுக்கக்கூடிய நடவடிக்கைகளை இலங்கையில் இடம்பெறும் இயற்கை அனர்த்தமொன்றினை அடிப்படையாகக் கொண்டு விளக்குக.
(06 புள்ளி)

6) அ) நிலையான அபிவிருத்தி என்றால் என்ன?
(03 புள்ளி)
ஆ) நிலையான அபிவிருத்திக்காக பின்பற்ற வேண்டிய உத்திகளை விபரிக்குக.
(06 புள்ளி)
இ) நிலையான அபிவிருத்தியை அடைந்து கொள்வதற்கு அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளுக்கு உள்ள தடைகள் மூன்றினை விவரிக்குக.
(06 புள்ளி)

7) அ) மண் வளமிளப்பதற்கான விவசாய நடவடிக்கைகள் எவ்வாறு செல்வாக்கு செலுத்துகின்றன என்பதை விவரிக்குக.
(06 புள்ளி)
ஆ) மண் பாதுகாப்பின் நோக்கங்கள் இரண்டினைக் குறிப்பிட்டு அந்நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக எடுக்க வேண்டிய நடைமுறைகளை உதாரணங்களுடன் விளக்குக. (09 புள்ளி)

8) அ) இலங்கையின் கடற்கரையோர வலயங்களில் நிகழும் முருகைக்கல் அகழ்வினால் ஏற்படும் பாதக விளைவுகளை விபரிக்குக.
(06 புள்ளி)
ஆ) இலங்கையில் முருகைக்கற் பாறைகளை பாதுகாக்க எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள் பற்றி ஆராய்க.
(09 புள்ளி)


# களம் பல கண்ட யாழ் கோட்டை

31

## ஈழயுத்தம் -2

**செங்கை ஆழியான்**

மற்றப் பிரிவினர் வேலணை சாட்டி ஊடாக மண்கும்பானை வந்தடைந்தனர். மண்கும்பானிலிருந்து இரண்டாகப் பிரிந்து கடற்கரையோரமாக ஒரு பிரிவினர் கீரிமுனைப் பகுதியூடாக மண்டைதீவை அடைந்தனர். மறுபகுதியினர் வீதியூடாக மண்டைதீவை அடைந்தனர். இராணுவம் சென்ற பகுதிகளில் உயிர்ச்சேதங்களும் சொத்தழிவுகளும் ஏற்பட்டன. நாராந்தனை, சரவணை, ஊர்காவற்றுறை மக்களை சுருவில் சென். மேரிஸ் தேவாலயத்திற்கு அகதிகளாகச் சென்று தங்குமாறு இராணுவத்தினர் ஹெலி மூலம் துண்டுப்பிரசுரங்கள் போட்டனர்.



மக்கள் அங்கு சென்று தங்கப்பயந்து உடுத்த உடுப்புக்களுடன் சாட்டி மாதா கோயிலில் அடைக்கலம் புகுந்தனர். மக்களில் சிலர் நாரந்தனை தேவாலயத்தில் தங்கினர். அவ்விடத்தில் பொம்பர் குண்டு வீச்சு நிகழ்ந்ததால் அங்கிருந்து அகன்று சுருவிலிற்குச் சென்றனர். சாட்டி மாதா கோயிலில் முப்பதாயிரம் மக்கள் வரையில் அகதிகளாகத் தங்கியிருந்தனர்.

இராணுவம் கண்ணில் கண்ட மக்களைச் சுட்டுக் கொண்டும் வெட்டிச்சரித்துக் கொண்டும் முன்னேறி வருகிறது என்ற வதந்தி, ஓரளவு உண்மையும் விச ஜுரமாகப் பரவியதால் மண்கும்பானுக்கும் ஊர்காவற் துறைக்கும் இடையில் வாழ்ந்த மக்கள் இடம் பெயர்ந்தோடினர். சாட்டி மாதா கோயிலில் ஆயிரக் கணக்கான மக்கள் அகதிகளாக தங்கியிருந்த போது, ஹெலி சுட்டதில் ஆறு பேர் வரையில் அவ்விடத்தில் பலியாக நேர்ந்தது. அதனால் இயலுமானவர்கள் பலர் இரவோடிரவாக வள்ளங்களில் ஏறி அராலித் துறையூடாக யாழ்ப்பாணத்திற்குச் சென்றனர்.

25 ஆம் திகதி பொம்பர்கள் தீவுப்பகுதி கட்டடங்களை அழிப்பதில் ஈடுபட்டன. வேலணைத் தீவில் இருந்த சொற்ப கட்டடங்களும் விமானக் குண்டு வீச்சினால் தரைமட்டமாகின. மண்கும்பான் பிள்ளையார் கோவில் தாக்கப்பட்டு சேதமடைந்தது.

மண்டைதீவை அடைவதில் பலத்த சிரமங்களை இலங்கை இராணுவம் எதிர் நோக்கியது. மிதிவெடிகளும் நிலக்கண்ணி வெடிகளும் அவர்கவுக்கு பலத்த சேதத்தை ஏற்படுத்தின. புலிகளின் பலத்த எதிர்ப்பினையும் சமாளிக்க நேர்ந்தது.

எனினும் இராணுவத்தினர் மூர்க்கமாகப் மண்டைதீவுக்குள் புகுந்தனர். வடபுறமாக பாதையூடாகவும் தென்புறமான கடற்கரையூடாகவும் மத்திய பரவையூடாகவும் இராணுவம் மண்டைதீவுக்குள் சுட்டுக்கொண்டு புகுந்தது. மண்டைதீவுக் கடற்பரப்பில் நிறுத்தப்பட்டிருந்த கடற்கப்பல்கள் பீரங்கிகளைக்கக்க, விமானங்கள் குண்டுகளைப் பொழிய இராணுவம் மண்டைதீவிற்குள் பிரவேசித்தது. மண்டைதீவு மக்கள் பொறிக்குள் அகப்பட்ட நிலையினராயினர். பண்ணைத்தாம் போதியூடாகவோ, வள்ளங்கள் ஊடாக குருநகர், பாசையூருக்கோ செல்ல முடியாதவாறு வியூகத்தினுள் அகப்பட்டுக் கொண்டனர். சின்னத் தீவிற்கு அப்பால் நின்றிருந்த கடற் கப்பல் உமிழ்ந்து கொண்டிருந்த பீரங்கிகள் , யாழ்ப்பாணப்பரவைக்கடலை வள்ளங்களால் கடக்க இடமளிக்கவில்லை. கோட்டைப்பக்கமிருந்து ஏவப்பட்ட செல்கள் பண்ணைத்தாம் போதியில் கால் வைக்கவிடவில்லை.




மண்டைதீவைச் சேர்ந்த 1100 குடும்பங்களும் அல்லற்பட்டன. ஒரு விதமாக அல்லைப்பிட்டி பறைவக்கடலைக் கடந்து குழந்தைகள், பிள்ளைகள், பெண்கள், ஆண்கள் எனத்துணிந்தவர்கள் வேலணைத் தீவிற்குள் புகுந்தனர். மண்கும் பானில் அடைக் கலம் புகுந்தனர். நோயாளர், வயோதிபர், இடம்பெயர முடியாதவர்கள், சொத்து சுகம் என அவற்றை விட்டு வெளியேற விரும்பாதவர்கள் மண்டை தீவில் தங்கி , இராணுவத்தினரின் துப்பாக்கிகளுக்கு இரையாகினர். மண்டைதீவில் இருந்து இடம்பெயர்ந்தவர்கள் மண்கும் பான் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை, பாபா பள்ளிவாசல்,பெரிய பள்ளி வாசல் , சாட்டி மாதா கோயில் என்பனவற்றில் அகதிகளாக தஞ்சம் புகுந்தனர்.

மண்டைதீவிற்குள் பிரவேசித்த இராணுவத்தினர் மண்டைதீவுப் பிள்ளையார் கோவிலில் தஞ்சம் புகுந்திருந்த 6 ஆயிரம் மக்களை வரிசையாக நிற்க வைத்தனர். ஏசினர். சிலரைத் தாக்கினர். 50 ஆண்களை கைது செய்து அழைத்துச் சென்றனர். மண்டைதீவிலுள்ள பல வீடுகள் தகர்த்தப்பட்டன. குடிசைகள் அனைத்தும் எரியூட்டப்பட்டன. வீடுகளிலிருந்த பெறுமதியான பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டன. வாகனங்கள் எரிக்கப்பட் டன. மோட்டார் சைக்கிள்கள் கள வாடப்பட்டன .பங்கர்களுக்குள் இருந்த பலர் சுட்டுக் கொல்லப் பட்டனர்.அல்லைப்பிட்டிப் பகுதியில் 20 பேர் வரை கொல்லப்பட்டனர். மண்டைதீவின் தெற்குப் பகுதி வீடுகள் அதிகம் எரிக்கப்பட்டன. வேலிகள், மதில்கள் அனைத்தும் தகர்க்கப்பட்டன, எரிக்கப்பட்டன. அல்லைப்பிட்டி மகாவித்தியாலயப் பிரதேசம் புல்டோசரினால் இடித்துத் தகர்க்கப்பட்டது. மண்டைதீவுக் கத்தோலிக்க தேவாலயப் பகுதி அதனைச் சுற்றியிருந்த வீடுகள் , கட்டடங்கள் என்பன விமானக் குண்டு வீச்சினால் நிர் மூலமாக்கப்பட்டன.



26 ஆம் திகதி மண்டைதீவு சித்தி விநாயகர் கோயில் கொடியேற்றம் நிகழவிருந்தது. இராணுவம் வந்ததால் திருவிழா நடைபெறவில்லை. இராணுவ ஆக்கிரமிப்பால் அங்கு சங்காரம் நிகழ்ந்தது. கோயிலின் குடையை இராணுவத்தினர் சென்றி நிழலாகப் பாவித்தனர். செத்துப் போன ஆடு, மாடுகளை திருமஞ்சனக் கிணற்றில் தூக்கிப் போட்டனர். கோயில் தேர் திருப்பணி மரங்கள் எரிக்கப்பட்டன.திருவிழாவிற்காக வாங்கிய பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டிருந்தன. மண்டைதீவு புனித பேதுருவானவர்ஆலயம் விமானத் தாக்குதலால். பலத்த சேதமடைந்தது. நற்கருணை நாதர் பெட்டி உடைக்கப்பட்டு பொருட்கள் களவாடப்பட்டிருந்தன.

அல்லைப்பிட்டி அலுமினியத் தொழிற்சாலைச் சுற்றாடலில் இலங்கை இராணுவம் பலமான முகாம் ஒன்றினை அமைத்திருந்தது.பனை மரங்கள், மின்சாரக் கம்பங்கள் என்பன தறிக்கப்பட்டு உயரமான சென்றிகள் அமைக்கப்பட்டன. அன்று மாலையே அவ்விடத்தில் ஹெலி வந்திறங்கக்கூடியளவிற்கு முகாம் விஸ்தரிக்கப்பட்டது.



மண்டைதீவு

அல்லைப்பிட்டிக் கிராமத்தில் எல்லை வரை அதாவது செட்டிக்கா வரை இராணுவ சென்றிகள் அமைக்கப்பட்டன.

(தொடரும்)

# நல்லூர் இராசதானியை உரிய முறையில் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்படும்

## அமைச்சர் டக்ளஸ் உறுதி உரை

நல்லூர் இராசதானியை உரிய முறையில் பாதுகாக்க எதிர்காலத்தில் அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படுமென ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா உறுதியளித்துள்ளார்.

யாழ் நல்லூர் பகுதியில் புதிதாக உல்லாச விடுதி அமைப்பது தொடர்பாக நேற்று முன்தினம் யாழ் திவ்ய ஜீவன சங்க மண்டபத்தில் நடைபெற்ற கலந்துரையாடலில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் மேற்கண்ட வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

நல்லூர்ப் பகுதியில் புதிதாக உல்லாச விடுதி அமைப்பது தொடர்பாக உடனடியாக முடிவுகள் எதனையும் எட்ட முடியாது. இவ் விடயத்தில் மிக ஆழமாக ஆராய வேண்டியுள்ளது.

காழ்ப்புணர்ச்சியின் அடிப்படையில் முடிவுகள் எட்டப்பட முடியாது என்பதுடன் புதிய விடுதி அமைப்பது தொடர்பில் அதன் சாதக பாதக நிலை குறித்தும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

1970 ஆம் ஆண்டு யாழ் நல்லூர் பகுதி புனித பிரதேசமாக்கப்பட்டது என்ற தகவல் உண்மைக்குப் புறம்பான பிழையான தகவல் இவ்விடயம் தொடர்பாக நாம் பரிசீலிக்க உள்ளோம் என்றும் அமைச்சர் தெரிவித்தார். (ச-5)

# இனப்படுகொலையை தாம் ஒருபோதும் ஆதரிக்கவில்லை

## சஜித் பிரேமதாஸ தெரிவிப்பு

(கொழும்பு)



இனங்களுக்கு எதிரான படுகொலையை தாம் ஒரு போதும் ஆதரித்ததில்லை என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாஜா தெரிவித்துள்ளார்.

இந்த நாட்டில் அனைத்து இனங்களுக்கும் அவரவர்களுக்குரிய பங்கு சமமாக வழங்கப்படவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

தமிழ் மக்களுக்கு உரிய அதிகாரம் வழங்கப்படக்கூடிய பஞ்சாயத்து முறையான தீர்வை தான் விரும்புவதாகவும் எனினும் வேறு எந்தப் பெயர்களைக்கொண்டும் தாம் அழைக்க விரும்பவில்லை என்றும் அவர் மேலும் கூறினார். (2-4)

# உலகை ஆளப்போகும் அந்நியன்?



## வேற்றுக்கிரகவாசிகள் பூமியை வசப்படுத்தலாம்!

**கே**ம்ப்ரிட்ஜ் இயற்பியல் விஞ்ஞானி ஸ்டீ பன் ஹொக்கிங் வீசிய இந்த அதிர்ச்சிக் குண்டு உலகையே அதிரவைத்துள்ளது. ஏதோ ஹாலிவுட் சினிமா வசனம் போல உள்ளதே என்று நினைத்தால் ஏமார்ந்து போவீர்கள்.

"உண்மையிலேயே வேற்றுக்கிரகவாசிகள் இருக்கலாம். அவர்கள் மனிதர்களை விட புத்தி சாலிகளாக இருக்கலாம். மிக நவீன விண் வெளி வாகனங்களைப் பயன்படுத்தலாம்" என்று சொல்லியிருக்கும் ஸ்டீபன் "அவர்களால் மனி தர்களுக்கு பேராபத்து ஏற்படலாம்" என்று பீதியைக் கொடுத்துள்ளார்.




வேற்றுக்கிரகவாசிகள் இருக்கிறார்களா? அவர்கள் எங்கே இருக்கிறார்கள்? எப்படி இருப்பார்கள்? என்ன மொழி பேசுகிறார்கள்? இப்படி பல நூறு ஆண்டுகளாகவே கேள்விக் கணைகள் எழுப்பப்பட்டு வருகின்றன.

தமிழ் சினிமா முதல் ஹாலிவுட் வரை வேற்றுக்கிரக அவதா(ர்) ரங்கள் திரையில் கற்பனையாக வந்து சென்றுள்ளன. விட்டலாச்சார்யா கதைகளில் பறக்கும் வாகனத்தில் பறந்து வரும் கொடூர வில்லன் நாயகியை தூக்கிச் சென்றுவிடுவார். தேவதைகளும் கடல்கன்னிகளும் நாயகனுக்கு உதவி செய்ய அவரும் பறக்கும் வாகனத்தில் சென்று பலம் பொருந்திய வில்லனைத் துவம்சம் செய்து நாயகியை மீட்பார்.

இன்றுவரை கற்பனையாக புனையப்பட்ட இந்தக் கதைகளுக்கு உயிர் கொடுத்தால் எப்படியிருக்கும்? அப்படிச் சொல்லியே அனைவரையும் அலற விட்டுள்ளார் ஸ்டீபன்.

அறிவியலுக்கு சம்பந்தமே இல்லாத ஒருவர் இதைக் கூறியிருந்தால் காது கொடுத்துக் கேட்காமல் விட்டுவிடலாம். சொன்னவர் சாதாரணமான ஆள் அல்ல... அறிவியலில் பல கண்டுபிடிப்புகளை நிகழ்த்தி நவீனகால *ஐன்ஸ்டீன்* என்று பெயரெடுத்தவர். இவர் சொன்னால் எல்லாமே சரியாகத்தான் இருக்கும் என்கிற அளவு நம்பிக்கையானவர் அப்படியானால்...?

உலகில் பல நாடுகளிலும் *யு.எஃப்.ஓ.* என்றழைக்கப்படும் அடையாளம் காண முடியாத பறக்கும் பொருளைப் பார்த்ததாக பல்வேறு காலகட்டங்களில் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. இந்தப் பறக்கும் பொருளில் வேற்றுக் கிரகவாசிகள் வந்து சென்றதாக நம்பப்படுகிறது.

மெக்சிகோ, இங்கிலாந்து, அமெரிக்கா, பெல்ஜியம், இந்தியா உட்பட பல நாடுகளும் வேற்றுக்கிரகவாசிகளின் பயணத்திற்குத் தப்பவில்லை!

1431 இல் கம்போடியாவில் அங்க்கார் என்ற ஊரில் ஒட்டுமொத்த மக்களும் திடீரென மாயமானார்கள். எப்படி எங்கே என்பதைக் கண்டு பிடிக்கவே முடியவில்லை. ஏராளமான இராட்சத பறக்கும் வாகனங்களில் இரவோடு இரவாக வேற்றுக்கிரகவாசிகள் இறங்கி மக்களை அள்ளிக்கொண்டு சென்று விட்டார்கள் என்று பலரும் நம்பினர்!

2009 ஜனவரி 14 அன்று நடந்த ஒரு சம்பவம் சிரிப்பை வரவழைக்கும். எதியோப்பியாவில் பறக்கும் வாகனத் தில் வந்த வேற்றுக்கிரகவாசிகளை அரசு அதிகாரிகள் அழைத்துச் சென்று பேச்சுவார்த்தை நடத்தினர் என்று நாடு முழுக்க பரவியது செய்தி.

சூடேறிய எதிர்க்கட்சியினர் மேடை போட்டு ஆளுங்கட்சியைக் கிழித்தனர். இப்படியெல்லாம் கூட நடக்குமா என்று யூகிக்கக் கூட முடியாத அளவு வேற்றுக்கிரகவாசிகள் பற்றிய சிந்தனை மக்கள் மனதில் ஓடிக்கொண்டே இருக்கிறது. மக்கள் நம்புவது இருக்கட்டும் விஞ்ஞானி ஸ்டீபன் எப்படி நம்புகிறார்?

இந்த உலகம் 10 ஆயிரம் கோடிக்கும் மேற்பட்ட பால் வெளி மண்டலங்களை உள்ளடக்கியது. ஒவ்வொரு மண்டலத்திலும் கோடிக்கணக்கான நட்சத்திரங்கள் உள்ளன. பூமி என்ற கிரகத்தில் உயிரினங்கள் இருப்பதைப் போல மற்ற கிரகங்களிலும் இருக்க வாய்ப்புண்டு. பூமியில் பல ஆயிரம் கோடி ஆண்டுகளுக்கு முன் டைனோசர் போன்ற விலங்குகள் ஆதிக்கம் செலுத்தின.

அது போன்ற உயிரினங்கள் வேற்றுக் கிரங்களில் இப்போதும் இருக்கலாம். இவற்றில் பல மனிதர்களைவிட பலம்மிக்கதாக இருக்கலாம். மற்ற கிரகங்களில் உள்ள வளங்களைப் பயன்படுத்த மனிதர்கள் எப்படி ஆராய்ச்சி செய்கிறார்களோ அதைப் போல அவர்களும் பூமியைத்தேடி வரலாம்.

பிரமாண்டமான பறக்கும் வாகனங்களில் அலைந்து கொண்டிருக்கலாம். வளம் நிறைந்த பூமியைப் பார்த்தால் சும்மா விடுவார்களா? அனைத்தையும் வசப்படுத்தி மனிதர்களை அடிமையாக்கிவிடுவார்கள் என்று சொல்லியிருக்கிறார் ஸ்டீபன்.

### எப்படி நம்புவது?

☆1882 இல் வால்டர் மாவுக்தர் என்ற அமெரிக்க வானியல் ஆய்வாளர் கிரீன்விச் வான் ஆய்வகத்தில் இருந்தபோது பறக்கும் வாகனம் விண்ணில் பறந்து வந்து விண்ணிலேயே மறைந்தது என்றும் அதன் வேகம் மிக மிக அதிகம் என்றும் கூறியிருக்கிறார்.

☆ *பிற கிரகங்களில் உயிர் வாழ்வது மட்டுமல்ல ... உறுதியாக நம்பத்தகுந்த ஒன்று* என்று அமெரிக்க வானியல் விஞ்ஞானி ஸ்பென்ஸர் ஜோன்ஸ் எழுதிய *முடிவுறா உலகம்* நூல் தெரிவிக்கின்றது.

☆ கடந்த 100 ஆண்டுகளாகவே வேற்றுக் கிரகவாசிகளைத் தேடி வரும் விஞ்ஞானிகள் உலகில் இருக்கவே செய்கின்றனர். இப்போது சனிக்கிரகத்தின் துணைக்கோளான டைட் டனில் உயிரினம் இருக்க வாய்ப்பு இருப்பதாக நம்புகின்றனர்.

☆ சமீபத்தில் அமெரிக்க நாசா விஞ்ஞானிகள் சூரிய மண்டலத்துக்கு வெளியே இன்னொரு சூரிய கிரகத்தின் துணைக்கோளைக் கண்டுபிடித்துள்ளனர். அதை *ஸ்பிச்சர் ஸ்பேஸ்* என்ற அதிநவீன தொலைநோக்கி மூலம் ஆய்வு செய்தனர்.

☆ அத்துணைக்கோளின் ஒரு பகுதியில் நீர் ஆவியாக இருப்பது தெரியவந்துள்ளது. எனவே அங்கு நீரும் இருக்க வேண்டும். உயிரினங்களும் இருக்க வேண்டும் என்று உறுதியாக நம்புகின்றனர். அந்த துணைக் கோளின் பெயர் எச்டி 189733.

☆ வால் நட்சத்திரங்களில் காணப்படும் விண்துகள்களிலும் உயிரினத் தோற்றத்துக்கான அடிப்படை மூலக்கூறுகள் இருப்பதாக விஞ்ஞானிகள் கூறுகின்றனர். இந்த உயிரினங்கள் மனிதர்கள் போலவோ மிருகங்கள் போலவோ இருக்க வேண்டும் என்கின்றனர். இப்படி நிறைய உதாரணங்கள் உண்டு.

வேற்றுக்கிரகவாசிகள் மனிதர்கள் போலவே இருந்து என்றாவது ஒரு நாள் நாம் வாழும் பூமிக்கு வந்தால் கைகொடுத்து வரவேற்போம். மாறாக டைனோசர் போன்ற வடிவில் வந்தால் நாம் வேறு கிரகத்திற்கு வெளியேற வேண்டியது தான்.



## அந்நியன் வருகை

*1947 இல் வோஷிங்டனில் உள்ள மவுண்ட் ரீனர் அருகில் மிகப்பிரகாசமான இனம் தெரியாத ஒரு பொருள் மவுண்ட் ஆடம் நோக்கிப் பறந்ததாகக் கூறியிருக்கிறார் கென்னத் ஆர்னொல்ட் என்ற தொழிலபதிபர்.*

*1948 இல் வோஷிங்டன் அருகே இடாஹோ என்ற இடத்தில் ஒரே நேரத்தில் 9 தட்டுகள் பறந்ததாக பரபரப்பு ஏற்பட்டது.*

*1970 ஆம் ஆண்டு வரை வானில் பார்த்தாகக் கூறப்பட்ட பொருட்களை "பறக்கும் தட்டுகள்" என்றே அழைத்தனர். "ப்ராஜெக்ட் ப்ளூ" என்ற ஆராய்ச்சியின் முடிவில் இவற்றுக்கு "யுஎஸ்ஓ" என்று மாற்றிப் பெயரிட்டனர்.*

*1980 இல் அமெரிக்காவில் வேற்றுக்கிரகவாசிகள் மனிதர்களைக் கடத்தப்போவதாக பரபரப்பு ஏற்பட்டது.*

*1989 இல் பெல்ஜியத்தில் மிகக் குறைந்த உயரத்தில் மக்கள் வசிப்பிடத்துக்கு அருகே கறுப்பு முக்கோண வடிவில் பறந்து வந்த அந்நிய வாகனம் சலசலப்பை ஏற்படுத்தியது.*

*கடந்த 3 ஆண்டுகளில் இந்தியாவின் விசாகப்பட்டிணம், பெங்களூர், புனே, கோவை பகுதிகளில் பறக்கும் வாகனங்களைப் பார்த்ததாகவும் விசாகப்பட்டினத்தில் விசித்திர உருவம் கடலுக்குள் இறங்கி ஓடியதாகவும் தகவல்கள் உலா வந்தன.*

*பறக்கும் வாகனங்கள் பற்றி அமெரிக்க விமானப் படை நடத்திய ஆய்வில் 55 சதவிகித நிகழ்வுகளை விளக்கவோ கண்டுபிடிக்கவோ முடியவில்லை.*

## உலகைச் சுற்றி

AROUND THE WORLD

ஆர்.யூ.பாலமுருகன்

## முட்டை → மாளிகை





கோழியில் இருந்து முட்டை வந்ததா? முட்டையில் இருந்து கோழி வந்ததா? முட்டையை வைத்து இப்படிக் கேள்விகள் கேட்பது இருக்கட்டும் ஒருபுறம். பெல்ஜியத்தில் உள்ள டி.எம்.வி.ஏ. கட்டுமான நிறுவனம் முட்டை வடிவில் வீடு கட்டி அசத்தியுள்ளது!

தொடக்கத்தில் முட்டை வடிவில் அலுவலகம் அமைக்கவே முடிவு செய்யப்பட்டது. ஆனால் அது சாத்தியமாகவில்லை. இதன் பின்பே அலுவலகத்திற்குப் பதிலாக வீடு கட்ட முடிவானது. முட்டை வீட்டின் ஒரே கட்டுமானப் பொருள் பொலியஸ்டர் துணி, ஆமாம், இந்த முட்டை வீடு பொலியஸ்டர் துணியாலேயே கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

மரக்கட்டைகளில் முட்டை வடிவில் சட்டங்கள் செய்து, அதை பொலியஸ்டர் துணியால் மூடி இதை அமைத்துள்ளனர்.

இதற்கு ஒன்றரை ஆண்டுகள் தேவைப்பட்டிருக்கிறது. வீட்டில் சமையல் அறை, குளியல் அறை, படுக்கை அறை மற்றும் பொருட்களை வைக்கத் தேவையான அலுமாரி என எல்லா வசதிகளும் உண்டு.

முட்டையின் கூரானபகுதியை மேலே உயர்த்தினால் வீட்டுக் கதவு திறக்கிறது. இந்த முட்டை வீட்டை எங்கு வேண்டுமானாலும் நகர்த்திச் செல்லலாம். ஒரேயொரு கஷ்டம் உயரமாக உள்ளவர்கள் நின்று கொண்டு குளிக்க முடியாது. அவ்வளவு தான்! இனி நிலம் வாங்கி பல இலட்சங்கள் செலவழித்து வீடு கட்டத் தேவையே இருக்காதே!

# ஈரானின் புதிய ஏவுகணை சோதனை

ஈரான் நேற்று முன்தினம் முதன் முதலாக கடலுக்குள் குறைந்த தூரம் சென்று தாக்கக் கூடிய. ஏவுகணை சோதனை நடத்தியது. அதன் பெயர் பாஜா -5. இது சுமார் 75 கி.மீ. தூரம் சென்று இலக்கை தாக்கக்கூடியது.

இதற்கு முன்பு போரின் போது இது பயன்படுத்தப்படவில்லை. தற்போதுதான் முதன் முதலாக வளைகுடா கடலில் தண்ணீருக்குள் ஏவி சோதித்து பார்க் கப்பட்டது. இந்த தகவலை இராணுவ துணை தலைமை அதிகாரி கியோமர்ஸ் ஹெதரி தெரிவித்தார்.

ஏற்கனவே இந்த ஏவுகணை கடலுக்கு வெளியே ஏவி சோதனை நடத்தப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (2-4)



பாகிஸ்தானின் இஸ்லாமாபாத் நகரில் நடைபெற்ற முன்னாள் வெளியுறவுத்துறை அமைச்சர்கள் மற்றும் முன்னாள் வெளியுறவுத்துறை செயலர்களின் கலந்துரையாடலில் சிறப்புரையாற்றிய தற்போதைய வெளியுறத்துறை அமைச்சர் ஷா மகமூத் குரேஷி (நடு).

# பின்லேடன் மறைந்து இருக்கும் இடம் பாகிஸ்தான் அதிகாரிகளுக்கு தெரியும்

## ஹிலாரி கிளின்டன் சொல்கிறார்

(வோஷிங்டன்)

பாகிஸ்தான் அரசாங்கத்தில் சில சக்திகள் உள்ளன. இந்த சக்திகளுக்கு பின்லேடன் மற்றும் தலீபான் தலைவர் முல்லா ஒமர் ஆகியோர் மறைந்து இருக்கும் இடம் எது என்பது தெரியும் என்று அமெரிக்க வெளி நாட்டு அமைச்சர் ஹிலாரி கிளின்டன் தெரி வித்தார்.

அவர் மேலும் கூறியதாவது, இந்த சக்திகள் உயர் அதிகார மட்டத்தில் இருக் கின்றன என்று நான் சொல்லவில்லை. அவர்கள் அதிகார மட்டத்தில் எங்கேயோ இருக்கிறார்கள்.

ஆனால் அவர்களுக்கு அல்கெய்தா பற்றியும் தலீபான் பற்றியும் நன்றாகவே தெரியும்.

பாகிஸ்தான் அரசாங்கத்திடம் இருந்து ஒத்துழைப்பு கிடைப்பதில் முன்பை விட இப்போது பெரிய மாற்றம் ஏற்பட்டு உள்ளது என்றபோதிலும் இன்னும் அதிக அளவில் ஒத்துழைப்பு தேவைப்படுகிறது. இவ்வாறு ஹிலாரி கிளின்டன் தெரிவித்தார். (2-4)

# ஆங் சான் சூகி அமெரிக்க தூதர் சந்திப்பு

(மியன்மார்)



மியன்மாரில் வீட்டுக் காவலில் இருக்கும் ஆங் சான் சூகியை கிழக்கு ஆசியாவுக்கான அமெரிக்க தூதர் குர்த் கேம்பெல் திங்கட்கிழமை சந்தித்து பேச்சு நடத்தினார். இரண்டு நாள் பயணமாக மியன்மார் சென்றுள்ள கேம்பெல் அங்கு நடைபெற இருக்கும் பொதுத் தேர்தல் குறித்து ஆங் சான் சூகியுடன் விவாதித்ததாக தெரிகிறது.

வீட்டுக் காவலில் இருக்கும் ஆங்சான் சூகி பலத்த பொலிஸ் பாதுகாப்புடன் அருகிலுள்ள அரசு விருந்தினர் மாளிகைக்கு அழைத்து வரப்பட்டார். அங்கு அவரை கேம்பெல் சந்தித்து பேச்சு நடத்தினார். அவர்கள் பேச்சு விவரம் குறித்து உடனடியாக தகவல் வெளியிடப்படவில்லை.

ஆங் சான் சூகியை சந்திப்பதற்கு முன்னர் அவரது ஆதரவாளர்கள் மற்றும் தேசிய ஜனநாயக லீக் கட்சித் தலைவர்களுடன் கேம் பெல் ஆலோசனை நடத்தினார்.

மக்களிடத்தில் நம்பிக்கை ஏற்படுத்துகின்ற அனைத்துப் பிரிவினரையும் ஒருங்கிணைத்து செல்லும் தேர்தலாக இது நிச்சயம் இருக்கப் போவதில்லை என எதிர்க்கட்சி தலைவர்கள் அப்போது கேம்பெலிடம் கூறியதாக தகவல்கள் தெரிவித்தன. (2-4)

# ஈராக்கில் இடம்பெற்ற குண்டுத் தாக்குதல்கள், துப்பாக்கிச்சூட்டில் 100 பேர் பலி; 350 பேர் படுகாயம்

ஈராக்கில் நேற்று முன்தினம் இடம் பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதல் மற்றும் துப்பாக்கிப் பிரயோகத்தில் சுமார் நூறு பொது மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். இந்தத் தாக்குதல்களில் 350 பேர் காயமடைந் துள்ளனர்.

ஈராக்கின் மத்திய நகரான ஹில்லா என்னும் இடத்திலுள்ள ஆடைக்கைத்தொழிற் சாலையில் இரு தற்கொலைக் குண்டுத் தாக்குதல் சம்பவங்கள் இடம்பெற்றிருக் கிறது. இதில் 45 பொது மக்கள் கொல்லப் பட்டிருக்கும் அதே வேளை 140 பேர் படுகாய மடைந்துள்ளனர். இதேவேளை பத்தாத்தின் சுவய்ர எனும் இடத்தில் அமைந்துள்ள சன நடமாட்டம் அதிகம் உள்ள சந்தைப்பகுதியில் இடம்பெற்ற இரட்டைக் குண்டு தாக்குதல் களில் 11 பொது மக்கள் கொல்லப்பட்டி ருக்கும் அதே வேளை 40 இற்கும் அதிக மான பொது மக்கள் காயமடைந்துள்ளனர்.

பஸறாப் என்னும் பகுதியில் இடம் பெற்ற கார்க்குண்டுத் தாக்குதல்களில் 20 பொது மக்கள் கொல்லப்பட்டிருக்கும் அதே வேளை 12 இற்கும் அதிகமானவர்கள் காய மடைந் துள்ளனர்.

மேலும் பலுஜா நகரில் இடம் பெற்ற குண்டுத் தாக்குதல்களில் பொலிஸ் உத்தி யோகத்தர் மற்றும் அவரது பாரியார் உட்பட 4 பேர் கொல்லப்பட்டுள்ளனர். (2-4)

# மேலும் ஒரு கப்பல் சோமாலிய கடற்கொள்ளையரால் கடத்தல்

இந்தியர்கள் 19 பேர் உட்பட 22 பேருடன் மேலும் ஒரு கப்பலை சோமாலிய கடற் கொள்ளையர்கள் ஞாயிற்றுக்கிழமை கடத் தினர்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, எம்.வி.மரிதா மார்குரைட் என்ற இரசா யனக் கப்பல் குஜராத்தில் உள்ள கண்ட்லா துறைமுகத்தில் இருந்து பெல்ஜியம் நாட்டின் அன்ட்வெர்ப் துறைமுகத்தை நோக்கி சென்று கொண்டிருந்தது. கப்பல் ஏடன் வளைகுடா பகுதியில் சென்ற போது திடீரென வந்த கடற்கொள்ளையர்கள் கப்பலை துப் பாக்கி முனையில் கடத்திச் சென்றனர்.

அந்தக் கப்பலில் பயணித்த இந்தியர்கள் 19 பேர், பங்களாதேசைச் சேர்ந்த இருவர் உக்ரைனைச் சேர்ந்த ஒருவர் உள்ளிட்ட 22 பேரையும் பிணைக்கைதிகளாக பிடித்துச் சென்றனர்

இந்தக் கடத்தல் சம்பவத்தை அடுத்து சோமாலிய கடற்கொள்ளையர்களால் கடத்தப்பட்ட இந்தியர்களின் எண்ணிக்கை 57 ஆக அதிகரித்துள்ளது. ஏற்கனவே 38 இந்தியர்கள் சோமாலிய கடற்கொள்ளை யர்களால் கடந்த ஒரு மாத காலமாக பிணைக்கைதிகளாக வைக்கப்பட்டுள்ளனர்

சோமாலிய அரசின் உதவியுடன் அவர்களை மீட்கும் பணியை மத்திய அரசு செய்துவருகிறது. (2-4)




# மரண தண்டனை தொடரும் சிங்கப்பூர் அரசு முடிவு

(சிங்கப்பூர்)


போதை கடத்தலில் ஈடுபடுபவர்களுக்கு வழங்கப்படும் மரண தண்டனை தொடரும் என சிங்கப்பூர் அமைச்சர் சண்முகம் தெரிவித்துள்ளார். இதுதொடர்பில் சிங்கப்பூர் சட்டத்துறை அமைச்சர் சண்முகம் கூறிய தாவது,

சர்வதேச அளவில் பல்வேறு விமான நிலையங்களில் போதை மருந்துகள் சுலபமாக கிடைக்கிறது. சிங்கப்பூர் மற்றும் மலேசியாவில் போதை கடத்துபவர்களுக்கு மரண தண்டனை அளிக்கப்படுகிறது. இந்த கடுமையான சட்டத்தால் தான் இங்கு போதை பயன்படுத்துவோர் அரிதாக உள்ளனர். இதனால் இளைஞர்களின் பெற்றோரும் நிம்மதியாக உள்ளனர். போதை கடத்து பவர்கள் மீது கருணை காட்டி அவரை பிழைக்க வைத்தால் போதை உட்கொள்ளும் பலர் பலியாக நேரிடும்.

எனவே சிங்கப்பூரில் தற்போது அமுலில் உள்ள போதை கடத்தல்காரர்களுக்கான மரண தண்டனை தொடரும் என்றார். (2-4)

# ஐசக் நியூட்டனின் அப்பிள் மரக்கட்டை விண்வெளிக்கு எடுத்துச் செல்லப்படவுள்ளது

விஞ்ஞானி ஐசக் நியூட்டனால் புவியீர்ப்பு தத்துவம் முன்வைக்கப்பட களம் அமைத்துத் தந்த அப்பிள் மரத்தின் மரக்கட்டை மாதிரி யொன்று ஈர்ப்பு பரிசோதனைக்காக விண் வெளிக்கு எடுத்துச் செல்லப்படவுள்ளது.



எதிர்வரும் 14 ஆம் திகதி வெள்ளிக் கிழமை நாசா விண்வெளி ஆராய்ச்சி நிலை யத்தால் விண்ணுக்கு அனுப்பப்படவுள்ள அட்லான்ரிஸ் விண்கலத்தில் பிரித்தா னியாவை பிறப்பிடமாகக் கொண்ட விண் வெளிவீரரான கலாநிதி பியர்ஸ் செலர்ஸால் இந்த மரக்கட்டை எடுத்துச் செல்லப்பட வுள்ளது.

பிரித்தானிய றோயல் சபை அரும்பொ ருட்கள் காட்சியகம் தனது 350 ஆவது ஆண்டு கொண்டாட்டங்களையொட்டி ஐசக் நியூட்டனால் அப்பிள் விழுவது அவதானிக் கப்பட்ட மரத்திலிருந்து பெறப்பட்ட கட்டை யை பியர்ஸ் செலர்ஸுக்கு வழங்கியுள்ளது.

மேற்படி நாசாவின் விண்கலத்தில் பியர்ஸ் செலர்ஸுடன் மேலும் 5 விண்வெளி வீரர்கள் பயணமாகின்றனர்.

1996 ஆம் ஆண்டு நாசா விண்வெளி ஆராய்ச்சி நிலையத்தில் விண்வெளிவீரராக இணைந்து பணியாற்றி வரும் பியர்ஸ் செலர்ஸ் விண்வெளிக்கு அப்பிள் மரக்கட் டையை எடுத்துச் செல்லும் வரலாற்று முக்கி யத்துவ நிகழ்வில் பங்கேற்கவுள்ளதை யொட்டி தான் பெரிதும் மகிழ்ச்சியடைந்துள் ளதாக கூறினார்.

விஞ்ஞானி ஐசக் நியூட்டன் தோட்ட மொன்றில் அமர்ந்திருந்தபோது அப்பிள் மர மொன்றில் இருந்து பழம் விழுவதை அவதா னித்து அது ஏன்மேல் நோக்கிச் செல்லாமல் கீழ் நோக்கி விழுகிறது என ஆராய்ந்து புவி யீர்ப்பு தத்துவத்தை உருவாக்கினார். (2-4)

# வெடிகுண்டை கண்டறிய பேனா வடிவில் கருவி

(வோஷிங்டன்)

வெடி மருந்தை கண்டறியும் வடிவிலான கருவி இந்தியாவில் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது. அமெரிக்காவில் நியூயோர்க் இரட்டை கோபுரம் தாக்கப்பட்டது முதல் விமானத்தில் திரவ வடிவிலான பொருட்கள் கொண்டு செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளது. இதைத் தொடர்ந்து பயங்கரவாதிகள் ஷூ மற்றும் உள்ளாடைக்குள் வெடி மருந்தை பதுக்கிக் கொண்டு விமானத்தை தகர்க்கும் முயற்சியில் ஈடுபட்டு வருகின்றனர்.

பொதுவாக வெடி மருந்துகளில் பெராக்சைடு என்ற இரசாயனம் முக்கிய பங்கு வகிக்கிறது.

இதனை தடுக்கும் நோக்கில் அமெரிக் காவில் வசிக்கும் இஸ்ரேலிய நாட்டு விஞ் ஞானி ஈகுத் கீனான் என்பவர் பேனா வடி வில் தைவான் நாட்டு உதவியுடன் பெராக் சைடை கண்டறியும் கருவியை உருவாக் கியுள்ளார்.

இந்தக் கருவி கொண்டு செல்வதற்கு எளிதாக இருப்பதுடன் சந்தேகப்படும்படி யான நபர் வெடிகுண்டை மறைத்து வைத் துள்ளாரா என்பதை இந்த கருவியை வைத்து பார்த்தாலே அறிந்து கொள்ள முடியும். (2-4)

# தாதியத்தின் மகிமை

## இன்று சர்வதேச தாதியர் தினமாகும்

இன்றைய உலகில் சமூக, கலாசார அரசியல் மாற்றங்களின் பின்னணியிலே பல்வேறு இன்னல்களுக்கும் முகங் கொடுத்து வருகின்றது. போர் அனர்த்தங்கள், பஞ்சம், பட்டினி, இயற்கை அனர்த்தம், பொருளாதாரம் என பல்வேறு நெருக்கடிகளுக்கும் அழுத்தங்களுக்கும் முகம் கொடுக்க வேண்டியவர்களாக இருக்கின்றனர்.



புளோறன்ஸ் நைற்றிங்கேல்

இந்நிலைமைகளினால் நோய்களும் காயங்களும் ஏற்பட்டு உளரீதியாகவும் உடல் ரீதி யாகவும் பாதிப்புக்கு உள்ளாகின்ற சந்தர்ப்பங்களில் அவற்றை குணமாக்கிக் கொள்ளும் பட்சத்தில் வைத்திய சேவையினை நாடுகின்றனர்.

சமகால வாழ்வியல் நிலைமைகள், மன உளச்சல்கள் போன்ற காரணங்களினால் பெரும்பாலான மக்கள் பாதிப்புக்குள்ளாகி இருந்தும் அவர்களுக்கு பராமரிப்பை வழங்குவதில் பெரும்பங்கு வகித்த பல்வேறு துறைகளிலும் அனுபவம் மற்றும் நிபுணத்துவம் மிக்க வைத்தியர்கள், தாதியர்கள் வைத்தியாசாலையில் மக்களின் சுகாதார மேம்பாட்டில் ஏனைய அளப்பரிய பங்காற்றிய உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் யாவரும் ஒன்றிணைந்து செயற்பட்டு வருகின்றனர்.

இன்று ஓர் தாதியின் பங்கு வைத்தியத் துறையில் ,

**நோய் நாடி நோய் முதல் நாடி அது**
**தணிக்கும்**
**வாய் நாடி வாய்ப்பச் செயல்**

நோய் இன்னதென ஆராய்ந்து நோயின் காரணம் அறிந்து அதனை தடுக்கும் வழியையும் தெரிந்து உடலுக்கும் பொருத்தமான மருத்துவம் செய்ய வேண்டும் என்பதே இக்குறளின் கருத்தாக அமையும்.

**உற்றான் தீர்ப்பான் மருந்து உழைச்**
**செல்வானென்று**
**அப்பால் நாற் கூற்றே மருந்து**

நோயுற்றவன், நோய் தீர்க்கும் மருத்துவன் மருந்து. மருந்தை அங்கிருந்து வேளை தவறாமல் கொடுப்பவர் என்று மருத்துவ முறை நான்கு வகைப்பாடு உடையது என்று பொருள்.

முதலில் நோயாளி உற்றான். இரண்டாவது மருத்துவம் பார்க்கும் மருத்துவர்- தீர்ப்பான். மூன்றாவது நோய்குரிய நோய் தீர்க்கும் மருந்து நான்காவது முறையாக மருந்து கொடுக்கும் முழுநேரப் பராமரிப்பை வழங்கும் தாதியர். இவை நான்கும் ஒருங்கிணைந்தால் தான் முழுமை பெறும்.

இவ்வாறாக ஒருவருடைய நோய் குணமாவதற்கு தாதியினது பெரும் பங்கு அவசியமாகின்றது என்பதை யாரும் மறுக்க முடியாத ஒன்றாகும்.

1820 ஆம் ஆண்டு வைகாசி மாதம் 12 ஆம் நாள் வில்லியம் எட்வேட் தம்பதியினருக்கு 2 ஆவது மகளாக புளோறன்ஸ் நைற்றிங்கேல் பிறந்தார்.

இத்தாலியிலுள்ள புளோறன்ஸ் என்ற இடத்தில் பிறந்தமையால் அந்நகரின் பெயரே இவருக்கு சூட்டப்பட்டது.

தாதியத்திற்கு வரையறை வகுத்து அந்த கால கட்டத்திலே தாதிய சேவையை எவருமே விரும்பாத போதிலும் நைற்றிங்கேல் மனந் தளராது உறுதியாக நின்று உயர்வுறத் தனது சேவையைச் செய்து ஒவ்வொரு வருடமும் அவர் அவதரித்த இப்புனித நாளினை நாம் *சர்வதேச தாதியர்* தினமாகக் கொண்டாடி வருகின்றோம்.

உலகில் உள்ள நாடு, மொழி, இனம், மதம் ஆகியவற்றையெல்லாம் கடந்து அனைத்து மக்களாலும் ஏற்றுக் கொள்ளத் தக்க ஒரு துறை வைத்தியத்துறை ஆகும்.

அதில் புளோறன்ஸ் நைற்றிங்கேல் காட்டிய வழியில் நின்று தாதியச் சேவையின் மகிமையை மேலும் உயர்வுறச் செய்து கொள்வ



துடன் தாதியத்தில் எதிர்பார்க்கப்படுகின்ற பண்புகளான அன்பு, இரக்கம், பொறுமை, தன்னலமின்மை, புத்திரக்கூர்மை, விரைவாக முடிவெடுக்கும் ஆற்றல், நிறை வான ஆளுமை உடைய ஒருவராக செயற்பட்டு மருத்துவத்துறையை மேலும் வளர்ச்சி அடைய எம்மால் ஆனவற்றை செய்து தாதிய சேவையை செய்வோம் என்று உறுதி பூணுவோமாக.

தற்போது யாழ்ப்பாணத்தில் தாதியர்கள் பற்றாக்குறையாக உள்ள போதிலும் தாதியத்தில் கற்றுக்கொண்டதன் விளைவாக அதாவது ஓர் உயிரினை இழப்பதற்கு நாம் காரணமாக அமையக் கூடாது! எம்மால் ஆன சேவையை சமூகத்திற்கு வழங்க வேண்டும் வைத்தியசாலையில் விடுதிகளில் ஏற்படுகின்ற தாதியர் கடமை வெற்றிடங்களை மன ஒற்றுமையோடு புரிந்து கொண்டு செயற்பட்டு வருகின்றார்கள்.

இந்த நிலையில் யாழ்ப்பாணமானது பல்வேறுபட்ட காரணங்களினால் (நீர், நிலம், காற்று) சூழல் ஆனது மாசடைகின்றது. இதனால் பல நோய்கள் ஏற்பட சந்தர்ப்பம் அதிகரிக்கின்றது.

இவ்வாறான செயற்பாட்டை கட்டுப்பாட்டிற்கு கொண்டுவர அத்துறை சார்ந்த மேலதிகாரிகள் கவனமெடுத்துக் கொள்ளுமாறும் சுகாதார சேவையை வழங்குகின்ற சகலரும் விழிப்பாக இருந்து செயற்பட்டு வரவேண்டுமென்றும் இதனால் சமூகத்திடையே ஏற்படுகின்ற நோய்களிலிருந்து பாதிப்புக்கு உட்படாமல் தப்பித்துக் கொள்ள முடியும் என்றும் *தாதிய சேவை* மேலோங்கி நின்றிட தாதியர்கள் ஆகிய நாமும் விழிப்புடன் செயற்படுவோமாக.

**செ.முருகானந்தன்**
**யாழ். தாதியர் பயிற்சிக்கல்லூரி, மாணவர் ஒன்றியத் தலைவர்.**

## கல்வி முன்னேற்ற கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண வலயத்தைச் சேர்ந்த உதவிக் கல்விப்பணிப்பாளர்கள், முதன்மை ஆசிரியர்களுக்கான கல்வி அபிவிருத்திக் கலந்துரையாடல் இன்று புதன்கிழமை காலை 8.30 மணிக்கு வலயக்கல்வி அலுவலகத்தில் இடம்பெறவுள்ளது.

இதில் தவறாது அனைவரையும் கலந்து கொள்ளுமாறு வலயக்கல்விப்பணிப்பாளர் கேட்டுக்கொள்கின்றார். (4)

## தனியார் துறையின் சம்பள அதிகரிப்பு தொடர்பான பேச்சுவார்த்தைகள் நிறைவு

(கொழும்பு)

தனியார் துறையினரின் சம்பள அதிகரிப்பு தொடர்பான இருதரப்பு பேச்சுவார்த்தை நிறைவடைந்துள்ளதாக தொழிலமைச்சின் செயலாளர் மகிந்த மடிகவேவா தெரிவித்துள்ளார்

அரசாங்க தொழில் சங்கங்களும் தொழில் அதிபர்களினதும் பங்கேற்பில் இந்தப் பேச்சுவார்த்தை இடம்பெற்றது.

43 சம்பளக்கட்டுப்பாட்டு அமைப்புக்களுடன் இதுவரை பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றுள்ளன. தனியார் துறையினரின் மிகக் குறைந்த சம்பளத்தை 20 சதவீதத் தால் உயர்த்துவது இதன் நோக்கமாகும்.

மேலும் ஊழியர் சேமலாபநிதியத்தை பெறுபவர்களுக்கு ஓய்வூதியத் திட்டமொன்றை வழங்குவதற்கு அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளதாக அமைச்சின் செயலாளர் மேலும் குறிப்பிட்டார். (2-4)

## மடு தேவாலயப் பகுதியில் சிங்கள குடியேற்றம்

மன்னார்- மதவாச்சி பாதையில் அமைந்துள்ள மடு பாதை சந்தியில் பெரியளவில் சிங்கள குடியேற்றம் ஒன்றை இலங்கை அரசாங்கம் முன்னெடுத் துள்ளது.

இந்த இடம் தமிழ் பிரதேசத்தில் அமைந்துள்ள மடுத்தல பிரதான வீதியின் கிளைப் பாதை அமைந்துள்ள பகுதியாகும். இந்தப் பிரதேசத்தில் விகாரை ஒன்று அமைக்கப்பட்டு அங்கு 80 சிங்கள குடும்பங்கள் குடியேற்றப்பட்டுள்ளன.

இந்தக் குடும்பங்களுக்கான வீடுகளை கரித்தாஸ் அமைப்பு நிர்மாணித்துக் கொடுத்துள்ளது. (2-4)

## இந்தியாவில் தடுத்துவைக்கப்பட்ட 16 இலங்கை மீனவர்கள் விடுவிப்பு

### கடற்படைப்பேச்சாளர் தகவல்

இந்தியப் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த 16 இலங்கை மீனவர்கள் விடுவிக்கப்பட்டு இலங்கை கடற்படையினரால் நேற்று முன்தினம் இலங்கைக்கு அழைத்து வரப்பட்டுள்ளனர்.

வடமாகாண கடற்படைத் தலைமையகத்தின் உத்தரவின் பேரில் காங்கேசன் துறை துறைமுகத்திலிருந்து புறப்பட்டுச் சென்ற இலங்கை கடற்படைக்குச் சொந்தமான கப்பல் மூலம் இவர்கள் அழைத்து வரப்பட்டனர்.

விடுவிக்கப்பட்ட மீனவர்களுக்குச் சொந்தமான மூன்று மீனவப் படகுகளும் இலங்கைக்கு கொண்டுவரப்பட்டதாக கடற்படைப் பேச்சாளர் கப்டன் அதுல செனரத் தெரிவித்தார்.

இலங்கை மீனவர்கள் ரஞ்சிதன் என்ற கடற்படை கப்பல் மூலம் அழைத்துவரப்பட்டு கடந்த ஞாயிற்றுக்கிழமை இலங்கை- இந்திய சர்வதேச கடல் எல்லையில் வைத்து விடுவிக்கப்பட்டுள்ளனர். விடுவிக்கப்பட்ட தொந்தெர, நில்வெல்ல மற்றும் திருகோணமலை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 16 மீனவர்களும் காங்கேசன்துறை துறைமுகத்திலிருந்து சொந்த இடங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டனர்.(2-4)

## சித்திரப்பாடத்திற்கு இலவச இணையத்தளசேவை

(யாழ்ப்பாணம்)

ஆத்திசூடி வீதி கந்தர் மடத்தில் இயங்கும் ஐ.ஏ.ரி.சித்திரப்பயிற்சி நிறுவனம் சித்திரப் பாடத்தை மேம்படுத்தும் முகமாக www.iatart.webs.com என்ற இலவச இணையத்தள சேவையை ஆரம்பித்துள்ளது.

இதன் ஊடாக தமிழ் மொழியில் சித்திரப் பாடவிடயங்களை பெற்றுக்கொள்ள முடியும் என நிறுவன இயக்குனர் தெரிவித்துள்ளார். (4)

## ஆசிரியர்களுக்கான கூட்டம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கோட்டப் பாடசாலைகளில் உலக உணவுத் திட்டத்திற்கு பொறுப்பாகவிருக்கும் ஆசிரியர்களுக்கான கூட்டம் இன்று புதன் கிழமை முற்பகல் 9.30 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளதால் அனைத்து ஆசிரியர்களையம் தவறாது கலந்து கொள்ளுமாறு நல்லூர் கோட்டக் கல்விப்பணிப்பாளர் கேட்டுள்ளார்.

(2-30)

சமைக்கப் படைக்கத் தெரியாமல் போனாலும் உடைக்கக் கவிழ்க்கத் தெரியும். —தமிழ்ப் பழமொழி

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# குடாநாட்டுக் குழப்பத்திற்குள் நடந்தேறும் குடும்பச் சண்டைகள்

கொலை, கொள்ளை, கடத்தல், பாலியல் வல்லுறவு என்ற பட்டோலை யாழ்.குடாநாட்டில் சோழர்காலத்துக் கல்வெட்டுப்போல பொறிக்கப்பட வேண்டிய விடயமாகிவிட்டன.

அந்ததளவிற்கு நிலைமை மோசமாகி விட்டது.

மலையக மக்கள் இரத்தம் உறுஞ்சும் அட்டைக்கு பழக்கப்பட்டுப் போனதுபோல, யாழ்ப்பாண மக்கள் கடத்தல், களவு என்ற கொடூரத்திற்கு பழக்கப்பட வேண்டிய துர்ப்பாக்கியம்.

நிலைமை இந்தளவு தூரம் முனைப்பு பெறுவதற்கு குடாநாட்டின் குழப்ப நிலையே காரணமெனலாம்.

அதாவது வன்னியில் யுத்தம் நடந்து கொண்டிருந்த காலம் தொட்டு இன்று வரை நீடித்து வரும் தொலைபேசி மிரட்டல்கள், எச்சரிக்கைகள் குடாநாட்டை குழப்பிவிட்டன.

சாதாரணமாக இரண்டு இளைஞர்கள் சேர்ந்து விட்டால், தாம் நினைத்த எவருக்கும் கையடக்கத் தொலைபேசி மூலம் மிரட்டல் விடமுடியும் என்ற நிலைமை முற்றிவிட்டது.

தொலைபேசி மிரட்டல் குறித்து பொலிஸார் எந்தவித நடவடிக்கையும் எடுக்காமல், மிரண்டு போய் உள்ளவர்களை மிரட்டும் பணியை விசாரணை என்ற பெயரில் செய்தமையால், முறைப்பாட்டில் நம்பிக்கை இழக்க வேண்டியதாயிற்று.

இத்தகைய பொதுவான களநிலைமை தனிப்பட்ட கோபதாபங்களை நிறைவேற்றுவதற்கு பேருதவியாகியுள்ளது.

குடாநாட்டில் நடந்த கடத்தல் சம்பவங்களை ஆராயும் போது அவற்றில் பெரும்பகுதி நண்பர்களால், குடும்ப உறுப்பினர்களால், தனிப்பட்ட பகையாளர்களால் செய்யப்பட்டதை அறியமுடிகின்றது.

தனிப்பட்ட பகைமையில் நடக்கின்ற கடத்தல் சம்பவங்கள் பொதுமைப்படுத்தப்பட்டு குடாநாட்டு மக்கள் பயப்பீதியில் உறைந்து போவதற்கும், வெளிமரவட்டங்கள் மற்றும் வெளிநாடுகளில் இருக்கின்ற தமிழ் உறவுகள் யாழ்ப்பாணத்திற்கு வருவதற்கும் தடை செய்கின்றன.

குடாநாட்டில் இருக்கக் கூடிய பாதுகாப்பற்ற நிலையை தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தும் தனிப்பட்ட பகையாளர்கள் தொடர்பில் பொலிஸார் அசமந்தம் காட்டுவார்களாயின் எதிர்கால நிலைமையும் வேதனைக்குரியதாகவே இருக்கும்.

# பொதுச் சுகாதார வெளிக்களப் பயிற்சி உத்தியோகத்தர் பரீட்சையில் 32பேர் சித்தி

(யாழ்ப்பாணம்)

பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையினால் நடத்தப்பட்ட பொதுச் சுகாதார வெளிக்களப் பயிற்சி உத்தியோகத்தர்களுக்கான பரீட்சையில் 32 பேர் சித்தியடைந்துள்ளதாக யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் மலேரியா தடை இயக்க வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி க.தா.சிவபாதம் அறிவித்துள்ளார்.

சித்தியடைந்தவர்களின் பெயர் வருமாறு,

எஸ்.வைகுந்தன், ரி.பிரணவன், ஜே.நிருபன், எம்.அருளானந்தன், என்.புவநேசன், எஸ்.கோபிநாத், வீ.ஜெகந்தன், ஜே.ரூபன்துரம், ஏ.தஜீசுரன், ரி.நிருசன், என்.மயூரன், வீ.உமாசுதன், என்,விஸ்ணுதாஸன், எஸ்.கோபிநாத், ரி.ஜெயகுமார், ரி.சரண்ராஜ், ரி.சந்திரசேகர், எஸ்.சர்வானந்தன், பி.சிந்துஜன், எஸ்.சிவசங்கர், ரி.ராஜ்மயூரன், எஸ்.நிரோஜன், வை.ஜெனகரன், எஸ்.மயூரதாசன், ஏ.பிரகாஸ், எஸ்.தயாபரன், பி.விஜயகுமாரன், ஏ.சந்திரன், டி.கருணாகரன், என்.சுப்பிரமணியம். (ச)

# கோத்தபாய அச்சுறுத்தவில்லை-ஐ.நா

(கொழும்பு)

இலங்கையின் போர்க்குற்றம் தொடர்பில் எவராவது சாட்சியமளித்தல் அவருக்கு உயிராபத்து ஏற்படும் என பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்ததாக கூறப்படுவதை ஐக்கிய நாடுகளுக்கான இலங்கை உதவி வதிவிட பிரதிநிதி பந்துல ஜெயசேகர மறுத்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் இன்னர் சிற்றி பிரஸ் சேவைக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார். கடந்த 7ஆம் திகதி இடம் பெற்ற ஐக்கிய நாடுகளின் செய்தியாளர் மாநாட்டின் போது ஐக்கிய நாடுகள் செயலாளரின் பேச்சாளர் மாட்டீன் நெஸிட்கியிடம் இன்னர் சிற்றி பிரஸ், கோத்தபாய தெரிவித்ததாக கூறி இந்த விடயத்தை கவனத்திற்கு கொண்டு வந்தது.

இந்த நிலையில் தாம் குறித்த விடயம் தொடர்பில் கோத்தபாய ராஜபக்ஷவிடம் கேட்டபோது, தாம் அவ்வாறான கருத்தொன்றை தெரிவிக்கவில்லை என்றும் அது முற்றிலும் பிழையான தகவல் என்றும் அவர் தெரிவித்ததாக, பந்துல ஜெயசேகர இன்னர் சிற்றி பிரஸிற்குத் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் குறித்த செய்தியை திருத்தத்துடன் தங்களுடைய இணைத்தளத்தில் வெளியிடுமாறு பந்துலு ஜயசேகர இன்னர் சிற்றி பிரஸிடம் கேட்டுள்ளார். (ச-5)

# காணாமல் போன மாணவன் வவுனியாவிலிருந்து திரும்பினார்

(யாழ்ப்பாணம்)

பாடசாலைக்குச் சென்ற போது காணாமல் போயிருந்த மாணவன் வீடு திரும்பியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த சில வாரம் விடத்தல்பளையைச் சேர்ந்த 14 வயதுடைய மாணவன் ஒருவன் காணாமல் போயுள்ளதாக யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழு மற்றும் கொடிகாமம் பொலிஸ் நிலையம் ஆகியவற்றில் முறையிடப்பட்டிருந்து.

அம்மாணவனே வீட்டுக்குத் திரும்பியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பிரஸ்தாப மாணவன் பாடசாலைக்குச் செல்வதற்காக பஸ்சில் ஏறிய போது அப் பஸ்சில் இருந்த பெண் ஒருவர் தன்னுடன் வருமாறு மாணவனை கேட்டுள்ளார்.

அதற்கு இணங்கிய மாணவன் அப் பெண்ணுடன் வவுனியாவில் அவரது வீட்டுக்குச் சென்றுள்ளான்.

பின்னர் பயம் கொண்ட மாணவன் வெளியே வந்து தனது வீட்டுக்கு தொலைபேசி மூலம் தகவல் கொடுத்துள்ளான். இது குறித்து கொடிகாமம் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டு பின்னர் மாணவன் அழைத்து வரப்பட்டார். (ச-30)

# யாத்ரா இணையத்தமிழ் மாநாடு-2010 யாழ். மத்திய கல்லூரியில் நடத்த ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாணவர்கள், வலைப்பதிவர்கள், கல்விமான்கள், துறைசார் வல்லுநர்கள், சமூக ஆர்வலர்கள், எழுத்தாளர்கள் மற்றும் ஊடகவியலாளர்களை ஒன்றிணைத்து நடத்தும் யாத்ரா இணையத்தமிழ் மாநாடு-2010 எதிர்வரும் 16ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இது தொடர்பாக யாழ்.தேவி இணையத்தள ஆசிரியர் புருஜோத்தமன் தங்கமயில் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கை வருமாறு,

இணையத்தில் தமிழின் வளர்ச்சி தொடர்பான ஆராய்ச்சிகள் பகிர்ந்து கொள்ளப்படவுள்ளன. அத்துடன், இணையத்துடன் இணைந்த தமிழ் இலக்கியம், வேலை வாய்ப்பு, தொழில் நுட்பங்கள் போன்றவற்றை சமூகத்தின் பல்வேறு மட்ட மக்களுக்கு எடுத்துச் செல்லும் நோக்கங்களையே யாத்ரா இணையத்தமிழ் மாநாடு-2010 கொண்டுள்ளது.

இணையம் ஒரு பலமான ஊடகம் என்ற நிலைப்பாட்டில் படைப்புக்களை மேற்கொள்ளும் தமிழ்ப்படைப்பாளிகளின் சந்திப்பாகவும் யாத்ரா இணையத் தமிழ் மாநாடு-2010 விளங்குகிறது.

பல்கலைக்கழக பேராசிரியர்கள், பல்துறைசார்ந்த அறிஞர்கள் ஆகியோருடைய அனுபவப் பகிர்வுகளும், தற்கால இணையத்தில் தமிழில் ஏற்பட்ட முன்னேற்றங்கள் தொடர்பிலும் துறைசார் வல்லுநர்கள் கருத்துப்பகிரவுள்ளனர்.

இந்த நிகழ்வில் மாணவர்கள், கல்வியாளர்கள், சமூக ஆர்வலர்கள், வலைப்பதிவர்கள், ஊடகவியலாளர்கள் மற்றும் ஆர்வமுள்ள அனைவரும் கலந்து கொள்ளலாம். அனுமதி இலவசம், இந்த மாநாட்டில் இணையத்தில் இலங்கை தமிழ் எழுத்தாளர்கள் எழுதிய படைப்புக்களைத் தாங்கிய யாத்ரா 2010 என்ற நூலும் வெளியிடப்படும் என்றுள்ளது.

(ச)

# வலி.வடக்கு பிரதேசசபையின் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் வடக்கு கிழக்கு உள்ளூர் சேவை மேம்படுத்தும் திட்டத்தின் (NELSIP) கீழ் செயற்படுத்துவதற்கான நான்காண்டுத் திட்டம் தயாரிக்கப்படவுள்ளது. இத்திட்டத்தின் கீழ் வலிகாமம் வடக்கு பிரதேச சபை பிரதேசம் எட்டு கொத்தணி அபிவிருத்திப் பிரிவுகளாக பிரிக்கப்பட்டு அபிவிருத்தி செய்யப்படவுள்ளது.

இத்திட்டம் தயாரித்தல் தொடர்பாக நாளை வியாழக் கிழமை பி.ப.2.30 மணிக்கு பிரதேசசபை மாநாட்டு மண்டபத்தில் கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது.

எனவே தற்போது ஆலோசனைக்குழு உறுப்பினர்களாக இருப்பவர்கள், பிரதேச சமூக நலன்விரும்பிகள், சனசமூக நிலையப் பிரதிநிதிகள், மாதர் சங்கப் பிரதிநிதிகள், கிராம அபிவிருத்திச் சங்கப் பிரதிநிதிகள், மயான அபிவிருத்திக் குழு உறுப்பினர்கள் என்போரை உரிய திட்ட முன்மொழிவுகளுடன் இக்கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறும், பொருத்தமான ஆலோசனைகளை வழங்கியுதவுமாறும் வலிவடக்கு பிரதேசசபை காங்கேசன்துறைச் செயலாளர் கேட்டுள்ளார். (சு)

# சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள்


## பல்சுவை



ஆன்மீக வாழ்க்கையில் நான் பேரின்பம் பெறாமற் போனால் அதற்காகப் புலனின்ப வாழ்க்கையிலா திருப்தியை நாடுவேன்? எனக்கு அமுதம் கிடைக்காமற் போனால் அதற்காகச் சாக்கடை நீரையாநாடிச் செல்வேன்.

நீயே தூய்மை பொருந்தியவன். ஓ மாபெரும் வீரனே ! கண்விழித்து எழுந்திரு இந்த உறக்கம் உனக்குப் பொருந்தாது. விழித்துக்கொள். எழுந்து நில். இந்த உறக்கம் உனக்கு ஏற்றதல்ல. துன்பப் படுபவனாகவும் பலவீனனாகவும் உன்னை நீ நினைக்காதே. எல்லாம் வல்ல ஆற்றல் படைத்தவனே! விழித்தெழுந்து உன் இயல்பை நீ வெளிப்படுத்து.





திருநெல்வேலி சைவ வி.வி.சங்கத்தின் ***சைவ வித்தியா*** மலர் வெளியீட்டு விழா அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கே.வி.குணசேகரம் வரவேற்புரை நிகழ்த்துவதையும், விழாவில் அரங்கேறிய ***எந்தையும் தாயும்*** நாடகத்தின் ஒரு காட்சியையும் கலந்து கொண்ட சைவச் சிறுவர் இல்ல பிள்ளைகளையும் படங்களில் காணலாம்.

# இலங்கையில் முதல் தடவையாக ஞாயிற்றுக்கிழமைகளில் அஞ்சல் சேவை வடமாகாணத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளது

## வடமாகாண தபால்மா அதிபர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கையிலே முதல் தடவையாக ஞாயிற்றுக்கிழமைகளில் அஞ்சல் சேவை யாழ். மாவட்டத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக வடமாகாண தபால்மா அதிபர் பி.குமரகுரு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், அஞ்சல்மா அதிபர் எம்.கே.வி. திஸாநாயக்கவின் வழிகாட்டலுக்கு அமைவாக எதிர்வரும் 16ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தபால் சேவைக்காக பரீட்சார்த்த மாக திறந்து வைக்கப்படவுள்ளது.

இச்சேவைக்காக காலை 7 மணியளவில் இருந்து மாலை 3 மணிவரை யாழ்ப்பாண பிரதம தபால் நிலையம் திறந்து வைக்கப்படவுள்ளது.

இச்சேவையின் மூலம் ஞாயிற்றுக்கிழமைகள் தோறும் மின்சாரப்பட்டியல் கொடுப்பனவுகள், பொலிஸாரினால் வழங்கப் படும் போக்குவரத்து தண்டப்பணம், பதிவுத்தபால்கள், முத்திரை விற்பனை ஆகிய சேவைகள் என்பன மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இச்சேவை மக்களுக்கு நல்லதொரு பயனை கொடுக்கும் பட்சத்தில் ஏனைய அஞ்சல் அலுவலகங்களான கொக்குவில், சுன்னாகம் , பருத்தித்துறை, கரவெட்டி, மானிப்பாய், சாவகச்சேரி ஆகியவற்றிற்கும் விஸ்தரிக்கப்படவுள்ளது.

இதேபோன்று வவுனியா , மன்னார் ஆகிய மாவட்டங்களில் மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அத்துடன் வடமாகாண பிரதம தபாலகத்தில் புதிய சேவைகளாக வெஸ்டன் யூனியன் பணப்பரிமாற்றம் , எல்.ஓ.எல்.சி. கடன் உதவித்திட்டம் ஆகிய புதிய சேவைகளை அறிமுகம் செய்வதற்காக தபால்மா அதிபரினால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மின்சார பட்டியலுக்கான கொடுப்பனவுகள் அன்றைய தினம் ஒன்லைன் மூலம் கொழும்பு மின்சார சபைக்கு அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை வெளிநாட்டில் இருந்து உறவுகளுக்காக அனுப்பப்படும் அஞ்சல் பொதிகள் அனைத்தும் யாழ்ப்பாண அஞ்சல் திணைக்களத்தில் இருந்து சுங்க வரி அதிகாரிகள் மூலம் பரிசீலனை செய்யப்பட்டு விநியோகிப்பதற்கான நடவடிக்கை மேற்கொளப்பட்டு அது துரதிஸ்டவசமாக அதிகாரிகள் இங்கு இல்லாத காரணத்தினால் அத்திட்டம் திருகோணமலை அஞ்சல் அலுவலகத்திற்கு மாற்றப்பட்டுள்ளது.

சுங்கத்திணைக்களத்தில் எம் ஊடாக எடுக்கப்படும் முயற்சிகள் வெற்றியளிக்கும் பட்சத்தில் இவ் வெளிநாட்டவர்களின் அஞ்சல் பொதிகள் நேரடியாக யாழ்ப்பாணத் தில் வைத்து வழங்க நடவடிக்கை எடுக்கப் படும் என வடமாகாண தபால்மா அதிபர் வி.குமரகுரு மேலும் தெரிவித்துள்ளார். (2-4)

# மேல் முறையீடு இல்லை என்றால் கசாப்புக்கு இந்த வருடத்துக்குள்தூக்கு

## இந்திய மத்திய அரசு தகவல்

(யாழ்ப்பாணம்)

சட்ட ரீதியாகத் தடை எதுவும் இல்லையெனில் மும்பை தீவிரவாதத் தாக்குதல் வழக்கில் தூக்குத்தண்டனை விதிக்கப்பட்ட அஜ்மல் கசாப் இந்த வருட இறுதிக்குள் தூக்கிலிடப்படலாம் என இந்திய மத்திய அரசு தெரிவித்துள்ளது.

செஷன்ஸ் நீதிமன்றத் தீர்ப்பை எதிர்த்து மேல் நீதிமன்றங்களில் ககாப் அப்பீல் செய்யவில்லையெனில் அவரை இந்த வருட இறுதிக்குள் தூக்கிலிட முடியும் என மத்திய உள்துறைச் செயலர் ஜி.கே.பிள்ளை தெரிவித்தார்.

மும்பையில் 2008ஆம் ஆண்டு நவம்பரில் நடத்தப்பட்ட தீவிரவாதத் தாக்குதலில் 166 பேர் உயிரிழந்தனர். இவ்வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட பாகிஸ்தான் தீவிரவாதியான அஜ்மல் கசாப்புக்கு தூக்குத் தண்டனை விதித்து மே 6ஆம் திகதி நீதிமன்றம் தீர்ப்பளித்தது தெரிந்ததே . (2-4)

# விரைவில் தமிழகத்தில் புதிய உளவுப்பிரிவு

நக்சல்பாரிகள், தீவிரவாதிகள் உள்ளிட்ட பிரச்சினைகளுக்காக தனியாக ஒருங்கிணைந்த குற்ற உளவுப் பிரிவு விரைவில் தமிழகத்தில் தொடங்கப்படவுள்ளது.

இதை தமிழக சட்டசபையில் துணை முதல்வர் மு.க. ஸ்டாலின் அறிவித்தார். உள்துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்குப் பதிலளித்துப் பேசுகையில் இதை அவர் அறிவித்தார்.

அவர் இது குறித்துக் கூறுகையில், இந்த உளவுப் பிரிவினர் தீவிரவாதிகள், நக்சலைட்டுகள், தொடர்பான விவகாரங்களைக் கவனிப்பார்கள்.

சென்னையில் இருப்பதைப் போன்ற சைபர் குற்றப்பிரிவு கோவை, மதுரை, திருச்சி ஆகிய நகரங்களிலும் விரைவில் தொடங்கப்படும் என்றும் ஸ்டாலின் தெரிவித்தார். (2-4)

## நாம் தமிழர் இயக்கத்தின் சார்பாக

# அமிதாப்பச்சன் வீட்டின் முன்பாக உண்ணாவிரதப் போராட்டம்

நடிகர் அமிதாப்பச்சன் வீட்டின் முன்பாக நாம் தமிழர் இயக்கத்தின் சார்பாக பல நூறுக்கு மேற்பட்ட தமிழ் குடும்பங்கள் நேற்று காலை 10 மணி முதல் சாகும் வரை உண்ணா நிலைப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இது குறித்து நாம் தமிழர் இயக்கத்தின் மும்பை கிளை ஒருங்கிணைப்பாளர்கள் ராஜேந்திரன், அர்ஜுன் ஆகியோர் வெளியிட்டுள்ள அறிக்கையில், வெகு விரைவில் திரைப்பட விருது வழங்கும் விழா இலங்கையில் நடக்க இருக்கிறது.

இலங்கை அரசு தனது போர்க்குற்றங்களை சர்வதேச பார்வையில் மறைக்கும் முகமாக இந்தியாவின் கூட்டுச் சதியில் இந்த நிகழ்வு நடைபெறவுள்ளது.

இந்த விருது வழங்கும் விழாவிற்கு நடிகர் அமிதாப் தான் விசேட தூதுவராக செயற்படுகிறார்.

ஏற்கனவே தாம் தமிழர் இயக்கத்தின் சார்பாக நடைபெற்ற அமிதாப் வீடு முற்றுகை போராட்டத்தின் விளைவாக நமக்கு சாதகமான சில செய்திகள் வந்தபோதும் அண்மையில் சிங்கள அமைச்சர் லக்ஷமன்யாப்பா அபேவர்த்தன இலங்கையில் நடைபெறவிருக்கும் சர்வதேச இந்திய திரைப்பட விருது விழாவில் திட்டமிட்டபடி பாலிவுட் நட்சத்திரங்கள் அமிதாப் உள்ளிட்டோர் பங்கேற்பார்கள்.

அதை யாராலும் தடுக்க முடியாதென தெரிவித்துள்ளார். இந்நிலையில் விருது வழங்கும் விழாவை இலங்கையில் நடத்த[illegible]ட்டோம் என அறிவிக்க வலியுறுத்தி நாம் தமிழர் இயக்கத்தால் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படுகின்றது.

மும்பை தமிழர்கள் அனைவரும் தாங்கள் சார்ந்துள்ள கட்சி இயக்கங்களை மறந்து தமிழராய் ஒன்று கூடி இப்போராட்டத்தை வென்றெடுக்க ஒத்துழைப்புத் தரவேண்டும் என நாம் தமிழர் இயக்கத்தின் மும்பை கிளை ஒருங் கிணைப்பாளர்கள் இராஜேந்திரன், அர்ஜுன் ஆகியோர் தெரிவித்துள்ளனர். (2-4)

# நளினியின் தொலைபேசி உரையாடல் குறித்த முழுமையான விசாரணை தேவை

## காங்கிரஸ் வலியுறுத்தல்

(சென்னை)

நளினி யார் யாரிடம் எல்லாம் கைத் தொலை பேசியில் பேசினார் என்பது குறித்து முழுமையாக விசாரணை நடத்த வேண்டும் என காங்கிரஸ் உறுப்பினர் சுதர்சனம் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கும் போது,

பாதுகாப்பு மிகுந்த சிறையில் இருக்கும் நளினி கைத்தொலைபேசியில் பலருடன் பேசியுள்ளார். ஏராளமான சிம்கார்டுகளை வைத்துக்கொண்டு பல நாட்களாக பிரான்ஸ், கனடா உள்ளிட்ட நாடுகளில் உள்ளவர்களுடன் பேசியிருக்கிறார். இது மிகவும் ஆபத் தானது.

விடுதலைப்புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த ஒருவர் பாதுகாப்பு மிகுந்த சிறையில் இருந்து தொடர்ந்து பேசியிருக்கிறார் என்றால் சிறைத் துறையில் எங்கேயோ ஓட்டை இருக்கிறது என்று தான் அர்த்தம். அவரை கண்காணிப்பது மிகவும் முக்கியம்.

ஒரு ஆண்டாக இப்படி பேசி வந்திருக்கிறார் அதுதான் முக்கியம். இது எப்படி நடந்தது என சிந்தித்துப் பார்க்க வேண்டும். எந்தெந்த நாடுகளில் உள்ளவர்களுடன் பேசினார் என்பதை கண்டுபிடிக்க மத்திய அரசின் உதவியைக் கூட நீங்கள் நாடலாம். மீண்டும் இந்த மண்ணில் எவ்வித அசம்பாவிதமும் நடந்துவிடக்கூடாது . நளினி யார் யாருடன் பேசினார் என்பதை கண்டுபிடிக்க வேண்டும் என்றார். (2-4)

# நாட்டில் அபிவிருத்தி ஏற்படுவதற்கு மனித வள மேம்பாடு மிக அவசியம்

## சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி ரவீந்திரன் எடுத்துரைப்பு




(யாழ்ப்பாணம்)

பொருளாதார அபிவிருத்திக்கு மனித வளமே மூல காரணியாகும். இதனாலேயே 'ஒரு தேசத்தின் முக்கிய செல்வம் அதன் மக்களில் தங்கியுள்ளது' என்ற அடம் சிமித்தின் கருத்தை வர்த்தக முகாமைத்துவத் துறையினரும் ஆராய்ச்சியாளர்களும் ஏற்றுக் கொண்டுள்ளனர்.

இவ்வாறு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மனித வள மேம்பாட்டு அலகின் இணைப்பாளரும், சிரேஷ்ட விரிவுரையாளருமான திருமதி ச.ரவீந்திரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மனிதவள மேம்பாட்டு அலகும், வட மாகாண சபையும் இணைந்து மூன்று புதிய கற்கை நெறிகளைக் கடந்த 9 ஆம் திகதி யாழ்.பல்கலைக்கழகக் கேட்போர் கூடத்தில் ஆரம்பித்து வைத்தது.

இந் நிகழ்வில் கலந்து கொண்டு உரை யாற்றும் போதே திருமதி ச.ரவீந்திரன் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

தொழிலாளி ஒருவரின் கல்வி, அனுவபம், திறன் என்பன பொருளாதார அபிவிருத்தியில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன.

மனித மூலதனமே கல்வி, திறன், குணநலம், மனப்பாங்கு என்பவற்றில் உயர் பெறுமானத்தை ஏற்படுத்துகின்றது.

இது ஒரு சமூக முன்னேற்றத்திற்கு மிகவும் அவசியமாகும். இவ் வகையான மனித வள அளவீட்டினை கல்விசார் அறிவியல் மூலமும், கற்கை நெறிகளின் வழங்கல் மூலமும் அளவிட முடியும்.

வேலையின்மை பற்றி நாம் பிரஸ்தாபிக்கும் அதேநேரம், வேலை கொள்வோர், கல்வியும், திறனும், அனுபவமும் உள்ள வேலையாட்களை நாடி நிற்கும் யதார்த்தத்தையும் நாம் உணர வேண்டும்.

தனியாள், நிறுவனம், நாடு என்ற வகுதிகளின் வளர்ச்சிப் படிகளை மையமாகக் கொண்டே இம் மூன்று கற்கை நெறிகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் மனித வளம் காத்திரமான வளர்ச்சியை அடையும் என்றார். (ந)

# கல்விச் சுற்றுலா சென்ற அதிபர்களுக்கு

(யாழ்ப்பாணம்)

கல்வி பரிமாற்று சுற்றுலாவில் பங்கேற்ற யாழ்ப்பாண கல்விவலய அதிபர்களுடனான சந்திப்பு இன்று பிற்பகல் மூன்று மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியில் அமைந்துள்ள ஆசிரியர் வள நிலையத்தில் இடம் பெறும்.

இச் சந்திப்பில் கல்வி சுற்றுலாவில் பங்கேற்ற அதிபர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அறிவித்துள்ளார். (ந)

# கத்திக்குத்துக்கு இலக்கான பெண் பற்றைப் பகுதியிலிருந்து மீட்பு!

## நெல்லியடியில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

இளைஞன் ஒருவரின் கத்திக்குத்துக்கு இலக்காகி படுகாயமடைந்த குடும்பப் பெண் ஒருவர் ஒருநாள் கழித்த நிலையில் பற்றைப் பகுதியிலிருந்து நேற்றுக்காலை மீட்கப்பட்டு யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் நெல்லியடிப்பகுதியில் இடம் பெற்றுள்ளது. நேற்றுமுன்தினம் காலை 10 மணியளவில் பஸ்ஸில் ஏறுவதற்காக பிரஸ்தாப குடும்பப் பெண் சென்று கொண்டிருந்த போது அப்பகுதிக்கு வந்த இளைஞன் ஒருவர் இவரை அழைத்து கதைத்துக்கொண்டு நின்றுள்ளார்.

பின்னர் திடீரென கத்தியை எடுத்து அப் பெண்ணின் கழுத்துப்பகுதியில் குத்திவிட்டு அவர் வைத்திருந்த 15 ஆயிரம் ரூபாயையும் அபகரித்துச் சென்றுள்ளார்.

இச் சம்பவத்தில் கரவெட்டியைச் சேர்ந்த வி.இலங்காதேவி (வயது 37) என்பவரே காயமடைந்தவராவார்.

தனக்கு நேர்ந்த சம்பவம் குறித்து அப் பெண் கூறியதாவது,

பஸ்ஸில் ஏறுவதற்காக ஒழுங்கையில் நின்று கொண்டிருந்தபோது, எம்முடன் முன்னர் தகராறில் ஈடுபட்ட இளைஞர் ஒருவர் என்னை அழைத்துப் பேசிக்கொண்டிருந்தார்.

பின்னர் திடீரென என்னைப் பிடித்து எனது வாயில் துணியை அடைத்து பற்றைக்காட்டுக்குள் இழுத்துச்சென்றார். அங்கு வைத்து தனது தொண்டைப்பகுதியில் கத்தியால் குத்திவிட்டு நான் கொண்டுவந்த 15 ஆயிரம் ரூபாய் பணத்தையும் அபகரித்துக்கொண்டு தப்பிச் சென்று விட்டார்.

சன நடமாட்டமற்ற இப் பகுதியில் நான் இரத்தக் காயங்களுடன் நீர், உணவு ஏதுமில்லாமல் நேற்று (நேற்று முன்தினம்) முழுவதும் அந்தரித்துக்கொண்டிருந்தேன் பின்னர் இன்று (நேற்று) காலை ஈச்சம்பழம் பறிக்க வந்த இளைஞர்கள் எனது நிலையைக் கண்டு இராணுவம் மற்றும் பொலிஸாரிடம் தெரிவித்தனர்.

என்னை மீட்ட பொலிஸாரும் படையினரும் அச்சுவேலி வைத்தியசாலைக்கு கொண்டு சென்றனர். பின்னர் மேலதிக சிகிச்சைக்காக இங்கு அனுமதிக்கப்பட்டுள்ளேன் என அவர் கூறினார். (ச-30)

# பொலிஸாரின் தலையீட்டால் மோதல் சம்பவம் தணிந்தது

உரும்பிராய் பூதவராய ஆலய உற்சவத்தின் போது இரு குழுக்களுக்கிடையில் இடம் பெறவிருந்த மோதல் சம்பவம் பொலிஸாரின் தலையீட்டால் தடுக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இரவு இடம் பெற்ற வேட்டைத்திருவிழாவின் போது இடம் பெற்றதாக கூறப்படும் சம்பவம் ஒன்றை அடுத்து இரு கிராம மக்களுக்கிடையில் மோதல் இடம் பெறக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டதாகவும் எனினும் கோப்பாய் பொலிஸார் மற்றும் ஊரெழு இராணுவத்தின் தலையீட்டால் நேற்று சமரசத்திற்கு வந்ததாகவும் கூறப்பட்டது. (ச)

# இங்கிலாந்து ஹட்ரிக் வெற்றி நியூசிலாந்து அணிக்கு துரதிர்ஷ்டம்

## பாகிஸ்தான் அரையிறுதிக்கு முன்னேறியது

(சென்லூசியா)

பிரேஸ்மனின் சகலதுறை ஆட்டத்தின் மூலம் இங்கிலாந்து அணி 3 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் நியூசிலாந்து அணியை வீழ்த்தியது.

இதன்மூலம் இ பிரிவிலிருந்து இங்கிலாந்து, பாகிஸ்தான் அணிகள் அரையிறுதிக்கு முன்னேறின.

மேற்கிந்தியத்தீவுகளில் நடக்கும் ஐ.சி.சி. மூன்றாவது இருபது-20 உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரில் நேற்று முன்தினம் சென்லூசியாவில் நடைபெற்ற சுப்பர்-8 சுற்றின் 10ஆவது போட்டியில் இ பிரிவிலுள்ள இங்கிலாந்து, நியூசிலாந்து அணிகள் மோதின.

இதில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணிக்கு ஆரம்பத்தில் ரைடர் 09 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து ஏமாற்றினர்.

எனினும் இரண்டாவது விக்கெட்டுக்காக இணைந்த பிரண்டன் மக்குலம், றெட்மோண்ட் ஜோடி நிதானமாக ஆடியது.

இதில் றெட் மோண்ட் 15 பந்துகளில் (ஒரு சிக்ஸர் உட்பட) 16 ஓட்டங்களுடனும் பிரண்டன் மக்குலம் 32 பந்துகளில் (4 பவுண்டரிகள் உட்பட) 33 ஓட்டங்களையும் எடுத்து ஆட்டமிழக்க நியூசிலாந்து அணி 10.3 ஓவர்களில் 65 ஓட்டங்களை எடுத்து மூன்றாவது விக்கெட்டையிழந்தது.

அடுத்து நான்காவது விக்கெட்டுக்காக இணைந்த றெய்லர்-ஸ்ரைரிஸ் ஜோடி அதிரடியாகத் துடுப்பெடுத்தாடி ஆறுதலளித்தது.

இந்த ஜோடி நான்காவது விக்கெட்டுக்காக 6.5 ஓவர்களில் 62 ஓட்டங்களைச் சேர்த்த போது ஸ்கொட் ஸ்ரைரிஸ் 19 பந்துகளில் (3 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் உட்பட) 31 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்துவந்த ஹோப்கிங்ஸ் ஒரு ஓட்டத்துடன் ஆட்டமிழந்து வெளியேறினார். தொடர்ந்து நாதன் மக்குலம் களமிறங்க மறுமுனையில் ரோஸ் றெய்லர் 33 பந்துகளில் (2 சிக்ஸர்கள் உட்பட) 44 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

இந் நிலையில் நியூசிலாந்து அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களையிழந்து 149 ஓட்டங்களை எடுத்தது.

இதில் நாதன் மக்குலம் 03, அணித் தலைவர் விக்டோரி 04 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் எடுத்தனர்.

பந்துவீச்சில் பிரோட், சுவான் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் பிரேஸ்மன், சயிட் பொத்தம் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் சாய்த்தனர்.

பதிலுக்கு 20 ஓவர்களில் 150 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணிக்கு கீஸ்வேற்றர்-லூம்ப் ஜோடி அதிரடி ஆரம்பத்தை வழங்கினர்.

இதில் கீஸ்வேற்றர் 12 பந்துகளில் (ஒரு பவுண்டரி, ஒரு சிக்ஸர் உட்பட) 15 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்து பொப்ரா களமிறங்க மறுமுனையில் லூம்ப் அதிரடியைத் தொடர்ந்தார். எனினும் பொப்ரா 10 பந்துகளில் (ஒரு பவுண்டரி உட்பட) 09 ஓட்டங்களுடனும் லூம்ப் 21 பந்துகளில் (4 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் உட்பட) 32 ஓட்டங்களையும் எடுத்து ஆட்டமிழந்தனர்.

அடுத்து வந்த அணித்தலைவர் கொலின் வூட் 03 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து சொதப்பினார்.

எனினும் 5ஆவது விக்கெட்டுக்காக இணைந்த மோர்கன், ரைட் ஜோடி அதிரடியான இணைப்பாட்டத்தை வழங்கி அணியை மீட்டனர். இதில் ரைட் 17 பந்துகளில் (3 பவுண்டரிகள் உட்பட) 24 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

எனினும் மோர்கனுடன் இணைந்த பிரேஸ்மன் அதிரடி இணைப்பாட்டத்தை வழங்கி இங்கிலாந்து அணியை வெற்றிக்கு அழைத்துச் சென்றனர்.

இதில் மோர்கன் 34 பந்துகளில் (4 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் உட்பட) 40 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழக்க அடுத்துவந்த யார்டி பூச்சியத்துடன் வெளியேறினார்.

எனினும் பிரேஸ்மனின் நம்பிக்கையான ஆட்டத்தின் மூலம் இங்கிலாந்து அணி 19.1 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களையிழந்து 153 ஓட்டங்களைக் குவித்து 3 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

இதில் பிரேஸ்மன் 11 பந்துகளில் (3 பவுண்டரிகள் உட்பட) 23 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் எடுத்தார்.

பந்துவீச்சில் பொண்ட், ஸ்ரைரிஸ் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் நாதன் மக்குலம், மில்ஸ், அணித்தலைவர் டானியல் விக்டோரி ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இவ் வெற்றியின் மூலம் இ பிரிவிலுள்ள இங்கிலாந்து அணி சுப்பர்-8 சுற்றில் தான் விளையாடிய மூன்றாவது போட்டியிலும் வெற்றிபெற்று 6 புள்ளிகளுடன் முதலாவது அணியாக அரையிறுதிக்கு முன்னேறியது.

இப் போட்டியில் தோல்வியடைந்த நியூசிலாந்து அணி சுப்பர்-8 சுற்றில் இரண்டாவது தோல்வியைச் சந்தித்தது.

இதேவேளை இ பிரிவிலுள்ள பாகிஸ்தான், நியூசிலாந்து, தென்னாபிரிக்கா ஆகிய மூன்று அணிகளும் சுப்பர்-8 சுற்றில் தலா ஒரு போட்டியில் வெற்றிபெற்று 2 புள்ளிகளைப் பெற்றுள்ள போதும் ஓட்டவிகித சரா சரியில் சாதகநிலையின் அடிப்படையில் பாகிஸ்தான் இரண்டாவது அணியாக அரையிறுதிக்கு முன்னேறியது.

அட்ஷய திருதியை முன்னிட்டு விசேட தங்க விற்பனை
ஆசைப்பிள்ளை அன் சன் நகைமாடம்
இல.10, பஸ் நிலையம், சங்கானை.
(C-232)

# ஆலோசனைக் குழுவை...

என்று நியூயோர்க்கில் ஐ.நாவைத் தளமாகக் கொண்ட இன்னர் சிற்றிப் பிறஸ் தெரிவித் துள்ளது.

இது தொடர்பாக கடந்த ஞாயிற்றுக்கிழமை இன்னர் சிற்றிப் பிறஸ் தெரிவித்திருப்பதா வது,

பொறிமுறை தொடர்பாக பிரசுரிக்குமாறு கொழும்புக்குத் தான் ஆலோசனை தெரிவித் ததாக ஐ.நாவுக்கான இலங்கையின் தூதுவர் பாலித ஹோகன்ன இன்னர் சிற்றிப் பிறஸ் ஸுக்குக் கூறியுள்ளார்.

உண்மையில் குழுவொன்றைப் பான் கீ மூன் ஒருபோதும் நியமிக்க மாட்டார் என்று அவர் எதிர்வு கூறியுள்ளார். மே 7 இல் குழு தொடர்பாகப் பான் கீ மூனின் பேச்சாளரிடம் இன்னர் சிற்றிப் பிறஸ் கேட்டது.

அத்துடன் பான் கீ மூனின் உயர் மட்ட மனிதாபிமான அதிகாரி ஜோன் ஹோம்சிடம் அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பா டுகள் தொடர்பாகக் கேட்கப்பட்டது. ஐ.நாவின் மனிதாபிமான செயற்பாட்டு பொதுத் திட்டத் தை நிராகரித்த விடயமும் இதில் உள்ளடக்கப் பட்டிருந்தது.

வவுனியாவில் அரச சார்பற்ற தொண்டர் நிறுவனங்கள் உதவிகளை வழங்குவதற்குத் தடையாக இது உள்ளது. அரசாங்கத்துடனான உறவுகள் மிகக் கடினமாக இருப்பதாக கவன மான முறையில் பல தடவைகள் ஹோம்ஸ் பதிலளித்திருந்தார்.

அதனைச் சிறப்பானதாக இப்போதும் முயற்சிப்பதாகத் தோன்றுகின்றது. செஞ்சிலு வைச் சங்கத்தை நாட்டின் பல பகுதிகளிலி ருந்தும் அரசாங்கம் வெளியேற்றி விட்டதாக அவர் குறிப்பிட்டிருந்தார்.

அவர்கள் திரும்பிச் செல்ல முடியும் என்று எதிர்பார்ப்பதாக அவர் கூறியுள்ளார். புனர் வாழ்வு முகாம்களில் 11 ஆயிரத்திலிருந்து 12 ஆயிரம் பேர் வரை இருப்பதாகக் ஹோம்ஸ் கணிப்பிட்டுள்ளார்.

இடம்பெயர்ந்தோர் முகாம்களில் 80 ஆயிரம் பேர் இருப்பதாகவும் 2 இலட்சத்து 20 ஆயிரம் பேர் திரும்பிச் சென்று விட்டதா கவும் அவர் கூறியுள்ளார்.

அவர்களில் சிலர் எவ்வாறு வாக்களிக்க முடியும் என்பது பற்றி அவர் குறிப்பிட்டிருக்க வில்லை. (ச-5)

அட்ஷய திருதியை முன்னிட்டு அத்தினத்தில் தரமான தங்க நகையை கொள்வனவு செய்து வாழ்வை ஒளிமயமாக்க நாடவேண்டிய இடம்
ஆசைப்பிள்ளை அன் சன் நகைமாடம்
இல. 10, பஸ் நிலையம், சங்கானை.
(C-232)

# இந்தியாவின் நிபந்தனை...

விரும்பவில்லை. தடை செய்யப்பட்ட ஒரு இயக்கத்தைச் சேர்ந்தவர்களைச் சந்திக்கக் கூடாது என்பது இந்தியாவின் பாதுகாப்புக் காரணங்களுக்காக இருக்கலாம்.

அது புரிந்து கொள்ளக் கூடியதே. ஆனால் குடும்ப நண்பர்கள் மற்றும் அரசியல் பிரமு கர்கள் சந்திக்கக் கூடாது என்ற நிபந்தனைக ளை அவரது குடும்பத்தினர் எப்படிப் பார்க் கின்றார்கள் என்பதையும் கவனிக்க வேண்டும்.

பார்வதி அம்மாளை இலங்கையில் தற் போது தனது கண்காணிப்பில் வைத்து மருத் துவச் சிகிச்சை செய்து வருவதாகவும் ஒரு வார காலத்தில் அவரை யாழ்.குடாநாட்டில் அவரின் சொந்த ஊருக்குக் கொண்டு சென்று சிகிச்சை தொடர முடிவு செய்திருப்பதாகவும் சிவாஜிலிங்கம் கூறினார்.

பார்வதி அம்மாளின் மகள் கனடாவிலும் மற்றொரு மகன் டென்மார்க்கிலும் இருக்கும் நிலையில் அந்த நாடுகளுக்கு அவரைக் கொண்டு சென்று மருத்துவ சிகிச்சையளிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றனவா என்று கேட்டதற்குப் பதில் அளித்த சிவாஜி லிங்கம்,

கனடாவுக்கு அவரைக் கொண்டு சென்று மருத்துவ சிகிச்சை பெற விசா கோரப்பட்டிருக் கின்றது என்றார். இதேவேளை இந்த விடயத் தை தி.மு.க. ஒரு மனித நேயப் பிரச்சினை யாகப் பார்க்கின்றது என அக் கட்சியின் நாடா ளுமன்ற உறுப்பினர் டி.கே.எஸ். இளங் கோவன் தமிழோசையிடம் தெரிவித்தார்.

இந்திய அரசு பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு சில நிபந்தனைகளை விதித்திருக் கலாம் என்றும் நிபந்தனைகளை நீக்குமாறு கோரிக்கை வந்தால் அதை தி.மு.க. தலைவர் பரிசீலிப்பார் என்றும் அவர் தெரிவித்தார்.(ச-5,9)

# ஐ.தே.க...

தொடர்பில் ஏற்பட்ட முறுகல் நிலையினை யடுத்தே இவ்வாறான ஒரு முடிபி னை எடுக்க வேண்டி ஏற்பட்டதாக அவர் கூறியுள்ளார்.

நான் ஆளும் .கட்சியில் இணைந்து கொள்வது பதவிகளைப் பெறுவதற்கு என்று சிலர் கூறுகின்றனர். இதில் எவ்விதமான உண்மையும் கிடையாது. நான் நாடாளுமன்ற உறுப்பினர் பதவி மூலம் மக்களுக்குச் சேவை செய்யவே விரும்புகின்றேன் என்று கூறினார். (ச-9)

# வடக்கி...

இடம்பெயர்ந்து வாழும் சிங்கள மக்களுக் கும் அமைச்சர் மில்ரோய் பெர்னாண்டோவுக் குமிடையில் விசேட சந்திப்பொன்று நடை பெற்ற போதே அவர் இவ் உறுதிமொழியை வழங்கியுள்ளார். (ச-5)

# மாநகர...

வுக்கு வந்தது.

இதேவேளை இந்த பகிஷ்கரிப்புப் போரா ட்டத்தையடுத்து யாழ்.நகரப் பகுதியில் மா நகர சபைக்குச் சொந்தமான நவீன சந்தை கடைத் தொகுதிகள் மூடப்பட்டிருந்தன.

இதனால் கடையுரிமையாளர்கள் நேற் றுக் காலை 11 மணி வரை வீதிகளில் நின் றுள்ளனர். நண்பகலுக்குப் பின்னர் வியா பார நடவடிக்கைக்காகக் கடைகள் திறந்து விடப்பட்டிருந்தன.

இதேவேளை பகிஷ்கரிப்புப் போராட்டத் தை முன்னிட்டு மாநகர சபையைச் சுற்றிப் பொலிஸாரும் இராணுவத்தினரும் குவிக்கப் பட்டு எவ்வித அசம்பாவிதங்களும் இடம் பெறாமல் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந் தது. (ச-7,30)

# பொன்சேகா...

புலனாய்வுப் பிரிவினரின் கோரிக்கைக்கு அமையவே சரத் பொன்சேகா இன்று நீதி மன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளார் என தெரி விக்கப்பட்டது. (ச-5)

2012-A/L
தொடர்பாடலும் ஊடகக்கல்வியும்
(1380)
திரு. K.S.இளங்கோ
எங்கே? எப்போது? என்பதனை அறிய
தொடர்பு கொள்க: 0771240078

# மாகாணங்களுக்கு அதிகாரம்...

அங்கு அவர் மேலும் கூறியதாவது, இலங்கையில் விடுதலைப்புலிகள் அமைப்பு தோற்கடிக்கப்பட்டதன் பின்னர் அங்கு ஜன நாயகம் நிலைநிறுத்தப்பட்டுள்ளது.

தற்போது இலங்கை மக்கள் ஒன்றுபட்டு வாழ்ந்து வரும் நிலையில் உள்ளார்கள். இது அவர்களே தேர்ந்தெடுத்திருக்கும் வழிமுறை யாகும்.

இந்த நிலையில் சர்வதேச சமூகம் இலங் கை மக்கள் மீது நல்லெண்ணம் கொண்டி ருந்தாலும் எவ்வாறு ஒன்றுபட்டு வாழ்வது என்பதை இலங்கை மக்கள் தீர்மானிக்க சர்வ தேச சமூகம் விட வேண்டும்.

மாகாணங்களுக்குக் கூடுதலாக அதிகா ரங்கள் வழங்கக் கூடிய 13-வது சட்டத் திருத் தம் அப்போது கொண்டு வரப்பட்டது. இந்த சட்டத் திருத்தத்தின் மூலம் மாகாணங்களுக்கு அதிகாரம் அளிப்பது அவசியமானது என்று நான் கருதுகின்றேன்.

இடம்பெயர்ந்த முகாம்களில் தங்க வைக் கப்பட்டுள்ள மக்களை மிக விரைவாகத் தமது சொந்த இடங்களில் மீள்குடியமர்த்த இலங் கை நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஆகையால் இவர்களை விரைவில் மீள் குடியமர்த்துவது இலங்கை அரசுக்கு சவா லாகவே காணப்படுகின்றது.

பொதுமக்கள் தமது சொந்த இடங்களில் மீளக்குடியமரும் போது அவர்களுக்கு அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்பட வேண்டும்.

அப்போதுதான் அவர்களின் வாழ்வாதா ரம் கட்டியெழுப்பப்படும் என்றும் கூறினார்.

## இந்தியாவின் ஆட்சி இந்தியாவுக்கே பொருந்தும்

இம் மாநாட்டில் கலந்து கொண்டு உரை யாற்றிய இந்தியாவுக்கான இலங்கைத் தூது வர் பிரசாத் காரியவசம், இந்தியாவில் உள்ள தைப் போன்று ஆட்சி முறையை இலங்கை யில் அறிமுகப்படுத்துவது சாத்தியமான விட யமல்ல.

இந்தியாவின் ஆட்சி முறை இந்தியாவுக் குத்தான் பொருத்தமானது. ஏனெனில் இந் தியா பல தேசிய இனங்கள் வாழும் நாடாகும். ஆனால் இந்திய ஆட்சி முறையில் உள்ள சில விடயங்களைத் தெரிந்து கொண்டு இலங்கைக்கு ஆராய்ந்து பார்க்கலாம். ஆனால் அதனை முற்றிலுமாக இலங்கை மீது திணிக்க முடியாது. இலங்கைக்குப் பொருத்தமான வகையில் அதிகாரங்களைப் பகிர்ந்து கொள்ளும் வகையில் புதிய முறை யை உருவாக்கிக் கொள்ள வேண்டும்.

அவ்வாறு உருவாக்கும் முறை தமி[illegible] சிங்களவர், முஸ்லிம் என மூவின மக்களுக் கும் சம உரிமையை அளிக்கும் வகையில் அமைய வேண்டும் என்று கூறினார்.

மனித உரிமைகள் என்பது முக்கியமான விடயம் தான். அதனை எமது மக்களுக்கு உறுதி செய்ய விரும்புகின்றோம். யுத்த காலத் தின் போது மனித உரிமை மீறல்கள் இடம் பெறுவது தவிர்க்க முடியாதது.

உதாரணமாக ஆப்கானிஸ்தான் உட்பட்ட போர் நடந்த நாடுகளில் அவதானிக்கலாம். அதற்காக நாம் இதனை ஆதரிக்கவில்லை. வெளிநாடுகளில் வாழும் தமிழர்கள் புலிக ளுக்கு ஆதரவ ளித்து வந்தார்கள். வரும் காலத்தில் எமக்கு ஆதரவ ளிக்க வேண்டும் என்று விரும்புகி ன்றோம். அவர்க ளின் நாடு கடந்த தமிழீழ அரசு அமை க்கும் முயற்சி எதிர் மறையாகத்தான் முடியும் என்று கூறினார்.

13-வது அரசி யல் சட்டத்தில் பெரும்பாலான விடயங்கள் அமுல் படுத்தப்பட்ட நிலை யில் பொலிஸ், நிலம் என்பவற்றின் அதிகாரங்கள் தொடர்பாகத் தொ டர்ந்து பேசப்படு கின்றன என்றும் கூறினார். (ச-5,9)

ஏல விற்பனை
தேசிய சேமிப்பு வங்கியில் மீட்கப்படாத அடகு நகைகளின் ஏல விற்பனை

தேசிய சேமிப்பு வங்கியில் பின்வரும் கிளைகளில் 31.03.2009 வரை அடகு வைத்து 31.03.2010 வரைக்கும் மீட்கப்படாத அல்லது வட்டி செலுத்தப்படாத அடகு நகைகள் பகிரங்க ஏல விற்பனை மூலம் விற்பனை செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஏல விற்பனைத் திகதி:
05.06.2010 (சனிக்கிழமை)
காலை 8.30 மணி

| கிளையின் பெயர் | ஏல விற்பனை நடைபெறும் இடம் |
|---|---|
| யாழ்ப்பாணம்<br>சுன்னாகம்<br>மானிப்பாய்<br>திருநெல்வேலி<br>அஞ்சல் வங்கி யாழ்ப்பாணம் | யாழ்ப்பாணக் கிளை,<br>இல.496,<br>ஆஸ்பத்திரி வீதி,<br>யாழ்ப்பாணம்.<br>T.P.:021 222 2696 |

ஏல விற்பனை இரத்துச் செய்யும்/ஒத்திவைக்கும் உரிமையை வங்கி கொண்டுள்ளது.

(அ-246)
உதவிப் பொது முகாமையாளர் (கடன்),
தேசிய சேமிப்பு வங்கி,
தலைமை அலுவலகம்,
கொழும்பு-03
NSB

தம்பி நீயும் அறிவிப்பாளர் தான்!
சர்வதேச இணைய வானொலி வாரணம் FM இன்
ஒலிபரப்பாளர் இதழியல் சான்றிதழ் பயிற்சிப்பட்டறை
யாழ்ப்பாணத்தில் மூன்றாவது தொகுதி ஆரம்பம்!
தமிழில் சிறந்த உச்சரிப்பு, பேச்சாற்றல், இசைத்துறை, எழுதுதிறன், நடிப்பாற்றல், இதர கலைத்துறை ஆர்வலராயின்
வாரணம் FM இன் ஒலிபரப்பாளர், இதழியல் டிப்ளோமா சான்றிதழ் பயிற்சிப் பட்டறையில் இணைவதற்கு..
1. க.பொ.த. சாதாரண தர பரீட்சையில் தமிழ் திறமைச்சித்தி உட்பட உயர்தரம், பல்கலைக்கழக அனுமதிபெறத்தக்க பெறுபேறு.
2. கணினித்துறை, கலைத்துறையில் ஈடுபட்டமைக்கான சான்றிதழ்கள்.
இவற்றுடன் கூடிய சுயவிபரக்கோவையை 22.05.2010 க்கு முன் எமது யாழ். அலுவலக முகவரிக்கு அனுப்புங்கள்.
:: இப்பயிற்சி பட்டறையில் இணைவோருக்கு ::
* சர்வதேச புகழ்பூத்த மூத்த ஒலிபரப்பாளர்கள் சிரேஷ்ட ஊடகமுன்னோடிகளால் விரிவுரைகள்.
* ஊடகங்களில் உள்ளகப்பயிற்சி, நேரடி கலையகப்பயிற்சி, வாரணம் எவ்.எம்.இல் பகுதிநேர ஒலிபரப்பாளர், களப்பயிற்சியும் கல்விச் சுற்றுலாவும்.
* இலங்கையின் பிரபல வானொலிகளின் நிகழ்ச்சிகளில் பங்குபற்றுவதற்கான வாய்ப்பு.
* பூர்த்திசெய்யும் தகுதியானோருக்கு பொருத்தமான வேலைவாய்ப்புக்கான முயற்சிகள் நிறுவனத்தால் மேற்கொள்ளப்படும்.
(1382)
இதழியல் டிப்ளோமா பயிற்சி நெறியை தபால் மூலம் கற்பதாயின் விண்ணப்பத்தின் இடது மேல் மூலையில் "தபால் மூல இதழியல்" என குறிப்பிடவும்.
வாரணம் FM
www.varanamfm.com
No.58, Joseph Dias Mawatha, Modara, Colombo-15. T.P No: 2521281 E-mail: varanamfm@yahoo.com
Jaffna Office: Managing Director, No.20, Kannathiddy Road, Jaffna.

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில்12.05.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.